



# தமிழரசு

ஜூலை, 1-15, 1999 ரூ.5









# நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது. அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்


மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.


Mudra:TNSACS:6259:98



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2030
ஆனி
ஜூலை 1–15, 1999
மலர் : 31
இதழ் : 1
விலை ரூ. 5

## இந்த இதழில்...

★ ஒன்று படுவோம்! வெற்றி பெறுவோம்!! ............ 2
★ தமிழகத் திட்டங்கள்: பிரதமரிடம் முதல்வர் வலியுறுத்தல் ........ 6
★ பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் ........ 8
★ நரிப்பையூர் - கடல்நீரை நன்னீராக்கும் திட்டம் ........ 9
★ கல்வி எழுச்சி நாள் விழா ........ 11
★ சிறுபான்மை மக்களின் துன்ப துயரங்களில் பங்கு பெறுபவன் நான் ........ 16
★ தெக்கலூர் பெரியார் நினைவு சமத்துவபுரம் ....22
★ திருமண உதவித் திட்டம் ........ 26
★ விழுப்புரம் மாவட்ட சமத்துவபுரங்கள் ........ 27
★ அரசு மருத்துவமனைகளில் முழுமையான உடல் பரிசோதனை ........ 31
★ வகுப்பு நல்லிணக்கத்தை வலுப்படுத்த ........ 32
★ கால்நடை வளம் ........ 36
★ பயிற்றுமொழியாக தமிழ் ........ 40
★ வள்ளலார் வாழ்ந்த வடலூர் அழகான நகரமாக மாற்றப்படும் ........ 41

## திருக்குறள்

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு.

ஏதையும் தாங்கும் இதயத்தைப் பெற்றிருப்பதும், எந்த உயிருக்கும் தீங்கு செய்யாமல் இருப்பதும்தான் "தவம்" என்று கூறப்படும்.

– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...




# ஒன்றுபடுவோம்! வெற்றி பெறுவோம்!!

**முதலமைச்சர் கலைஞர் உரை**

கார்கில் பிரச்சினை தொடர்பாக விவாதிப்பதற்கு முதலமைச்சர்களின் மாநாட்டை கூட்டியிருப்பதற்காக மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆற்றல் வாய்ந்த நமது வீரர்கள், தமது உயிரைத் துச்சமாக மதித்து, இக்கட்டான நிலப்பகுதியில் கடும் போர் புரிகின்றனர். துணிவு நிறைந்த நமது இராணுவ வீரர்களுக்கு, நமது நாட்டின் இதர பகுதியினருடன் சேர்ந்து தமிழ்நாடு வணக்கத்தைச் செலுத்துகிறது. புலிக்குன்றை (Tiger Hill) மீண்டும் கைப்பற்றிய நமது இராணுவத்தினைப் பாராட்டுகிறேன். நமது இராணுவம் எஞ்சிய பகுதிகளைக் கைப்பற்றுவதிலும் உறுதியாக வெற்றிபெறும்.

நமது நாட்டினைப் பாதுகாக்கும் புனிதப் பணியில் ஈடுபட்டு கார்கில் பகுதியில் தமது இன்னுயிரைத் தியாகம் செய்துள்ள நம்முடைய இராணுவ வீரர்கள் குறித்தும், அதிகாரிகள் குறித்தும் உள்ளபடியே நாம் பெருமை கொள்ளலாம்.

இவ்வேளையில், இந்த மாநாட்டின் மூலம், இரண்டு செய்திகளை நாம் தெரிவித்திட வேண்டும். பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள ஆற்றல் மறவர்களுக்கு நம்முடைய ஒட்டுமொத்த ஆதரவை அளித்திட உறுதியேற்பதுடன், அவர்களை நாம் வியந்து பாராட்டுவதையும், அவர்களுக்கு நாம் அனைவரும் கடமைப்பட்டுள்ளோம் என்பதைத் தெரிவிப்பதையும் வெளிப்படுத்திட வேண்டும்.





இரண்டாவதாக, நமது ஜனநாயகத்தின் அடிப்படைத் தத்துவத்திற்கும், மதச்சார்பின்மைக்கும் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலுக்கு எதிராக இந்த நாடு ஒரு பாறை போல உறுதியுடன் ஒன்றுபட்டுள்ளது என்பதை நமது எதிரிகளுக்கு நாம் உணர்த்திடவும் வேண்டும்.

தேர்தலுக்கு நாம் நம்மைத் தயார்ப்படுத்தி வருகின்ற போதிலும், சிறு அரசியல் மாச்சரியங்களை ஒதுக்கி வைத்துவிட்டு நாட்டின் பாதுகாப்பிற்கு ஒத்துழைப்பு அளிப்பதில் நாம் உறுதியேற்றிட வேண்டும். பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களின் உறுதியை – கட்டுப்பாட்டமைதியைப் பாதிக்கும் வண்ணம் எந்த வகைப் பேச்சிலும், செயலிலும் ஈடுபடுதல் கூடாது.

கார்கில் பிரச்சினைத் தொடர்பாக விவாதிப்பதற்கு ராஜ்ய சபாவின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்ட வேண்டுமென ஒரு கோரிக்கை வந்துள்ளது. அனைத்து மாநில முதல்வர்களுடனும், அங்கீகாரம் பெற்றுள்ள அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுடனும் விவாதிப்பது உகந்தது, மிகவும் பொருத்தமானது என்பது என்னுடைய ஆழ்ந்த கருத்தாகும்.

நம்முடைய பகுதியில் இருந்து ஊடுருவல் காரர்கள் வெளியேறும்வரை பாகிஸ்தானுடன் மேற்கொண்டு பேச்சுவார்த்தை நடத்தப்பட மாட்டாது என அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நமது பிரதமர் அவர்கள் உறுதியுடன் தெரிவித்திருக்கிறார். கார்கில் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் மூன்றாவது நாடு சமாதானத்தில் ஈடுபடுவதை இந்தியா ஏற்காது என்பதையும் அதில் வெளிப்படுத்தியுள்ளார். பிரதமரின் இந்த நிலையினை வரவேற்பதுடன், இந்த மாநாடு அதனை வலியுறுத்திடவும் வேண்டும்.

பாகிஸ்தான், வரலாற்றில் இருந்து எந்த ஒரு படிப்பினையையும் பெறாமல் இருப்பது துரதிஷ்டமானது (Unfortunate). பாகிஸ்தான் தாஷ்கண்ட் பிரகடனத்தையும் சிம்லா ஒப்பந்தத்தையும் மதிக்கத் தவறிவிட்டது.

கார்கில் பிரச்சினையில் இந்தியா மேற்கொண்டுள்ள கொள்கை ரீதியான முடிவுகளுக்கு உலக அளவில் ஆதரவு கிடைத்துள்ளது நமக்கு மகிழ்ச்சியளிக்கிறது. அண்மையில் நடைபெற்ற ஜி.8 நாடுகளின் மாநாடும், பிற நாடுகளின் தலைவர்களும் இந்தியாவின் நிலைக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

நமது பிரதமரின் சாதுரியமான நடவடிக்கைகளாலும், ராஜதந்திரத்தாலும் வரலாற்றில் முதன்முதலாக பாகிஸ்தான் இப்போது அனைத்து நாடுகளாலும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக பிரதமருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பாகிஸ்தானுடனான நமது பிரச்சினை, பாகிஸ்தான் தீவிரவாதத்திற்கு ஆதரவு அளிப்பதை நிறுத்தும் வரை தணியாது. ஆகையால், தீவிரவாதிகளால் நமது நாட்டிற்கு ஏற்பட்டுள்ள ஆபத்து வெகுநாளைக்கு நீடிக்கக் கூடியதாகும். இத்தருணத்தில், நாம் ஒற்றுமையுடனும், விழிப்புடனும், செயல்பட வன்முறையையும் உண்டு பண்ண முயற்சிக்கக் கூடும். எனவே, மத்திய அரசின் அமைப்புகளும், அவை போலவே மாநில அரசுகளும் தங்களுக்கிடையே கிடைக்கும் புலனாய்வு நுண்ணறிவு விவரங்களை அவ்வப்போது பகிர்ந்துகொள்ள வேண்டும். இவ்வகையில், மத்திய–மாநில அரசுகள் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டியது மிகவும் அவசியமாகும்.

நாட்டிற்காக தமது இன்னுயிரை ஈந்த இராணுவ வீரர்களின் குடும்பத்தினரின் துக்கங்களில் நாமும் பங்கு கொள்கிறோம். இக்குடும்பங்களின் தேவைகளை அறிந்து அவற்றை நிறைவு செய்வது நமது தலையாய



வேண்டியது அவசியமாகும். மேலும், நமது இராணுவத்தினை நவீனமயமாக்குவதும், தேசிய பாதுகாப்பு அமைப்புகளை வலுப்படுத்துவதும், இன்றியமையாததாகும். இவ்வகையில், நாம் மேற்கொள்ளும் முயற்சிகள் நமது பொருளாதார முன்னேற்றத்திற்கு எவ்வகையிலும் இடையூறுகள் விளைவிக்காத வகையில் அமைய வேண்டும்.

இத்தகைய தருணத்தில் நமது உள்நாட்டு பாதுகாப்பும் மிக முக்கியத்துவம் பெறுகிறது. நாட்டின் எல்லைக்கோட்டின் அருகே தீவிரவாதத்தினால் ஆபத்தை ஏற்படுத்தியுள்ள அந்நிய சக்திகள், உள்நாட்டிலும் கலவரத்தையும்

கடமையாகும். இவ்வகையில் தமிழக அரசு இக்குடும்பங்களின் துயர் தணிப்புப் பணியில் பின்வரும் நிவாரண உதவிகளை அளித்துள்ளது.

★ போரில் உயிர்நீத்த இராணுவ வீரரின் குடும்பத்திற்கு நிதியுதவியாக ரூ.5 இலட்சம்.

★ உயிர்நீத்த வீரரின் வாரிசுக்கு ரூ.7 இலட்சம் முதல் ரூ.11 இலட்சம் வரை மதிப்புள்ள உயர் வருவாய் பிரிவு அடுக்கு மாடி குடியிருப்பு.

★ குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலைவாய்ப்பு.

★ பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி.

**அகில இந்தியாவிலேயே முதல் முறையாக**
**கார்கில் போர் நிதிக்காக,**
**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்,**
**தமிழ்நாட்டின் சார்பில் முதல் தவணையாக**
**ரூ.15 கோடிக்கான காசோலையினை**
**7-7-1999 அன்று மாண்புமிகு இந்தியப் பிரதமர்**
**திரு.வாஜ்பாய் அவர்களிடம் வழங்கும் காட்சி**
**இவ்விதழின் முதல் அட்டையில்**
**இடம்பெற்றுள்ளது.**

★ பொறியியல்/மருத்துவக் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு.

இவற்றுடன், தமிழ்நாடு அரசு கார்கில் நிவாரண நிதி ஒன்றினை நிறுவியுள்ளது என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இந்நிதிக்கு நன்கொடை அளிப்பதில், தமிழகத்தில் பல்வேறு தரப்பு மக்களும் மகத்தான முறையில் ஆதரவளித்து வருகின்றனர். இந்த மிகப்பெரிய நாட்டில் வாழும் 90 கோடிக்கும் மேற்பட்ட மக்களனைவரும் தங்களது தனித்தன்மைகளை மறந்து, ஒன்றுபட்டு எழுந்துள்ளனர். நம்முடைய நாட்டைப் பாதுகாப்பதில் மத்திய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கு தமிழக மக்கள் ஒன்றுபட்டு தங்களது ஆதரவை அளித்து வருகின்றனர். தேசியப் பாதுகாப்பு நிதிக்கு 15 கோடி ரூபாய்க்கான காசோலையை நமது பிரதமர் அவர்களிடம் தமிழகத்தின் சார்பாக வழங்கியுள்ளேன். மாநில அரசுகளால் நிறுவப்பட்டுள்ள கார்கில் நிவாரண நிதிக்கு வழங்கப்படும் நன்கொடைகளுக்கு வருமான வரிச் சட்டம் 80(G)–ன் கீழ் 100 விழுக்காடு வருமான வரிவிலக்கு அளிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் பிரச்சினையில் எந்த வகையான இன்னல்கள் நேர்ந்த போதிலும், நாம் வெற்றி பெற்றாக வேண்டும். கார்கில் எல்லைப் பிரச்சினை நமது தேசிய கடமைக்கும், நமது ஜனநாயகத்திற்கும், மதச் சார்பின்மைக்கும் ஏற்பட்டுள்ள சவாலாகும்.

ஒன்றுபடுவோம்! வெற்றி பெறுவோம்!!

நன்றி! வணக்கம்!

*– கார்கில் பிரச்சினை குறித்து புதுடெல்லியில் 7–7–1999 அன்று நடைபெற்ற முதலமைச்சர்களின் மாநாட்டில் முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரை.*

# தமிழகத் திட்டங்கள்

# பிரதமர் வாஜ்பாயிடம் முதலமைச்சர் கலைஞர் வலியுறுத்தல்

புதுடெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்ற முதலமைச்சர் கலைஞர் 7.7.99 அன்று காலையில் பிரதமர் வாஜ்பாய் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தார். அப்போது மத்திய அரசிடம் நிலுவையில் உள்ள பின்வரும் திட்டங்களை உடனடியாக நிறைவேற்றிட அனுமதிகள் வழங்குமாறு பிரதமர் அவர்களை முதலமைச்சர் கலைஞர் கேட்டுக்கொண்டார்.

***பழுப்புநிலக்கரிக்கு ராயல்டியை உயர்த்தி வழங்கிட வலியுறுத்தல்***

பழுப்பு நிலக்கரிக்கும், நிலக்கரிக்கும் ராயல்டியாக ஒரு மெட்ரிக் டன்னுக்கு ரூ.2.50 என மத்திய அரசு 21.7.1990இல் நிர்ணயம் செய்தது. அதன்பின் நிலக்கரிக்கு மட்டும் /மெட்ரிக் டன்னுக்கு ரூ.25 என உயர்த்தி 1.8.91 அன்றுஆணையிட்டது. ஆனால், பழுப்பு நிலக்கரிக்கான ராயல்டி உயர்த்தப்படவில்லை. பழுப்பு நிலக்கரிக்கு ராயல்டி உயர்த்தப்படாமல் டன்னுக்கு ரூ.2.50 என்ற நிலையிலேயே இருக்க, நிலக்கரிக்கான ராயல்டி டன்னுக்கு ரூ.50 ஆக 11.10.94 அன்று மீண்டும் உயர்த்தப்பட்டது. நிலக்கரிக்கு வழங்கியது போலவே, பழுப்பு நிலக்கரிக்கும் ராயல்டியை உயர்த்தி வழங்க வேண்டுமென்று முதலமைச்சர் வலியுறுத்தினார்.

***பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசியின் அளவை உயர்த்த கோரிக்கை***

தமிழகத்திற்கு மாதந்தோறும் மத்திய தொகுப்பில் இருந்து பொது விநியோகத் திட்டத்திற்காக 1.65 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தது.

நலிந்த பிரிவினருக்கு மட்டுமேயான பொது விநியோகத் திட்டம் (Targeted Public Distribution system) அறிமுகப்படுத்தப்பட்டபின், 1.6.97க்கு பின், மத்தியத் தொகுப்பிலிருந்து செய்யப்பட்ட அரிசி ஒதுக்கீடு மாதத்திற்கு 84,230 மெட்ரிக் டன் ஆக குறைக்கப்பட்டு விட்டது.

ஆனால், மாநில அரசின் தேவையோ மாதத்திற்கு 2.2 இலட்சம் மெட்ரிக் டன். மாநிலத்தின் தேவைக்கும், தற்போதுள்ள ஒதுக்கீட்டிற்கும் இடையேயுள்ள வித்தியாசம் 1.10 இலட்சம்மெட்ரிக் டன் என உள்ளது.

எனவே, இதற்கு முன்னர் தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டு வந்த – மாதம் 1.65 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி என்ற அளவையே மீண்டும் நிர்ணயிக்குமாறும், மேலும் 56,000 டன் அரிசியை மாதந்தோறும் கூடுதலாக ஒதுக்கீடு செய்யுமாறும் பிரதமரிடம் முதலமைச்சர் வலியுறுத்தினார்.

***சென்னையில் இரண்டாவது பன்னாட்டு விமான நிலையம்***

சென்னையில் இரண்டாவது பன்னாட்டு விமான நிலையம் ஒன்றை அமைப்பதற்காக கருத்துருவினை மத்திய அரசுக்கு தமிழ்நாடு அரசு அனுப்பி இருக்கிறது. இந்த இரண்டாவது பன்னாட்டு விமான நிலையம் தனியார் மூலம் "BOOT" (Build, Own, Operate and Transfer) என்ற முறையில் அமைக்கப்படவுள்ளது.

இதற்காக வெளிப்படையான – உலகளாவிய போட்டி ஏல முறையில் தொழில் மேம்பாட்டாளர்களைத் தேர்வு செய்து, அவர்கள் மூலம் தேவையான முதலீடுகளைக் கொண்டு இத்திட்டம் நிறைவேற்றப்படவுள்ளது.

இத்திட்டத்திற்கு விரைவில் அனுமதி வழங்குமாறும், பிரதமரிடம் கேட்டுக்கொண்டார்.



### எண்ணூர் துறைமுகம் : இரண்டாம் கட்டப்பணிகள்

எண்ணூர் துறைமுகத்திற்காக ஒரு தன்னாட்சி பெற்ற துறைமுக பொறுப்புக் கழகத்தை அமைக்குமாறும், இந்தத் துறைமுகத்தின் இரண்டாம் கட்டப் பணிகளை நிறைவேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மத்திய அரசினை தமிழக அரசு கோரியுள்ளது. இது தொழில் வளர்ச்சிக்குத் தேவையான வசதிகளை மேம்படுத்திட வழிவகுக்கும். இதற்கான ஒப்புதலை வழங்குமாறும் பிரதமரிடம் முதலமைச்சர் கலைஞர் கோரினார்.

### மகாநகர் தொலைத்தொடர்பு நிறுவனத்திற்கு விரைவில் அனுமதி

தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ்நாடு தீவிர வளர்ச்சி கண்டு வருகிறது. தற்போது உள்ள தொலைத்தொடர்பு கட்டமைப்பு வசதிகள் சென்னை மாநகரின் தேவையை நிறைவு செய்யும் வகையில் இல்லை.



இந்த நிலையை மாற்ற, சென்னை மாநகர தொலைத்தொடர்புத்துறையை மகாநகர்தொலைத் தொடர்பு நிறுவனத்தின் (MTNL) கீழ் கொண்டு வரவேண்டுமென்று தமிழக அரசு மத்திய அரசைக் கோரியுள்ளது. இதற்கான ஒப்புதலை விரைவில் வழங்கிடவும் கலைஞர் பிரதமருக்கு வேண்டுகோள் விடுத்தார்.

### துரித பாசனப் பயன் திட்டத்தை சிறுபாசனத் திட்டங்களுக்கும் விரிவுபடுத்துதல்

மத்திய திட்டக்குழு 1999–2000 ஆண்டு திட்டத்தில் விரைவுபடுத்தப்பட்ட பாசன திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்கு மத்திய அரசின் கடன் உதவியாக நிதி ஒதுக்கியுள்ளது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே கிடைக்கின்ற நிலத்தடி நீர் ஆதாரங்கள் முழுமையாக பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் புதிய பெரிய பாசனத் திட்டங்களுக்கு மேலும் வாய்ப்புகள் இல்லை. எனவே, தமிழகத்தின் சிறுபாசன அபிவிருத்தித் திட்டங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளும் வகையில் துரித பாசனப்பயன் திட்டங்களின் கீழ் அனுமதிக்கப்படும் கடன் உதவிகளுக்குரிய நிபந்தனைகளை தளர்த்தி, தமிழகத்திற்கு உதவிட வேண்டும் என்று பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.


### கடலரிப்பைத் தடுக்கும் பணிகளுக்காக ரூ.17.50 கோடி ஒதுக்கிடுக

தமிழ்நாடு 960 கி.மீ. நீளமுள்ள நீண்ட கடற்கரையைக் கொண்டுள்ளது. இதில் பல பகுதிகள் கடலரிப்பினால் பாதிக்கப்பட்டு, கடலோரத்திலுள்ள குடிசைகளுக்கும், சொத்துக்களுக்கும், சாலைகளுக்கும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. கடலரிப்பைத் தடுக்கும் வகையில் 17.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகளை மேற்கொள்ளும் திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு மைய அரசுக்கு கருத்துரு ஒன்றை அனுப்பியுள்ளது. எனவே, கடலோரப் பகுதிகளைப் பாதுகாக்கும் பணிகளுக்காக மைய அரசு உடனடியாக ரூ.17.50 கோடி ஒதுக்கிட வேண்டுமென்று முதலமைச்சர் கலைஞர் பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

பெருந்தலைவர்

# காமராசர்

# பிறந்த நாள்



இன்றைக்கு உன்றன் பிறந்தநாள்--கொள்கைக்
குன்றுக்கு எங்கணும் திருவிழா!
விருதையில் பிறந்து வீரனாய் வளர்ந்தாய்
சரிதையில் நிறைத்த தலைவனாய் நின்றாய்!
சிறையின் கொடுமையும் சித்ர வதையும்
சிரித்த முகத்துடன் ஏற்ற தியாகி.
ஆயிரம் உண்டு கருத்து மோதல்--எனினும்
அழியாத் தொண்டு மறந்திடப் போமோ?
தமிழ்நிலம் மணக்க வந் திருவே!
அமிழ்தெனும் பொதுப்பணியின் உருவே!
கருத்திருக்கும் உன்றன் உடல் என்றாலும்—
நெஞ்சில்
கருத்திருக்கும் காலமெல்லாம் உழைப்பதற்கு!
கதராடை மேனிதனை அலங்கரிக்கும்—
கதறுகின்ற ஏழைகளைக் கரம் அணைக்கும்
கட்சிகளை நோக்கி, நீ கடுமொழிகள்
தொடுத்திடுவாய்—பிற
கட்சித்தலைவர்க்கோர் இன்னலென்றால்
துடித்திடுவாய்!
பெரியாரின் கல்லறையில் உன் கண்ணீர்!
பேரறிஞர், மூதறிஞர் மறைந்தபோதும்
உன் கண்ணீர்!

பெற்ற தாய்தனை நான் இழந்தபோதும்
உற்றார் உறவுபோல் நீ வந்து உகுத்தாய் கண்ணீர்!
பெருமகனே! உனக்காக எம் கண்ணீர்
பேராற்றுப் பெருக்கெனவே பாய்ந்த தன்றோ?
தனிமனிதன் வாழ்வல்ல உன் வாழ்வு
தன்மானச் சரித்திரத்தின் அத்தியாயம்,
குமரிமுதல் இமயம் வரை உன்கொடி பறக்கக்
கோலமிகு தமிழகத்தின் புகழ் பொறித்தாய்.
"குணாளா! குலக்கொழுந்தே!" என்று பண்பின்
மணாளர் எங்கள் அண்ணன் உனை அழைத்தார்
பச்சைத் தமிழன் எனப் பகுத்தறிவுத் தந்தை
இச்சையுடன் உன் உச்சி முகர்ந்தார்
கருப்புக் காந்தியென உன்னை – இந்தக்
கடல்சூழ் நாடு கைகூப்பித் தொழுததன்றோ!
வாழ்க்கையின் ஓரத்தில் நீ எம்மிடம்
வாஞ்சையும் காட்டினாய்! உன்
வாழ்வையே ஒரு பாடமாய் அனைவர்க்கும்
நிலைநாட்டினாய்
இன்றைக்கு உன்றன் பிறந்த நாள் –
என்றைக்கும் அது சிறந்த நாள்!

(15–7–76 காமராசர் பிறந்த நாளன்று **கலைஞர்** அவர்கள் எழுதியது)
நன்றி : கலைஞரின் கவிதைகள்


# நரிப்பையூர் – கடல் நீரை நன்னீராக்கும் திட்டம்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும்

உள்ளாட்சித் துறை அமைச்சர்

திரு. கோ.சி. மணி

தமிழகத்திலேயே மிகவும் பின்தங்கிய மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டத்தில், கமுதி, கடலாடி, முதுகுளத்தூர் ஆகிய ஒன்றியங்களில் உள்ள மக்கள் குடிநீருக்கே மிகவும் கஷ்டப்பட்டு வந்தார்கள். நிலத்தடி நீர் உப்பாக இருக்கின்ற காரணத்தால் கண்மாய் மற்றும் குட்டைகளில் உள்ள நீரைப் பருகி நரம்புச் சிலந்தி, வயிற்றுப் போக்கு மற்றும் தோல் நோய்களால் அவதிப்பட்டு வந்தனர். இந்நிலையை போக்க மேலே கண்டுள்ள மூன்று ஒன்றியங்களில் உள்ள 296 குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்குவதற்காக, கடல் நீரை நன்னீராக்கும் திட்டம் தயாரிக்கப்பட்டு சாயல்குடி அருகில் உள்ள நரிப்பையூரில் ரூ.55.22 கோடி செலவில் கடல் நீரை நன்னீராக்கும் திட்டம் முடிக்கப்பட்டுள்ளது. இத்தகைய



செயல்பாடுடன் கூடிய இந்தத் திட்டம் தெற்கு ஆசிய கண்டத்திலேயே மிகப் பெரிய திட்டமாகும்.

இத்திட்டத்தில் முதல் கட்டமாக கடந்த 25.6.99 அன்று தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் 173 குடியிருப்புகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

ஆனால், சில விஷமிகளால் இந்த கடல் நீரை சுத்திகரித்து நன்னீராக மாற்றியதை குடித்தால் சிறுநீரகக் கோளாறு, நுரையீரல் கோளாறு மற்றும் தலைமுடி உதிர்தல், செம்பட்டை முடியாகுதல் என பலவாறாக வதந்திகளை பரப்பி வருகின்றனர். இது முற்றிலும் விஷமத்தனமானது. கற்பனையானது. விஞ்ஞான ரீதியாக உண்மைக்கு புறம்பானது.

அரபு மற்றும் இஸ்ரேல் நாடுகளில் இதே திட்டம் இதே முறையில் கடல் நீரை சுத்திகரிக்கப்பட்டு நன்னீராக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மற்றும் நம் தமிழகத்தில் இதே முறையில் சென்னை அருகே நொச்சிகுப்பத்திலும், இராமநாதபுரம் மாவட்டம் சிக்கல், குண்டுகுளம், கரிசல் புளி, பூசேரி, கருமல், ஏனாதி, சீராந்தை, நல்லிருக்கை, மேலச்சிறுபோது ஆகிய இடங்களில் இதே முறையில் உவர் நீர் சுத்திகரிக்கப்பட்டு கடந்த பத்து ஆண்டுகளாக மக்களால் விரும்பி குடிநீராக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை எந்தவிதமான குறைபாடுகளும் மக்களால் சொல்லப்படவில்லை.

மேலும் பனைக்குளம், பொட்டகவயல், உத்திரகோசமங்கை, உரத்தூர், பெருன்குளம், கீழாம்பல், கிடாதிருக்கை, கீழப்பருத்தியூர் ஆகிய இடங்களில் இதே முறையில் சுத்திகரிக்கப்பட்டு கடந்த ஒரு வருடமாக மக்களால் மிக நல்ல முறையில் மிகவும் விரும்பி பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

மேலும் உலக சுகாதார நிறுவனத்தின் குடிப்பதற்கான குடிநீருக்குண்டான தர நிர்ணய வரம்புக்குள் இந்த சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் இந்த குடிநீர் சுத்திகரிக்கப்பட்டு வழங்குவதற்கு ஒரு லிட்டருக்கு 12 பைசா செலவாகிறது. ஆதலால், இந்நீரை குடிநீருக்காக மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும்.

> *அமைதியில்தான் அழகின் நிறைவுத் தன்மை இருக்கிறது; பகட்டுமையில் அல்ல.*
>
> — தாகூர்

மேலும் பொதுமக்கள் இந்த குடிநீரைப் பருகுவதால் சிறுநீரகக் கோளாறு, நுரையீரல் கோளாறு மற்றும் தலைமுடி உதிர்தல், செம்பட்டை ஆகுதல் ஆகிய நோய்கள் ஏற்படும் என்று கூற எந்தவிதமான ஆதாரமுமில்லை. மேலும், இந்த சுத்தமான குடிநீரை பருகுவதால் நீரினால் பரவக்கூடிய அனைத்து நோய்களும் பரவாது.

ஆகவே, பொதுமக்கள் கற்பனை கலந்த, விஷமத்தனமான வதந்திகளை நம்பாமல் இந்த நல்ல குடிநீரை பருகி, நல்ல வளமான வாழ்வுடன் வாழ வேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றேன்.

★ ★ ★

# கல்வி எழுச்சி நாள் விழா

இந்த நாள் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள். இந்த நாளில் கல்வித் துறையிலே ஊக்கமும், உற்சாகமும் பெற்று மேலும் மேலும் வளர்வதற்கேற்ற வாய்ப்புகளைப் பெறுகிற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்குவதை உசிதமெனக் கொண்டு இந்த நாளை காமராஜர் பிறந்த நாளாக மாத்திரமல்ல, கல்வி எழுச்சி நாளாகவும் இந்த அரசு கொண்டாடுகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். காரணம், தமிழகத்திலே முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த காமராஜர் அவர்கள் கிராமப்புறங்களில் ஏழையெளிய மக்களிடத்திலே கல்விக்கண் திறக்கப்பட வேண்டுமென்பதற்காக அரும்பாடுபட்டவர்கள் ஆவார்கள்.

### இலவசக் கல்வித் திட்டம்

அவர் ஆட்சிப் பொறுப்பேற்றிருந்த காலக் கட்டத்திலே உள்ள நிலைக்கேற்றவாறு கல்வித் துறையிலே பல்வேறு மாற்றங்களை அவர்கள் செய்திட்டார்கள். அதிலே எல்லோராலும் பாராட்டத்தக்க ஒரு மாற்றம் இலவசக் கல்வியை ஒரு குறிப்பிட்ட வகுப்பு வரையிலே அவர்கள் அறிமுகப்படுத்தியதுதான். அப்படி அறிமுகப்படுத்தியதைத் தொடர்ந்து கிராமப்புறங்கள், குக்கிராமங்களிலே வாழ்கின்ற ஏழையெளிய மக்கள் எல்லாம் கல்வி எனும் அந்தக் கருவூலத்தை எளிதாகப் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது.

அதைத் தொடர்ந்து இந்த ஆட்சியில் அறிஞர் அண்ணா அவர்கள் பொறுப்பேற்ற 1967 ஆம் ஆண்டானாலும், அவர்களுக்குப் பிறகு நாங்கள் அவர் வழிநின்று பணியாற்றிய காலக் கட்டமானாலும் அல்லது இப்போது நடைபெறுகின்ற இந்த மூன்றாண்டு கால ஆட்சியிலேனும் கல்வித் துறையிலே எவ்வளவு பெரிய சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமோ அத்தகைய சீர்திருத்தங்களையெல்லாம் செய்து இந்தியாவிலே உள்ள மாநிலங்களிலே கல்வித் துறையிலே சிறந்த மாநிலம் தமிழகம் என்கின்ற அந்த அரும்பேற்றையும் பெற்றிருக்கின்றது.

நம்முடைய கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்களும் கல்வித் துறையிலே உள்ள அதிகாரிகளும், அலுவலர்களும், ஆசிரியப் பெருமக்களும் இந்தத் துறை நல்ல முறையிலே வளரவேண்டும் என்பதற்காக எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகள் மிகவும் பாராட்டத்தக்க வகையிலே அமைந்திருக்கின்றன.

### தமிழக கல்வித் திட்டங்களுக்கு டெல்லி முதல்வர் பாராட்டு

அண்மையில் நான் டெல்லியிலே கார்கில் போராட்டம் சம்மந்தமாக நடைபெற்ற முதல் அமைச்சர்கள் மாநாட்டிற்குச் சென்றிருந்தபோது டெல்லி முதலமைச்சர் என் பக்கத்திலே அமர்ந்திருந்தார். அவர் என்னைப் பார்த்து நலம் விசாரித்து விட்டு, அடுத்தபடியாக என்னிடம் சொன்னது – தமிழகத்திலே கல்வித் துறையிலே பல முற்போக்கான திட்டங்களையெல்லாம் தீட்டி கல்வியை வளர்ப்பதைப் பற்றிக் கேள்விப்பட்டேன்.



மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன் என்று அவர் என்னைப் பாராட்டி, வாழ்த்திக் கூறினார்கள். இத்தனைக்கும் அவர் எங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவருமல்ல, எங்கள் இயக்கத்திற்கு ஆதரவு தரும் கட்சியைச் சேர்ந்தவருமல்ல. டெல்லி முதலமைச்சர். காங்கிரஸ் கட்சியின் முதலமைச்சர். எனவே மற்றவர்களாலும், மாற்றாராலும் கூடப் பாராட்டப்படக்கூடிய அளவிற்கு தமிழகத்திலே இன்றைக்கு கல்வித்துறை வளர்ச்சி பெற்றுக் கொண்டிருக்கின்றது. அது மேலும் வளரவேண்டு மென்றாலுங்கூட, இப்பொழுது பெற்றிருக்கின்ற வளர்ச்சி ஊக்கம் தரத்தக்கதாக, உற்சாகம் தரத்தக்கதாக, மகிழ்ச்சி தரத்தக்கதாக அமைந்திருக்கின்றது.

இன்றைய நிகழ்ச்சி – தமிழை ஒரு பாடமாகவாவது எடுத்துப் படித்து 10, 12–ஆம் வகுப்புகளில் மாநில அளவில் முதல் மூன்று இடங்கள் பெறும் மாணவ மாணவிகளின் உயர் கல்விச் செலவை அரசே ஏற்கும் ஒரு திட்டம் நாங்கள் நான்காவது முறையாகப் பொறுப்பேற்ற 96ஆம் ஆண்டு முதல் அறிமுகப் படுத்தப்பட்டது.

## சாதனை படைத்த மாணவர்களின் உயர்கல்விச் செலவை அரசே ஏற்கிறது

பிறகு 97–98இல் மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்கள் பெறும் மாணவ மாணவியருக்கு அது விரிவுபடுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தின்படி மேலும் விரிவாக பத்தாம் வகுப்பில் இத்தகைய சாதனையைப் படைக்கும் மாணவர்களுக்கு அவர்களின் மேல்நிலைக் கல்விச் செலவு அல்லது ஐ.டி.ஐ. பாலிடெக்னிக் நிறுவனங்களில் பயிலும் செலவு ஆகியவற்றையும் அரசு ஏற்றுக்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டது.

12ஆம் வகுப்புத் தேர்வில் சாதனை படைக்கும் மாணவர்கள் மருத்துவம், பொறியியல் முதலிய தொழிற்கல்வி உட்பட எந்தவகை கல்விப் பிரிவிலே சேர்ந்தாலும் அவர்களுக்குரிய செலவு முழுவதையும் அரசு ஏற்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவைகள் எல்லாம் தமிழகத்திலேதான் கல்வித் துறையிலே இருக்கின்ற திட்டங்கள் என்பதை உங்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். இதன்படி உதவி பெற்றவர்கள் 96ஆம் ஆண்டில் மாநில அளவில் முதல் மூன்று இடம் பெற்ற மாணவர்கள் 10ஆம் வகுப்பிலே 3 பேர், 12ஆம் வகுப்பிலே 3 பேர். மாநில– மாவட்ட அளவிலே முதல் 3 இடங்கள் பெற்ற மாணவர்கள் 97ஆம் ஆண்டில் 10ஆம் வகுப்பில் 126 பேர். 12ஆம் வகுப்பில் 99 பேர். 98ஆம் ஆண்டில் 10ஆம் வகுப்பில் 139 பேர், 12ஆம் வகுப்பில் 97 பேர். 99ஆம் ஆண்டில் 12ஆம் வகுப்பில் 99 பேர். 10ஆம் வகுப்பில் 119 பேர். இந்த 119 மாணவர்களுக்குத்தான் இன்றைக்கு இந்த உதவி வழங்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தின்படி இதுவரையில் இந்த 3 ஆண்டுக் காலத்தில் 10ஆம் வகுப்பில் சாதனை படைத்த 387 மாணவர்களுக்கும், 12ஆம் வகுப்பில் சாதனை படைத்த 298 மாணவர்களுக்கும் ஆக மொத்தம் 685 மாணவர்களின் உயர்கல்விச் செலவு முழுவதையும் இந்த அரசே ஏற்றுக் கொள்கிறது என்பதை மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் தெரிவித்துக் கொள்கிறேன்.

காமராஜர் அவர்கள் தொடங்கிய இலவசக் கல்வித் திட்டம் ஆண்டு வருவாய் 1,200 ரூபாய்க்குள் – அப்பொழுதிருந்த பணத்தின் மதிப்பு ஒப்பிட்டுப் பார்க்கின்ற அனைவருக்கும் நன்றாகத் தெரியும். இன்றைய மதிப்பல்ல.

## ரூ.100 கோடி பட்ஜெட்டும் ரூ.15,000 கோடி பட்ஜெட்டும்

நானும், நம்முடைய பேராசிரியர் அவர்களும் 1957ஆம் ஆண்டு சட்டப் பேரவை உறுப்பினர்களாக வெற்றிபெற்று அண்ணா அவர்களுடைய தலைமையிலே 15 பேர் சட்டமன்றத்தில் வீற்றிருந்த பொழுது – காமராசர் தலைமையிலான ஆட்சியில் நிதியமைச்சராக இருந்த சி. சுப்பிரமணியம் அவர்கள் – நாங்கள் 57ஆம் ஆண்டு சட்டமன்றத்திற்குச் சென்று, 58ஆம் ஆண்டு என்று கருதுகிறேன். அப்பொழுது சி. சுப்பிரமணியம் அவர்கள் படித்த மொத்த பட்ஜெட் – கல்விக்கும், மருத்துவத்துறைக்கும், தொழில்துறை, நெடுஞ்சாலைத் துறை, பொதுப்பணித்துறை உள்பட எல்லாத் துறைக்கும் சேர்த்து அவர்கள் அன்றைக்கு படித்த பட்ஜெட் 100 கோடி ரூபாய் பட்ஜெட்.

அப்பொழுது அவர்கள் சொன்னார்கள், "இன்றைக்கு நான் செஞ்சுரி அடிக்கப் போகிறேன்'' என்று சொல்லிவிட்டு அந்த பட்ஜெட்டைப் படித்தார்கள்.

100 கோடி ரூபாய் பட்ஜெட் என்று தமிழ்நாட்டு மக்களெல்லாம் வியப்புறுகின்ற அளவிற்கு, மூக்கிலே விரலை வைக்கின்ற அளவிற்கு 100 கோடி ரூபாய் பட்ஜெட்டை சி. சுப்பிரமணியம் அவர்கள் அன்றைக்குச் சமர்ப்பித்தார்கள். இன்றைக்கு பட்ஜெட் ரூ.15,000 கோடி.

ரூ.15,000 கோடி எங்கே? ரூ.100 கோடி எங்கே? அந்த 100 கோடி ரூபாய் பட்ஜெட் இருந்த அந்தக் காலகட்டத்தில், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் இலவசக் கல்விக்கு ஒரு வரம்பு வைத்தார். எஸ்.எஸ்.எல்.சி. வரையிலே இலவசக் கல்வி என்று அறிவித்து அதற்கு ஒரு வரம்பு வைத்தார்.

ஆண்டு வருவாய் 1,200 ரூபாய்க்குள்ளே உள்ள பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு – 1,200 ரூபாய் என்றால் மாதச் சம்பளம் 100 ரூபாய் – மாத வருவாய் 100 ரூபாய் இருந்தால், அல்லது அதற்குக் குறைவாக இருந்தால் அவர்களுடைய வீட்டுப் பிள்ளைகளுக்கு எல்லாம் எஸ்.எஸ்.எல்.சி. வரையில் இலவசக் கல்வி என்று அறிவித்தார். இது 60ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தால் அப்பொழுது பயன் பெற்ற மாணவர்கள் மொத்தம் 17 சதவீதம் பேர்தான்.

எனவே பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதைப் பார்த்த முதலமைச்சர் காமராஜர்



*பெருந்தலைவர் காமராஜரின் 97ஆவது பிறந்த நாளான 15-7-1999 அன்று மாண்புமிகு அமைச்சர்கள், பேராசிரியர் க.அன்பழகன், திரு.வ. முல்லைவேந்தன் மற்றும் வணக்கத்திற்குரிய மேயர் திரு.மு.க.ஸ்டாலின் ஆகியோர் அவரது சிலைக்கு மாலை அணிவித்தனர்.*

அவர்கள் அந்த வருமான வரம்பையே ரத்து செய்து விட்டார். 1,200 என்றோ, 2,000 என்றோ வருமான வரம்பு தேவையில்லை என்று வருமான உச்சவரம்பை ரத்து செய்துவிட்டு, பள்ளி இறுதிப் படிப்பு, எஸ்.எஸ்.எல்.சி. வரையில் எல்லா மாணவர்களுக்கும் இலவசக் கல்வி என்று ஆணை பிறப்பித்தார்.

**எந்த நிபந்தனையுமின்றி பட்டப்படிப்பு வரை இலவசக்கல்வி**

அதற்குப் பிறகு 1967ல் நாம் ஆட்சிக்கு வந்த பிறகு, இந்த ஆட்சி காமராஜர் அவர்களைத் தொடர்ந்து இலவசக் கல்வித் திட்டத்தை விரிவுபடுத்தியது. 69ஆம் ஆண்டு நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த அந்த கால கட்டத்தில் "காமராஜர் அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. வரையில் அனைவருக்கும் இலவசக் கல்வி வழங்கினார். நாங்கள் அதைப் பின்தொடர்ந்து, அதைப் பின்பற்றி 69ஆம் ஆண்டு புகுமுக வகுப்பு வரையில் இலவசக் கல்வி" என்று அறிவித்தோம்.

பிறகு 89ஆம் ஆண்டு நான் மூன்றாவது முறையாக, ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது, "ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவச பட்டப் படிப்பு திட்டம்" என்ற ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தி குடும்பத்தின் ஆண்டு வருவாய் 12,000 ரூபாயாக இருந்தால், அது வரையிலே உள்ள அந்தக் குடும்பத்தின் பெண்களுக்குப் பட்டப் படிப்பு வரையிலே இலவசக் கல்வி என்று அப்பொழுது அதற்கு வருமான வரம்பு சுட்டிக் காட்டப்பட்டு 12,000 ரூபாய் என்று அறிவிக்கப்பட்டது.

பின்னர் இப்பொழுது 97ஆம் ஆண்டு அந்த வருமான வரம்பை 12,000லிருந்து 24,000 ரூபாயாக, இந்த அரசு உயர்த்தியிருக்கிறது என்பதையும் உங்களுக்கு நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

89ஆம் ஆண்டு மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோருக்குக் கலைக்கல்லூரிகளில் எந்த நிபந்தனையும் இல்லாமல் பட்டப்படிப்பு வரையில் இலவசக் கல்வி என்று அறிவித்தோம்.

**இலவசக் கல்வித் திட்டத்தால் 1.6 இலட்சம் பேருக்குப் பயன்**

90ஆம் ஆண்டு குடும்ப ஆண்டு வருமானம் 12,000 ரூபாய் வரையிலே உள்ள பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குப் பட்டப் படிப்பில் இலவசக் கல்வி என்று இருந்ததை 1996ஆம் ஆண்டில் வருமான வரம்பை 25,000 ரூபாயாக உயர்த்தினோம்.

90ஆம் ஆண்டு வருமான வரம்பு 12,000 ரூபாய்க்குள் உள்ள மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களில் முதல் நபருக்கு மருத்துவம்,

பொறியியல் முதலிய தொழில் பட்டப் படிப்புகளில் இலவசக் கல்வி – பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 91–92ல் இச்சலுகை வழங்கப்பட்டதல்லவா – அதை 96ல் வருமான வரம்பை 25,000 ரூபாயாக உயர்த்தி வழங்கத் தொடங்கினோம்.

98ஆம் ஆண்டு வருமான வரம்பு 25,000 ரூபாய்க்குள் உள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களில் முதல் நபருக்குப் பாலிடெக்னிக் நிறுவனங்களில் பட்டயப் படிப்பில் (Diploma Course) இலவசக் கல்வி என்று அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தினோம்.

இந்த இலவசக் கல்வித் திட்டங்களால் மொத்தத்தில் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த 1 இலட்சத்து 60 ஆயிரம் மாணவ மாணவியர் ஆண்டுதோறும் பயன் பெறுகின்றார்கள்! இந்தத் திட்டத்திற்கு நடப்பு ஆண்டில் ஆகக் கூடிய செலவு மாத்திரம் 9 கோடியே 86 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய்.

நம்முடைய பேராசிரியர் அவர்கள் பேசும் பொழுது ஆசிரியர்களின் பணியிடங்களை எல்லாம் விரிவுபடுத்தி கல்வியை வளர்ப்பதற்கானப் பணிகளில் நாம் ஈடுபட்டிருக்கிறோம் என்பதைச் சுட்டிக் காட்டினார்கள்.

அதனுடைய விவரங்களைப் பார்க்க வேண்டுமேயானால் ஒப்பீடு மூலம்தான் இந்த அரசு கல்வித் துறையிலே எந்த அளவிற்குக் கவனம் செலுத்துகிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள முடியும்.

இது எல்லாம் பரிசு வாங்க வந்த மாணவர்களுக்குத் தேவையா என்று நீங்கள் யாரும் கருத மாட்டீர்கள்.

### 3 ஆண்டுகளில் நியமிக்கப்பட்ட இடைநிலை ஆசிரியர்கள் 31,108 பேர்

நீங்கள் பள்ளிக்கூட நடப்பு, பரிசு வாங்குகின்ற நடப்பு, வாழ்க்கை நடப்பு இவைகளை மாத்திரமல்ல, சமுதாயத்திலே எத்தகைய அரசு அமைந்தால் இவைகளெல்லாம் வளரக்கூடும், முன்னேறக்கூடும் என்ற அந்த நடப்புகளையும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

கடந்த காலத்தில் 96க்கு முன்பு இருந்த ஆட்சிக் காலத்தில் நியமனம் செய்யப்பட்ட இடைநிலை ஆசிரியர்கள் எண்ணிக்கை 8,450. கடந்த 96ஆம் ஆண்டுக்கு முந்தைய 5 ஆண்டு காலத்தில் 91 முதல் 96 வரையில் 8450 ஆசிரியர்கள்தான் நியமனம் செய்யப்பட்டார்கள்.

ஆனால் இந்த மூன்று ஆண்டுகளில் நியமனம் செய்யப்பட்ட இடைநிலை ஆசிரியர்களின் எண்ணிக்கை 31,108 என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

### நடப்பு ஆண்டில் மேலும் நியமிக்கப்பட உள்ளவர்கள் 8,716 பேர்

அது மாத்திரமல்ல; இந்த நடப்பு ஆண்டில் மேலும் 8,716 இடைநிலை ஆசிரியர்கள் நியமிக்கப்பட இருக்கிறார்கள் என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முந்தைய ஐந்தாண்டு கால ஆட்சியில் நியமனம் செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள், தமிழ் ஆசிரியர்களின் எண்ணிக்கை 838 தான். ஆனால் கடந்த மூன்றாண்டுகளில் நியமனம் செய்யப்பட்ட பட்டதாரி மற்றும் தமிழாசிரியர்கள் எண்ணிக்கை 2,420.

அதுமாத்திரமல்ல; நடப்பு ஆண்டில் மேலும் நியமனம் செய்யப்படவுள்ள பட்டதாரி ஆசிரியர்கள்–தமிழாசிரியர்களின் எண்ணிக்கை 1,252 என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

96ஆம் ஆண்டுக்கு முந்தைய 5 ஆண்டு காலத்தில் நியமனம் செய்யப்பட்ட முதுகலை பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கை 843. இந்த மூன்று ஆண்டு காலத்தில் நியமனம் செய்யப்பட்ட முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கை 2,385.

அது மாத்திரமல்ல. நடப்பு ஆண்டில் இவர்களின் எண்ணிக்கை மேலும் 777 கூட இருக்கிறது என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

முன்பிருந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் – உடற்கல்வி ஆசிரியர்கள், தொழில் ஆசிரியர்கள், கலை ஆசிரியர்கள் எனும் சிறப்பாசிரியர்கள் ஒருவர் கூட நியமனம் செய்யப்படவில்லை. சிறப்பாசிரியர்களை எதற்காக நியமனம் செய்ய வேண்டும் என்று இருந்துவிட்டார்களோ, என்னவோ எனக்குத் தெரியாது. ஒருவரைக்கூட நியமிக்கவில்லை. ஆனால் இந்த மூன்றாண்டுகளில் உடற்கல்வி ஆசிரியர்கள் 1,332 பேரும், கலை ஆசிரியர்கள் 614 பேரும் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் உங்களுக்குத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கின்றேன்.

### 3 ஆண்டுகளில் நியமிக்கப்பட்ட கல்லூரி ஆசிரியர்கள் 828 பேர்

முந்தைய ஐந்தாண்டு காலத்தில் கல்லூரி ஆசிரியர்கள் ஒருவர் கூட நியமனம் செய்யப்படவில்லை. இந்த மூன்றாண்டு காலத்தில் 96ஆம் ஆண்டில் 330 கல்லூரி ஆசிரியர்களையும், 97–98ஆம் ஆண்டில் 498 கல்லூரி ஆசிரியர்களையும் ஆக மொத்தம் 828 கல்லூரி ஆசிரியர்களை இந்த அரசு நியமனம் செய்திருக்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதைப் போல தனியார் பள்ளிகளுக்குப் புதிதாக ஆசிரியர் பணியிடங்களை அனுமதித்ததில் – முந்தைய 5 ஆண்டு கால ஆட்சியில் அப்படி தனியார் பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் பணியிடங்கள் 327. இந்த மூன்றாண்டு காலத்தில் அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் பணியிடங்கள் 2,001.

### கல்விக்குச் செலவழிக்க அரசு கவலைப்படவில்லை

இந்த ஏற்றத் தாழ்வை நீங்கள் எண்ணிப் பார்த்தாலே இந்த அரசு பெரும் செலவுக்கு இடையிலே அந்தச் செலவைப் பற்றிக் கவலைப்படாமல் – ஏனென்றால் கல்வியைத் தவிர பெருஞ்செல்வம் ஏதுமில்லை என்ற

காரணத்தினால், அந்தச் செல்வத்தை வளர்க்க இந்தச் செல்வத்தைச் செலவழித்தால் பரவாயில்லை, கவலையில்லை என்ற நிலையில் இந்த அரசு செலவழித்துக் கொண்டிருக்கிறது.

எனவே அந்த உணர்வைப் போற்றுகின்ற வகையில் இங்கே பரிசு வாங்குகின்ற மாணவச் செல்வங்கள் தங்களுடைய கல்வியை மேலும் வளர்த்துக் கொண்டு – தங்களுடைய அறிவை மேலும் வளர்த்துக் கொண்டு – தமிழகத்தின் தவப்புதல்வர்களாக, தவப்புதல்விகளாக விளங்க வேண்டும் என்று அவர்களை எல்லாம் வாழ்த்தி – அவர்களுக்கு இந்தப் பரிசு பெறுகின்ற வாய்ப்பை வழங்கிய ஆசிரியப் பெருமக்களுக்கும், அவர்களுக்கு ஊக்கத்தை உருவாக்கிய பெற்றோர்களுக்கும், உற்றார்களுக்கும் என்னுடைய நன்றியையும் பாராட்டுதல்களையும் வழங்கி கல்விவள்ளல் கர்மவீரர் காமராஜர் பிறந்த இந்த நாளில் உங்கள் அனைவருக்கும் மீண்டும் மீண்டும் வாழ்த்துக் கூறுகின்றேன்.

ஒரு மகிழ்ச்சிகரமான அறிவிப்பு. இந்த அறிவிப்பால் மகிழக்கூடியவர்களும் இருக்கிறார்கள். மகிழ முடியாதவர்களும் இருக்கிறார்கள். இருந்தாலும் இதனை அறிவிக்க வேண்டியுள்ளது.

மாநில அளவில் இங்கே பரிசு பெற்றவர்கள் 15 பேர். இதில் 10 பேர் மாணவிகள். 5 பேர் மாணவர்கள்.

ஒட்டுமொத்தமாக இங்கே இன்று பரிசு பெற்றவர்கள் 119 பேர். இதில் பெண்கள் 95 பேர், ஆண்கள் 24 பேர்.

பரிசு வழங்கும்போது நானும் பேராசிரியரும் ஒன்றைக் கவனித்தோம். நீங்கள் கையொலி எழுப்பும்போது ஒரு ஆண் மாணவர் வரும்போதெல்லாம் மாணவர்கள் அதிகமாக கை தட்டினார்கள். காரணம் பத்துபேருக்கு ஒரு மாணவராவது வந்தாரே என்கிற அந்த மகிழ்ச்சியிலே அதிகமாக கையொலி செய்தீர்கள். பரவாயில்லை. அடுத்த ஆண்டு போட்டிக்கு ஆண்கள் தயாராகுங்கள் என்று அவர்களையும் கேட்டுக் கொண்டு, பெண்கள் இதே முன்னேற்றத்தைத் தொடருங்கள் என்று அனைவரையும் கேட்டுக்கொண்டு மீண்டும் ஒரு முறை என்னுடைய இதயமார்ந்த வாழ்த்துக்களைப் பரிசு பெற்ற அனைவருக்கும் தெரிவிக்கிறேன்.

*– காமராஜர் பிறந்த நாள், கல்வி எழுச்சி நாள் விழாவில்*
*15–7–1999 அன்று*
*முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.*


## GOVERNMENT OF TAMILNADU
## TAMILNADU FIRE SERVICE DEPARTMENT

GOVERNMENT OF TAMILNADU
TRUTH ALONE TRIUMPHS

### TENDER NOTICE

Sealed Tenders are invited from manufacturers or sole authorised distributors, with proof for the same for supply of the following items:

1. Accessories and equipments to be stowed in Water Tender Type-B as per IS: 950-1980 and other equipments needed for replacement of condemned items as per schedule enclosed to the Tender Form.
2. Consumable and expendable stores
3. Clothing and personal equipments
4. V.H.F. Wireless sets.

2. Separate Tender Schedule forms for the above items can be obtained from the Office of the Director of Fire Service, No: 12, Rukumani Lakshmipathi Road, Egmore, Chennai - 8 on payment of Rs. 200/- each per Form plus ST 11% (non refundable) on any working day by cash or Money order. Postal charges of Rs. 80/- should be paid if the Forms are needed to be sent by post.
3. Those desirous of seeking/buying Tender Forms through M.O. should along with the M.O., submit a written application separately requesting for the supply of the Tender Forms, enclosing the proof to show that they are the manufacturers or the sole authorised distributors of the product, to enable the Department to despatch the Tender Form by post. This Department will not be responsible for the non-receipt of Tender Form by post, within the due date of submission of Tenders by the applicant.
4. The last date for receipt of completed and sealed tender documents in the Office of the Director of Fire Service, Tamil Nadu, Chennai - 600 008 with samples wherever required (as indicated in the Tender Forms) will be upto 17.45 hours on 10.08.99. Tender received after the last date will be summarily rejected.
5. The sealed tenders will be opened on 11.8.99 at 11.00 hours in the presence of the tenderers or their authorised representatives, in the above mentioned address.

**DIRECTOR OF FIRE SERVICE,**
**TAMILNADU**

DIPR/1951/TENDER/99


**1999–தீண்டாமை ஒழிப்பு, மதநல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமை ஆண்டு**

# சிறுபான்மை மக்களின் துன்ப துயரங்களில் பங்கு பெறுபவன் நான்

## - முதலமைச்சர் கலைஞர்

இருபத்து ஐந்து இலட்ச ரூபாயை காமராசர் பல்கலைக் கழகத்திலே கிறித்தவ ஆய்வு மையம் தொடங்குவதற்காக வழங்கியிருக்கின்ற உங்கள் அனைவருடைய பரந்த மனப்பான்மையை நான் பாராட்டுகின்றேன். நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த இருபத்தைந்து இலட்ச ரூபாயும் இந்த மாலை நேரத்தில் என் வழியாக பல்கலைக் கழகத்திற்கு உங்களால் வழங்கப்பட்டிருக்கிறது.

**நிதியை விட மகிழ்ச்சியளிக்கும் மதநல்லிணக்கக்காட்சி**

இதிலே உள்ள மத நல்லிணக்கத்தை நான் எண்ணிப் பார்க்கிறேன். இதை வாங்கி வழங்கிய நான் சைவ சமயத்தைச் சேர்ந்தவன் எனப்படுபவன். வைணவம், சைவம் என்றெல்லாம் பல சமயங்கள் உண்டு. இதைப் பெற்றுக் கொண்டவர் இஸ்லாமிய சமயத்தைச் சேர்ந்தவர். துணைவேந்தர் சாலிகு அவர்கள். வழங்கியவர்கள் கிறிஸ்தவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்.

எனவே இந்த நிகழ்ச்சியை புகைப்படமெடுத்து அது பத்திரிகைகளிலே வந்தால் இந்த நிதியை வாங்கிக் கொண்டவரையும், நிதியை வழங்கியவரையும் வாங்கி, வழங்கிய என்னையும் ஒரு சேரப்பார்த்தால் எவ்வளவு அற்புதமான மத நல்லிணக்கம் தமிழகத்தில் ஏற்பட வேண்டுமென்று விரும்புகிறோமோ அது இங்கே தோற்றமளித்திருக்கின்றது என்கின்ற மகிழ்ச்சியை நாம் பெற முடியும். இருபத்தைந்து இலட்ச ரூபாயை ஒரு மையத்திற்காக வழங்கியதை விட வழங்குகிற சூழ்நிலையிலே தெரிந்தோ தெரியாமலோ, ஆனால் நாம் விரும்புகின்ற வண்ணம் ஒரு மத நல்லிணக்கத்தை இங்கே காட்சியாகக் கண்டோமே அதுதான் இந்த நிதியை விட பெரும் மகிழ்ச்சியை நமக்குத் தரக்கூடியதாகும்.

**ஒரு மணிநேரத்தில் ரூ.56 இலட்சம் கார்கில் நிதி குவிந்தது**

இன்று காலையிலே மதுரை மாநகருக்கு வந்தேன். மூன்று மணவிழா நிகழ்ச்சிகளில்



வாழ்க்கையில் ஒவ்வொரு சமயத்திலும் விழுந்து கொண்டிருக்கின்றோமே என்று வேதனைப்படாதீர்கள்! ஏனெனில், நாம் விழுவதும் உற்சாகமாய் எழுவதற்கே! வீழ்ச்சிகளில் பெரும் வீழ்ச்சி – நாம் தன்னம்பிக்கையை இழந்துவிடுவதே! எனவே, வாழும் நாள்களை வகைப்படுத்திக் கொள்ளுங்கள்! வளங்கள் வரிசையாய் ஒன்றன்பின் ஒன்றாய் வந்து நிற்கும்! பின்பு அனுபவித்து ஆனந்தமாய் வாழுங்கள்!

– உமர் கயாம்

கலந்துகொண்டேன். ஒரு மணி நேர ஓய்வுக்குப் பிறகு நான்கு மணியளவிலே நான் தங்கியிருந்த விடுதி அறையில் கார்கில் களத்திலே போரிட்டுக் கொண்டிருக்கிற நம்முடைய மாவீரர்களுடைய குடும்பங்களுக்கான நிவாரண நிதியை வலியவந்து பலரும் வழங்கினார்கள். அங்கே வழங்கப்பட்டதும், இங்கே வழங்கப்பட்ட ஆறு இலட்ச ரூபாயும் சேர்ந்து இன்று மாலையிலே ஒரு அரை மணி நேரத்திலே அல்லது ஒரு மணி நேரத்திலே ஐம்பத்தாறு இலட்ச ரூபாய் கார்கில் வீரர்களுடைய நிவாரண நிதியாக கிடைத்திருக்கிறது என்பதை எண்ணுகிற நேரத்தில் மதுரை மாநகரத்திலே உள்ள மக்கள் அண்மையிலேதான் ஒரு கலை நிகழ்ச்சியிலே இலட்சக்கணக்கான ரூபாயை கார்கில் நிதிக்காக வழங்கிவிட்டு தொடர்ந்து இன்றைக்கும் ஐம்பத்தாறு இலட்ச ரூபாய்க்குமேல் வழங்கியிருக்கிறீர்கள் என்றால் இந்தியா இன்றைக்கு ஒருமைப்பாட்டின் சிகரமாக விளங்குகின்றது. தேசப்பற்றின் நடுநாயகமாக உலக நாடுகளுக்கெல்லாம் அறிவிக்கின்ற அளவிற்கு உயர்ந்து திகழ்கிறது என்பதற்கு இது அடையாளமாகும். எதிரிகள் எவரும் இந்த மண்ணை ஆக்கிரமிக்க இயலாது, விடமாட்டோம் என்பதற்கான அறிகுறிதான் மதுரையில் சில மணி நேரங்களிலே மதுரை மாநகர மக்கள் வழங்கியுள்ள இந்த நிதியாகும். குறிப்பாக அதைத் தொடர்ந்து நடைபெறுகிற இந்த இனிய நிகழ்ச்சியில் கிறித்தவ ஆய்வு மையத்திற்காக வழங்கப்பட்டுள்ள தொகை இருபத்தைந்து இலட்சம். இது போதுமானதா என்றால் போதுமானது என்று நான் சொல்ல மாட்டேன். சொல்லுகிறாய் நீ ஏதாவது சேர்த்துக் கொடுப்பாயா என்று கேட்டால் இப்பொழுது நேரம் சரியில்லை. தேர்தல் அறிவிக்கப்பட்டாகி விட்டது. தேர்தல் நேரத்தில் அரசு வாயிலாக இப்படிப்பட்ட உதவிகளை வழங்குவது தேர்தலிலே மக்களை ஆளுங்கட்சிப் பக்கம் இழுப்பதற்கு ஒப்பாகிவிடும் என்பதற்காகச் சில வரைமுறைகள் வைக்கப்பட்டு தடுக்கப்பட்டிருக்கின்றது.

எனவேதான் நான் அதைப்பற்றி எதுவும் சொல்லாமல் உங்கள் முடிவுக்கே விட்டுவிடுகின்றேன். நேரம் சரியில்லை என்ற அந்த ஒரு சொற்றொடரோடு நான் நிறுத்திக் கொள்கின்றேன்.

## கிறித்தவப் பெருமக்களைச் சந்திப்பது புதிதல்ல

கிறித்தவப் பெருமக்களை சந்திப்பது என்பது எனக்குப் புதிதல்ல. என்னுடைய அன்புக்கும் பாசத்துக்கும் உரிய பேராயர் ஆரோக்கியசாமி அவர்கள் இங்கே சுட்டிக் காட்டியதைப்போல் கன்னியாகுமரி மாவட்டத்தில் கலவரம் நடந்தபோது ஆட்சிப் பொறுப்பிலே இல்லாத நான் அப்பொழுது எதிர்க்கட்சிப் பொறுப்பிலே இருந்த நான் அங்கேயிருந்த மைக்கேல்ராஜ் மூலமாக என்ன செய்தி சொல்லியனுப்பினேன் எப்படி சிறுபான்மை சமுதாயத்து மக்களுக்கு நாங்கள் என்றைக்கும் அரணாக இருப்போம் என்று உறுதியளித்தேன் என்று குறிப்பிட்டாரே அந்த நிலை நாங்கள் ஆளுங்கட்சியாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் எந்த நேரத்திலும் நிரந்தரமான நிலைதான் என்பதை நான் கூறிகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.


இன்றைக்கு புதிதாக உங்களை நான் சந்திக்கிறவன் அல்ல. நம்முடைய பேரவைத் தலைவர் பி.டி.ஆர் அவர்கள் இங்கே பேசும்பொழுது சொன்னார். என் அருகில் அமர்ந்திருந்தபோதும் சொன்னார். நீதிக்கட்சிக் காலத்திலே கிறித்தவ சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் அவருடைய பெயரும் ஆரோக்கியசாமிதான். அமைச்சரவையிலே இடம் பெற்றிருந்தார் என்று சொன்னார். அதைத் தொடர்ந்து கிறித்தவ சமுதாயத்தின் சார்பில் நீதிக்கட்சியின்

அமைச்சரவையிலே இடம் பெற்றிருந்தவர் சர் ஏட்டி. பன்னீர்செல்வம். பன்னீர்செல்வம் அவர்கள் நான் மிகமிக அருகிலிருந்து நெருங்கிப் பழகிய ஒரு பெருந்தலைவர்.

திருவாரூருக்குப் பக்கத்தில் பெரும்பண்ணையூர் என்ற இடத்திலே பிறந்தவர். பார்—அட்—லா பட்டம் பெற்றவர். சர் பட்டம் பெற்றவர். இந்தியாவினுடைய ஆலோசனை அமைச்சராக இங்கிலாந்துக்கு அழைக்கப்பட்டவர். அப்படி அழைக்கப்பட்டு ஹனிபால் விமானத்திலே அவர் ஏறிச் சென்று இங்கிலாந்து சென்றடைந்து இந்தியாவின் ஆலோசகராக பணிப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு முன்பு வழியிலே அவர் சென்ற விமானம் ஓமான் கடலில் விழுந்து அவர் மாண்டு போனார். விமானம் என்ன ஆனது? என்ற வினாக்குறி தமிழகம் முழுவதும் எழுந்தது. ஆவலோடு, பரபரப்போடு, ஆர்வத்தோடு, அடங்காத கண்ணீரோடு அன்றைக்கு மாணவர்களாக இருந்த நாங்கள் எல்லாம் வானொலிப் பெட்டியின் முன்னால் வரிசை வரிசையாக நின்று செய்திக் கேட்க துடித்தோம். அப்போது ஐந்து நாள் ஆறுநாள் வரையில் செய்தி வரவில்லை.

திடுக்கென செய்தியைச் சொன்னால் நாடு அதிரும் என்பதற்காக கொஞ்சம் கொஞ்சமாக செய்தியை வெளியிட்டார்கள். விமானத்தின் இறக்கைகள் ஓமான் கடல் பகுதியிலே மிதக்கின்றன. எண்ணெய் மிதக்கின்ற காட்சியைப் பார்த்தோம் என்று ஒவ்வொன்றாகச் சொல்லி கடைசியாக அந்த விமான விபத்தில் ஓமான் கடலில் சர் ஏ.டி.பன்னீர்செல்வம் மூழ்கியே போனார். மறைந்து விட்டார் என்ற செய்தி வந்தது.

அந்த இளம்பருவத்திலே அப்பொழுது நான் எழுதினேன். "கோமானே! நாங்கள் அழுதழுது வடித்த கண்ணீர் ஓமான் கடல்



ஆயிரத்தை வெற்றி கொள்ளும்!" என்று அன்றைக்கு நான் சோகக் கவிதை எழுதினேன். அப்படி கிறித்தவ மதத்தைச் சார்ந்த ஏ.டி. பன்னீர்செல்வம் அவர்கள் நீதிக்கட்சியின் சார்பிலே பெருந்தலைவராக ஆகி தந்தை பெரியாரால், பேரறிஞர் அண்ணாவால், தளபதி அழகிரிசாமி அவர்களால் திருவாரூரிலேயே நடைபெற்ற வழியனுப்பு விழாக் கூட்டத்திலே வழியனுப்பி வைக்கப்பட்டு வழியிலே மறைந்தார்.

நம்முடைய விழியெல்லாம் கண்ணீர்க் குளங்களாக ஆக்கி விட்டு!

## சிறுபான்மை சமுதாய மக்களின் துன்ப துயரங்களில் பங்கு பெறுபவன் நான்

இந்த நிகழ்ச்சியை நான் சொல்லுவதற்குக் காரணம் இன்று நேற்றல்ல பாலப் பருவத்திலிருந்தே இளம் பிராயத்திலிருந்தே சிறுபான்மை சமுதாயம் இஸ்லாமியச் சமுதாயமாக இருந்தாலும் கிறித்தவ சமுதாயமாக இருந்தாலும் அவர்களுடைய துன்ப துயரங்களிலே பங்கு பெறுகின்ற ஒருவன் கருணாநிதி என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் இதை நான் உங்களுக்கு தெரிவித்தேன்.

இங்கே பேராயர் ஆரோக்கியசாமி அவர்கள் தயங்கி தயங்கிச் சொன்னார். கருணாநிதி என்றைக்கும் நம்மோடு இருப்பவர் என்று குறிப்பிட்டார். ஆம். இந்த மதத்தினுடைய சின்னமே சிலுவைச்சின்னம். அது கூட்டல் அடையாளம். கழித்தல் அடையாளம் அல்ல. எனவே ஒருவரை ஒருவர் சேருவோம் நாம் கூடிக்கொள்வோம். கூட்டலாக இருப்போமேயல்லாமல் என்றைக்கும் உங்களை விட்டு நானோ என்னை விட்டு நீங்களோ கழித்தல் என்ற நிலைமைக்கு என்றைக்கும் நாம் ஆளாக மாட்டோம் என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதிலே முக்கியமான சிறப்பு ஒன்று உண்டென்றால் இதைப்பற்றி அறிமுக உரையாற்றிய பேராயர்

ஆரோக்கியசாமி அவர்கள் குறிப்பிட்டார்களே அதுவும், அதைப் போலவே மதுரை — முகவை பெருமண்டில் பேராயர் தவராஜ் டேவிட் ஜேம்ஸ் அவர்கள் இங்கே சுட்டிக் காட்டினாரே அதுவும் மிக முக்கியமானவை. அதைத் தொடர்ந்து பாத்திமாக் கல்லூரி முதல்வர் பிரான்சிசுகா புளோரா ஆற்றிய உரையிலும் சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது. இது ஏதோ கிறித்துவ மதத்தினுடைய விசயங்களைச் சொல்ல ஆய்வு செய்ய மாத்திரம் அல்ல. அந்தப் பெயரால் இந்த நிதி இன்றைக்கு வழங்கப் பட்டாலும்கூட இந்த மையம் உருவாக்கப் பட்டாலும்கூட இதை எல்லா மதத்திலும் உள்ள, மார்க்கங்களிலே உள்ள பல செய்திகளை ஆராய்ந்து மொத்தத் தமிழர்களுக்கு அவர்கள் இந்துவானாலும் கிறிஸ்தவர்களானாலும் இஸ்லாமியர்களானாலும் மொத்தத் தமிழர்களுக்குப் பயன்படக்கூடிய அளவிலே இந்த மையம் பணியாற்றும் என்று அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியிருக்கின்றார்கள்.

## தமிழ்மொழிக்கு தொண்டாற்றிய கிறித்தவ பெருமக்கள்

நான் ஒன்றை மறந்தால் நான் மாத்திரமல்ல தமிழ்ச் சமுதாயமே நன்றி கொன்ற ஒரு குற்றத்திற்கு ஆளாக நேரிடும். தமிழுக்கு, தமிழ்மொழிக்கு தொண்டாற்றிய பெருமை சைவர்களாக, வைணவர்களாக பொதுவாக இந்துக்களாகப் பிறந்த பெரும் புலவர்கள், கவிஞர்கள் இவர்களுக்கு மாத்திரமல்ல. கிறித்துவ சமுதாயத்திலிருந்து டாக்டர் ஜியு. போப், டாக்டர் கால்டுவெல், வீரமாமுனிவர், டாக்டர் மீரான் வின் சுலோ மற்றும் கிருட்டிணப்பிள்ளை, பண்டித சவரிராயர் இவர்களெல்லாம் ஆற்றியிருக்கின்ற தொண்டு சாதாரணமானவைகள் அல்ல.

கால்டுவெல் அவர்கள் இன்றைக்கு சென்னை கடற்கரையிலே சிலையாக நிற்கிறார். ஆனால் உலகத்தமிழ் மாநாடு நடைபெற்ற பொழுது பேரறிஞர் அண்ணா அவர்கள் எங்களுக்கிட்ட ஆணை இந்தக் கடற்கரை ஓரம் முழுவதும் தமிழுக்காகப் பாடுபட்டவர்கள். தமிழுக்காக வாழ்ந்தவர்கள், தமிழை வளர்த்தவர்கள், தமிழைப் பரப்பியவர்கள், தமிழைப் பொலிவுறச் செய்தவர்கள் அவர்களுடைய சிலைகளால் நிரப்ப வேண்டும் என்பது அண்ணா இட்ட கட்டளை.

## கால்டுவெல், ஜி.யு.போப் தமிழுக்கு ஆற்றிய தொண்டு

அப்படி நிரப்பப்பட்ட நேரத்திலே ஒரு சிலையாக டாக்டர் கால்டுவெல் அவர்களுடைய சிலை சென்னை கடற்கரையிலே 1968ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அவர் திராவிட மொழிகளை எல்லாம் ஆராய்ந்து, "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்ற ஒரு பெரும் நூலை தமிழுக்குத் தந்தவர். ஒப்பிலக்கண ஆராய்ச்சிக்காக கிளாஸ்கோ பல்கலைக்கழகம் அவருக்கு "டாக்டர்" பட்டம் வழங்கியது. தமிழகத்தில் இன்றுள்ள வாகன வசதி அல்லாத அந்தக் காலக்கட்டத்தில் ஏறத்தாழ எழுநூறு கிலோ மீட்டர் தூரம் நடந்தே சென்று தமிழ் மக்களுடைய பழக்க வழக்கங்களையெல்லாம் அறிந்து உணர்ந்தவர். திராவிட மொழிகளில் தமிழ் மொழி — வடமொழி தொடர்பின்றித் தமிழ் மொழி தனித்து இயங்கவல்ல உயர்தனிச் செம்மொழி என்று தெளிவுபடுத்தியவரும் கால்டுவெல்தான் என்பதை நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைப்போலவே ஜியு.போப். அவர் தன்னுடைய கல்லறையில் தன்னுடைய பெயரை எழுதுவதை விட "ஒரு தமிழ் மாணவன் என்று எழுதுங்கள்" என்று ஆசைப்பட்டவர். அந்த ஜியு.போப் இங்கே பிறந்தவரல்ல. அமெரிக்காவில் பிறந்தவர்தான் என்றாலும், மதப்போதகராக தமிழகத்துக்கு வந்தார். தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கண நூல்களை எல்லாம் ஆராய்ந்து தமிழ் மாணவர்களுக்குப் பயன்படுகின்ற சிறிய இலக்கண நூல்களை எல்லாம் இயற்றி வழங்கினார். திருக்குறள், திருவாசகம், நாலடியார் முதலிய நூல்களை ஆங்கிலத்திலே மொழி பெயர்த்து வழங்கிய பெருமகன் ஜியு.போப். அதனால்தான் அவருடைய கல்லறையிலே தமிழ் மாணவன் என்று எழுதுங்கள் என்று கேட்டுக்கொண்டார். அவ்வாறே அவருடைய கல்லறையிலே இன்றைக்கும் அந்த எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருக்கின்ற காட்சியை நாம் காணலாம்.

## தமிழுணர்வு ஊட்டிய வீரமாமுனிவர்

"சதுரகராதி" தந்த வீரமாமுனிவர். இவர் மதகுருவாகத்தான் தமிழகத்திற்கு வருகை புரிந்தார். தொடக்கத்திலே 1710 என்று

எல்லார்க்கும் எல்லாம்என் றிருப்ப தான
இடம் நோக்கி நடக்கின்ற திந்த வையம்.

- பாவேந்தர் பாரதிதாசன்

அப்ப டிப்பட்டவர்களெல்லாம் வளர்த்த தமிழை அவர்கள் எல்லாம் இலக்கியத்தை, சான்றாண்மையை, கலாச்சாரத்தை, பண்பாட்டை விளக்குவதற்கு வழி ஏற்படும். அந்த வழிகளிலே ஒன்றாகத்தான் மதுரை பல்கலைக்கழகத்திலே இன்றைக்கு கிறித்துவ ஆய்வுத்துறை அமைக்கப்படுகிறது.

எனக்கு நினைவு. அப்போது கோவாவிலே வந்து அவர் இறங்கினார். பின்னர் நெல்லை, திருச்சி, தஞ்சை ஆகிய மாவட்டங்களில் தங்கி கிறித்தவ சமய தொண்டினை ஆற்றினார். அத்துடன் தமிழ் கற்று நூல் படைக்கும் திறனும் பெற்றார். தமிழ்த் துறவியைப் போல உடையிலும் நடையிலும் உணவிலும் ஒரு மாற்றத்தையே செய்து கொண்டார். முனிவர் வீரமா முனிவராக ஏற்றம் பெற்றார். அவர் அகரம் முதல் லகரம் வரை தமிழ் மொழியிலே உள்ள சொற்களை எல்லாம் தொகுத்து "சதுரகராதி" என்ற நூலை உருவாக்கினார்.

தொன்னூல் விளக்கம் என்னும் இலக்கண நூல் வீரமாமுனிவரால் எழுதப்பட்டது. திருக்குறள் நூலின் அறத்துப் பாலையும் பொருட்பாலையும் லத்தீன் மொழியிலே மொழி பெயர்த்த பெருமை வீரமாமுனிவருக்குண்டு. இப்படி தமிழகத்திலே மதப் பிரச்சாரத்திற்காக என்று வந்து அந்த உணர்வுகளை மாத்திரம் மக்களிடத்திலே எழுப்பாமல் அதோடு தமிழ் உணர்வையும் ஊட்டிய பெருமைக் குரியவர்கள் கிறிஸ்துவ சமுதாயத்துப் பெரியவர்கள் என்பதற்கு இந்த மூன்று பெயர்களும் நான் சுருக்கமாக எடுத்துக்காட்டியுள்ள சான்றுகளாகும்.

தமிழுக்காக எப்படிப் பாடுபட்டார்கள் என்பதை இன்றுள்ள இளைய தலைமுறை அவ்வளவு எளிதாக அறிந்திட இயலாது. பள்ளியிலே, கல்லூரியிலே அல்லது பல்கலைக்கழகத்திலே படிக்கின்ற மாணவமணிகள் வேண்டுமானால் அதை ஓரளவு உணர்ந்து கொண்டிருக்கலாம். அவர்களேகூட இந்தக் காலக் கட்டத்தில் அவ்வளவு பெரும்பான்மையோர் உணர்ந்திருக்கிறார்கள் என்று என்னால் ஏற்றுக்கொள்ள இயலாது.

## இலக்கியம், வரலாறு, பண்பாட்டை விளக்க இத்தகைய மையங்கள் பயன்படும்

இலக்கியம், வரலாறு, காவியம், காப்பியம் இவைகளைப் பற்றி எல்லாம் இளைஞர்கள் கவலைப்பட்ட காலம் ஒன்று இருந்தது. இன்றைக்கு அவர்களுடைய கவலைகளே வேறு. அவர்களுடைய பொழுதுபோக்கே வேறு அவர்கள் நாடுகின்ற கேளிக்கைகளே வேறு. அவர்கள் நாடுகின்ற விசயங்களே வேறு. எனவேதான் இதுபோன்ற இருக்கைகள் அல்லது மையங்கள் ஒவ்வொரு கல்லூரியிலும் பல்கலைக்கழகத்திலும் அமையுமேயானால் அவற்றின் வாயிலாக நம்முடைய தொன்மையை, வரலாற்றை

அந்த ஆய்வுத்துறை பெரியவர்கள், பேராயர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல, ஒரு மதத்திற்கு மாத்திரம் என்றில்லாமல் அனைவருக்கும் பயன்படுகின்ற துறையாக அமைந்திட வேண்டும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இங்கே பேசும்பொழுது சொன்னார்கள். மதச் சார்பற்றதன்மை அதுதான் நம்முடைய அரசியல் சட்டம் — அரசியல் சாசனம் என்று சொன்னார்கள். மதச்சார்பற்ற நிலை என்றால் அதற்கு என்ன பொருள்? என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

## மதச்சார்பற்ற நிலை என்றால் நல்லிணக்கத்தோடு வாழ்வதே

மதச்சார்பற்ற நிலை என்றால், ஒருவர் எந்த மதத்தையும் சாராதவராக இருக்கவேண்டும் என்பதுதான் நேரடியான பொருள். ஆனால், இப்பொழுது நாம் கொள்கின்ற பொருள், நாட்டு நிலைக்கேற்ப நாம் கொள்ளவேண்டிய பொருள் எல்லா மதங்களும் இருக்க உரிமை உண்டு. அந்த மதங்கள் எல்லாம் ஒன்றை ஒன்று மோதிக்கொள்ளாமல் நல்லிணக்கத்தோடு வாழவேண்டும். இதற்குப் பெயர்தான் மதச்சார்பற்ற நிலை.

ஆனால் மதச்சார்பற்ற என்றால் என்ன பொருள்? என்று இலக்கண ஆசிரியர்களைக் கேட்டால் மதமே இல்லாதவர் என்றுதான் பொருள். கருணாநிதி யார்? மதச் சார்பற்றவனா அப்படி என்றால் என்ன பொருள். அவர் இந்துவும் அல்ல, கிறிஸ்தவரும் அல்ல. இஸ்லாமியரும் அல்ல. மதமே இல்லாதவர் என்றுதான் பொருள். மதச்சார்பற்றவன் என்றால் அதுதான் பொருள்.

ஆனால் நாம் கொள்கிற பொருள், கொள்ளவேண்டிய பொருள் மதச்சார்பற்றவன் என்றால் நீ இந்துவாக இருந்தால், இஸ்லாமியரையோ, கிறித்தவரையோ வெறுக்காதே. நீ இஸ்லாமியராக இருந்தால் கிறித்தவர்களையோ, இந்துக்களையோ வெறுக்காதே. நீ கிறித்தவராக இருந்தால் இஸ்லாமியர்களையோ இந்துக்களையோ வெறுக்காதே. இதுதான் இன்றைக்கு மதச்சார்பற்ற தன்மை. அந்த மதச்சார்பற்ற தன்மைக்கு ஊனம் வராமல் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

நாம் என்று சொல்லுகிற நேரத்திலே அதிலே நானும் ஒருவன். இந்த நானும் என்பது அகந்தையால் சொல்லப்படுகின்ற சொல் அல்ல. நான் என்பது சுட்டிக்காட்டுவதாக சொல்லப்படுகிற சொல். நான் காலையிலே வருவேன் என்று சொன்னால், அந்த நான் என்பதிலே ஆணவம் கிடையாது. நான்தான் இதைச்செய்தேன் என்றால் அந்த நான் ஆணவத்தோடு ஒலிக்கின்ற ஒன்றாகும். 'நான்' என்று சொல்லிப்பாருங்கள். உதடுகள் கூட ஒன்றோடு ஒன்று ஒட்டாது. 'நாம்' என்று சொல்லிப்பாருங்கள். உதடுகள் ஒட்டிக்கொள்ளும். எனவே ஒட்டி உறவாட நாம் நாமாக இருக்கவேண்டும். நாம் நான் ஆனால் உதடுகளே ஒட்டாது. பிறகு எங்கே உறவு ஒட்டப் போகிறது. எனவேதான் நாமாக இருப்போம். நாம் மதச்சார்பற்றவர்களாக, அதாவது மத நல்லிணக்கம் வாய்ந்தவர்களாக வாழ்வோம். அதற்கு இத்தகைய மையங்கள் பயன்படட்டும்.

*– மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் கிறித்துவ ஆய்வு மையம் தொடங்குவதற்கு நிதி வழங்கும் விழாவில் 14–7–1999 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.*

## சிறந்த மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு பரிசு

மாநில மற்றும் மாவட்ட அளவில், சிறந்த ஊராட்சி அமைப்புகளுக்குப் பரிசு வழங்க அரசு முடிவு செய்துள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறந்து விளங்கும் மூன்று கிராம ஊராட்சிகள், மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாநில அளவில் சிறந்து விளங்கும் மூன்று மாவட்ட ஊராட்சிகள், மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மூன்று கிராம ஊராட்சிகளுக்குப் பரிசுகள் வழங்க அரசு முடிவு செய்துள்ளது. ஒவ்வொரு நிதி ஆண்டும், மாவட்ட அளவிலான பரிசுகள் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் உள்ள குழுவால் தேர்வு செய்யப்படும். மாவட்ட அளவில் ஊரக வளர்ச்சித் துறை செயலர் தலைமையில், ஒரு சட்டமன்ற உறுப்பினர், ஒரு சமூக சேவகர், தன்னார்வத் தொண்டு நிறுவனம், ஊரக வளர்ச்சி இயக்குநர் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு குழு சிறந்த ஊராட்சி அமைப்புகளைத் தேர்வு செய்யும்.

மாவட்ட அளவிலான குழு, மே 30ஆம் தேதிக்குள் விண்ணப்பங்களைப் பெற்று ஜூலை 31–க்குள் பரிசுகளை முடிவு செய்யும். சிறந்த கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கான பரிசுகள் ஆகஸ்ட் 31–க்கு வழங்கப்படும். மாநில அளவில் ஆகஸ்ட் 31–க்குள் விண்ணப்பங்கள் பெற்று, செப்டம்பர் 31–க்குள் முடிவு செய்யப்பட்டு, அக்டோபர் 31–க்குள் பரிசுகள் வழங்கப் படும்.

மாநில மற்றும் மாவட்ட அளவில் பரிசுகள் வழங்க ரூ.1.95 கோடி அரசு ஒதுக்கியுள்ளது. தேர்வு செய்யப்பட்ட அனைத்து ஊராட்சி அமைப்புகளுக்கும் சான்றிதழ் மற்றும் ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும். கீழ்க்கண்டவாறு ஊராட்சி அமைப்புகளுக்குப் பரிசுகள் வழங்கப்படும்.

| பரிசுகள் | மாவட்ட அளவில் | மாநில அளவில் |
|---|---|---|
| **கிராம ஊராட்சி** | | |
| I | 1,00,000 | 3,00,000 |
| II | 50,000 | 2,00,000 |
| III | 25,000 | 1,00,000 |
| **ஊராட்சி ஒன்றியங்கள்** | | |
| I | 2,00,000 | 6,00,000 |
| II | 1,00,000 | 3,00,000 |
| III | 50,000 | 2,00,000 |
| **மாவட்ட ஊராட்சிகள்** | | |
| I | – | 10,00,000 |
| II | – | 5,00,000 |
| III | – | 3,00,000 |

# தெக்கலூர் சமத்துவபுரம்

கோவை மாவட்டம், அவிநாசி அருகேயுள்ள தெக்கலூரில் **15.66** ஏக்கர் நிலப்பரப்பில் பெரியார் நினைவு சமத்துவபுரம் அமைக்கப்பட்டுள்ளது. இது கோவை மாவட்டத்தின் இரண்டாவது சமத்துவபுரம் ஆகும். இங்கு 100 குடியிருப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் நியாயவிலைக் கடை, மணிக்கூண்டு, சமுதாயக் கூடம், பள்ளிக் கட்டடம், குடிநீர்த்தொட்டி, துணை சுகாதார நிலையம், குழந்தைகள் நலக் காப்பகம், நூலகம், சத்துணவு மையம், தொலைக்காட்சி அறை மற்றும் வணிக வளாகம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

இந்த சமத்துவபுரத்தை **4.7.99** அன்று திறந்து வைத்து கல்வி அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் ஆற்றிய உரை:

"இந்த இனிய மகிழ்ச்சியான விழாவிலே கலந்துகொண்டு தந்தை பெரியார் பெயரில் அமைந்திருக்கின்ற பெரியார் நினைவு சமத்துவபுர வளாகத்தைத் திறந்து வைத்ததில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், நம்முடைய அமைச்சர்கள், நண்பர்கள் பேசியபோது சொன்னதைப் போல தமிழ்நாட்டில் பல முன்னோடித் திட்டங்கள் அகில இந்திய அளவில்கூட வேறு மாநிலங்களில் எண்ணிப் பார்க்காத பல திட்டங்களை உருவாக்கி சமுதாயத்திற்கு வழங்கி வருபவர். 72–73ஆம் ஆண்டுகளில் அவர் தொடங்கிய திட்டம்தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தமிழ்நாட்டில் சிறிய அளவிலான வீடுகள் கட்டித்தர வேண்டும் என்று தமிழ்நாடு முழுவதும் ஏறத்தாழ ஓராண்டு காலத்தில் 35,000 வீடுகள் அப்போது 1974ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. சென்னை போன்ற நகரத்தில் அடுக்கு மாடி வீடுகள் கட்டுவதன்மூலம் சுகாதார கேட்டுக்கு இடமாக இருக்கிற பகுதிகளில் உள்ள மக்களுக்கு மறுவாழ்வு தர அந்தத் திட்டத்தை தமிழ்நாட்டிலே கலைஞர்தான் துவக்கி வைத்தார்.



சமுதாய நன்மையை பெண்கள் உணர வேண்டும். அவர்களுக்கு நம்பிக்கை வளர வேண்டும் என்பதற்காக ஏற்கெனவே 8வது வரை படித்தால் திருமண நேரத்தில் ஏழைப் பெண்களுக்கு ரூ.10,000 உதவி என்று அறிவித்து இன்றைக்கு பத்தாவது படித்தால்– ஏனென்றால் சான்றுகள் பெறுவதில் பல சிக்கல்கள் இருந்து எட்டாவது என்பதற்கான சான்றிதழ் முழு அளவில் திருப்திகரமாக நம்பிக்கை ஊட்டுவதாக இல்லாத ஒரு நிலைமை இருந்ததன் காரணமாகவும் – மேலும் படிக்க வைக்க வேண்டும் என்ற ஊக்கத்தை உயர்த்தவும் எட்டாவது போதும் என்று எண்ணுகிற நிலைக்கு விட்டு விடக் கூடாது என்பதற்காகவும் பத்தாவது வரை படித்தால் ரூ.10,000 என்று வழங்கியிருப்பது, வழங்கி வருவது தமிழகத்தில் மிகப் பெரிய மாற்றம்.

நமது பெண்களுக்குச் சொத்துரிமை வழங்க வேண்டுமென்ற நீண்டநாள் கருத்து பெரியாரால் உருவாக்கப்பட்ட கருத்து. கடந்த காலத்தில் கலைஞர் தான் சொத்துரிமை வழங்கும் சட்டத்தை நிறைவேற்றினார். கிராமப்பகுதியினுடைய வளர்ச்சியை அடிப்படையாகக் கருதித்தான் அறிஞர் அண்ணா பெயரில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஒவ்வொரு ஒன்றியத்திலும் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டமானது ஓராண்டிலே தொடங்குகிற அளவிற்கு, இன்னும் சொல்லப்போனால் சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த ஐந்தாண்டு காலத்தில் 3–4 அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றுகின்ற அளவிற்கு அதன்மூலமாக அந்த கிராமத்தை சுற்றியுள்ள 7–8 கிராமங்கள் எல்லா அடிப்படை வசதிகளையும் பெறக்கூடிய அளவிற்கு தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

அனைத்து கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகின்ற திட்டம் பெருமளவிற்கு நிறைவேற்றப்பட்டு வருகிறது. எல்லா கிராமங்களுக்கும் இணைப்புச் சாலைகள் – ஒரு 500 பேர் இருக்கிற கிராமத்திற்குத் தவறாமல் இணைப்புச் சாலை போடப்பட்டு அது பெருமளவு நிறைவேறியிருக்கிறது. இருந்தாலும் நம்முடைய மக்கள் நீண்ட பாரம்பரியம் உள்ளவர்கள். என்றாலும்கூட நீண்ட பாரம்பரியம், தொன்மையான பாரம்பரியம், சில அடிப்படையான பாரம்பரியம் மறைந்து போய் வேறு பாரம்பரியம் சமூகத்திலே ஒட்டிக்கொண்ட காரணத்தினால்தான் சாதி நினைப்பு காரணமாக, மத நினைப்பு காரணமாக மக்கள் இணைந்து வாழ்கிற நல்வாழ்வை மேற்கொள்ள முடியாதவர்களாக பல இடங்களில் ஆகிவிடுகிறார்கள்.

தமிழகம் என்று எடுத்துக்கொண்டால் திராவிடர்கள் என்று எடுத்துக்கொண்டால், சாதி என்பது தமிழர்களுக்கு தொடர்புடைய சொல்லே அல்ல. பாரதிதாசன் சொன்னதைப் போல சாதி என்ற சொல்லே அன்னியச் சொல். குலம் என்ற சொல் வழங்குகிறது என்று கேட்கலாம். அந்தக் குலம் உயர்வு. இந்தக் குலம் தாழ்வு என்ற பாகுபாடு கிடையாது. எந்தக் குலத்தினுடைய பெயரைச் சொன்னாலும் ஒவ்வொரு வட்டாரத்திலேயும் ஒவ்வொரு குலம் உயர்வு தாழ்வு உடையதாக இருக்கிறது. எந்த ஒரு குலமும் அடியோடு



தாழ்ந்த குலமாக சமூகத்திலே ஒதுக்கி வைக்கப்பட்ட குலமாக ஆகவில்லை.

தீண்டாமை என்பது தமிழ்நாட்டில் நீண்டகாலத்திற்கு முன்னாள் இருந்ததில்லை. ஒரு பாட்டு. புறப்பொருள் வெண்பாமாலையில் எடுத்துக்காட்டாக தரப்பட்ட பாட்டு. மன்னன் தனக்காக பறை கொட்டிய வரை முரசு முழங்கிட அழைத்து அவனிடத்திலே சொல்கிறான். உன் பாட்டன் என் பாட்டனுக்கு முரசு கொட்டியவன். என் பாட்டன் அப்பொழுது வெற்றி பெற்றான். என் தந்தைக்கு உன் தந்தை முரசு கொட்டினான். என் தந்தையும் வெற்றி பெற்றான். இப்பொழுது நீ எனக்கு முரசு கொட்டி பறை அடித்து நான் போர்க்களத்திலே வெற்றி பெற்று வருகிறேன். அந்த மகிழ்ச்சியிலே உனக்கு இந்த கள்ளை பருக தருகிறேன் என்று 'கள்' என்றால் இன்றைக்கு இருக்கிற கள்ளை நினைத்து யாரும் வருத்தப்படாதீர்கள். அந்தக் கள் நல்ல ஆரோக்கியமான கள். அவர்களுக்கு தன் பாரம்பரியமாக வருகிற பட்டம் பறையர் என்பது. எனவே பறையர் என்றால் தாழ்ந்தவர்கள் அல்ல. பள்ளர் என்றால் தாழ்ந்தவர்கள் அல்ல. தீண்டாமை என்பது தமிழனுக்குரியதல்ல. திருவள்ளுவருக்கு உடன்பாடல்ல. திருமூலருக்கு ஏற்றதல்ல. வடலூர் வள்ளலார் கண்டித்தது. பாரதியார் வெறுத்தது.

பாரதிதாசன் அதைக் கண்டிப்பதற்கே கவிஞராக ஆனது. இருந்தாலும் சமூகத்திலே உள்ள சிலர் வாழ்க்கையிலே உள்ள சில போட்டிகள் காரணமாக சில இடங்களில் ஒரு குழுவிற்கும் இன்னொரு குழுவிற்கும் ஏற்படுகிற போராட்டம். அல்லது சில இடங்களிலே தூண்டப்பட்ட வன்முறை, திட்டமிட்டு செய்யப்பட்ட வன்முறை இவை காரணமாக இல்லாத ஒரு நகைப்பு ஜாதி நகைப்பு கூட சலித்துப் போகிற ஒரு சூழ்நிலை கூட இடைக்காலத்திலே ஏற்பட்டது.

### மக்கள் ஒன்றுபட்டு வாழ ஒருவழி காணப்பட்டாக வேண்டும்

மதவெறியிலேகூட யாரோ ஒரு சிலர் திட்டமிட்ட வன்முறையிலே ஈடுபடுவதன் காரணமாக எங்கிருந்தோ வருகிற பணத்திற்கு எவரோ மாரடிப்பது காரணமாக தமிழ்நாட்டு மக்கள் அனாவிசயமாக நீண்டகாலமாக உடன்பிறப்பு உணர்வோடு கட்டித் தழுவாவிட்டாலும் ஒரே வீட்டிலே சமைத்து சாப்பிடாவிட்டாலும் அவனும் நம்மைப்போல, என்று எண்ணுகிற அளவிற்கு இருந்த அந்த எண்ணம் இடையிலே பழுதுபட்டுப் போய் சமய நல்லிணக்கத்தை உறுதி செய்வதற்கு ஒரு பெரிய முயற்சி தேவைப்படுகிற ஒரு கால கட்டத்தில் நாம் இருக்கிறோம்.

அதையெல்லாம் பார்த்துத்தான் கலைஞர் அவர்கள் மிகத் தொலை நோக்கோடு இந்த சமுதாயத்திலுள்ள அனைவருக்கும் ஒரு பாடமாகவும் பயிற்சிக் கூடமாகவும் அமையட்டும் என்ற எண்ணத்தோடு இந்த சமத்துவ புரத்தை ஏற்படுத்த வேண்டும் என்று தீர்மானித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கெல்லாம் ஆணையிட்டு பல மாவட்டங்களில் இது நிறைவேற்றப்பட்டிருக்கிறது.


குறிப்பாக இந்த மாவட்டத்தில் நம்முடைய ஆட்சித் தலைவர் சந்தானம் அவர்கள் மிகுந்த ஆர்வத்தோடு உள்ளபடியே இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருக்க வரலாமா என்று எண்ணக்கூடிய அளவிற்குத் தன்னார்வத்தால் வந்த விளைவு இது. இது வெறும் ஜாதி வேற்றுமையை மறப்பதற்கான இடம் என்று சொன்னால் எவ்வளவு பொதுமக்கள் இந்த நன்மையைச் செய்கிறார்கள் என்று காட்டுவதற்காக செய்யப்பட்ட இந்த சமத்துவபுரம் மேட்டுக்குடியை இங்கே அழைத்துவரக் கூடிய அளவிற்கு வாய்ப்புடையதாக வளமுடையதாக அல்லது எழில் உடையதாக பயனுடையதாக சிறப்பாக அமைந்திருக்கிறது. ஒரு கோணத்தில் சந்தானம் அவர்களை சமத்துவபுரத்திற்கு ஒரு மிகப் பெரிய செல்வாக்கைத் தேடிக்கொடுத்ததற்காக நான் பாராட்ட விரும்புகிறேன். அதன்மூலமாக பயனடைவோர் அதிகம் போட்டி போட நேரிடும் என்பதற்காக எனது வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏனென்றால் நூறு பேர் என்றால் 120 பேர் வந்ததால் அதற்குள் நியாயமாக தேர்ந்து எடுக்க முடியும். 500 பேர் 1000 பேர் வந்தால் எப்படி செய்ய முடியும்? அப்புறம் இரண்டு பேர் ஒரே தகுதியுடையவர்கள். ஒருவருக்கு கிடைக்கும். ஒருவருக்குக் கிடைக்காது. இன்னும் சொல்லப் போனால் சில பேர் சொல்லுவார்கள், தான் இதைவிட தாழ்த்தப்பட்ட இடத்திலேயே இருந்திருக்கலாம். நான் இப்போது முன்னேறிவிட்டதாக நினைத்து தாழ்த்தப்பட்டோர்களில் சேராமல் விட்டுவிட்டேன் என்பார்கள். இதை எதற்குச் சொல்லுகிறேன் என்றால் எல்லாம் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திலேயே மட்டும் செய்யப்பட வேண்டும் என்பது என்னுடைய ஆசை.

### சாதி வேற்றுமைகள் மடிந்து ஒன்றுபடும் நம்பிக்கையை உருவாக்குவோம்

காண்கிறபோது எது இன்னும் சற்று வசதியாக பயனுள்ளதாக தெரிகிறதோ அதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்த முறையிலே சமத்துவபுரம் சமுதாயத்திலே இந்த இடத்திலேயே வாழ்கின்றவர்களுக்கு மட்டும் சமத்துவபுரம் அல்ல. இப்படி வாழ்கிற காரணத்தால் பக்கத்திலே உள்ளவர்களுக்கு ஜாதி வேற்றுமைகளுக்கு அப்பாற்பட்டு நாம் ஒன்றுபட்டு வாழமுடியும் என்ற நம்பிக்கையைத் தெக்கலூரிலே உள்ளவர்களுக்கு அவினாசியிலே உள்ளவர்களுக்குப் பக்கத்து கிராமத்திலே உள்ளவர்களுக்கு அதை உருவாக்க வேண்டும். இங்கு ஏற்பட்டிருக்கும் சமத்துவபுரம் ஒரு சான்று. கலப்பு மணம் புரிந்த தம்பதிகளுக்கு நாம் பாராட்டைத் தருகிறோம். என்றால் கலப்புமணம் செய்த அந்த தம்பதிகளுக்கு மட்டுமல்ல அந்த பாராட்டு. கலப்பு மணம் செய்து கொண்டு நிம்மதியாக வாழ முடியும் என்று மற்றவர்களுக்கு ஒரு நம்பிக்கையை வளர்ப்பதற்குக் காரணமாக இருக்கிறது என்ற முறையிலே பாராட்டு. ஜாதிகள் பட்டப்பெயரிலே இருக்கிறது தவிர எது உண்மை. இதில் யாரும் உயர்ந்தவர்கள் அல்ல. யாரும் தாழ்ந்தவர்கள் அல்ல. பிறவியிலேயே உயர்ந்த ஜாதி என்பதை புத்தரிலிருந்து அண்ணா வரையில் யாரும் ஒப்புக்கொள்ளவில்லை.

ஆதிசங்கராச்சாரியார் கூட வர்ணாசிரம தர்மத்திற்காக ஒப்புக்கொண்டாரே தவிர அவரைப் பொறுத்தவரையில் ஆதிதிராவிடரிடத்திலே அவரே ஞானம் பெற்றார். சங்கராச்சாரியார் எவ்வளவு தான் பரந்த நோக்கம் உடையவர் என்றாலும்கூட அவர் பின்னரே சொன்ன வேதாந்த கொள்கையிலே வேற்றுமையே கிடையாது. ஆண்டவர் உனக்குள் ஒன்று என்றால் அப்புறம் மனிதர்களுக்குள் என்ன வித்தியாசம். அய்யரும் ஒன்றுதான், ஆதிதிராவிடரும் ஒன்றுதான். கடைசி நிலையிலே பாடுபடுகிற மனிதரும் ஒன்றுதான்.



ஜாதி வேற்றுமை வன்முறை மோதலைத் தூண்டுகிறவர்களுக்கு இடம் கொடுக்காமலிருக்க உண்மைத் தமிழனாக நாம் வாழ ஒரு நல்ல வாய்ப்பாக அமைகிறது இதை துவக்கி வைக்கிற அதே நேரத்தில் இந்த பயனாளிகளுக்கு எனது உளமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல இந்த சமத்துவபுரத்தில் அமைக்கப் பட்டிருக்கிற பல்வேறு அமைப்புகள் நாமெல்லாம் மகிழ்ச்சி அடையத்தக்கதாக இருக்கிறது. பூம்புகாரை நினைவூட்டக் கூடிய அளவிற்கு வள்ளுவர் கோட்டத்தை நினைவூட்டக் கூடிய அளவிற்கு இங்கே தொலைகாட்சிப் பெட்டி வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு எளிமையான நூலகம் அமைக்கப்பட்டிருக்கிறது. நல்ல திருமணக்கூடம் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த திருமணக்கூடத்திலே தம்பதிகளுக்கு ஒரு திருமணத்தை நடத்தி வைக்கக்கூடிய நல்வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அதேபோல ஒரு துவக்கப் பள்ளிக்கூடம் அமைக்கப் பட்டிருக்கிறது. ஒரு சமுதாயகூடம் அமைக்கப் பட்டிருக்கிறது. நியாயவிலைக் கடை அமைக்கப் பட்டிருக்கிறது.

## ஆரோக்கியமான இடமாக சமத்துவபுரத்தை மாற்றுங்கள்

இப்படி பல்வேறு பணிகள் இங்கே வாழ்கிற மக்களுக்காக ஒருவேளை இங்குவரக்கூடிய பக்கத்து கிராமத்துமக்களுக்கும்கூட திருமணக்கூடம் பயன்படக் கூடிய அளவிற்கு மிகச்சிறப்பாக அமைக்கப் பட்டிருக்கிறது. அதற்காக என் உளமார்ந்த பாராட்டை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இப்படியெல்லாம் அரசாங்கம் ஒரு பொதுக்காரியம் என்ற நோக்கிலே செய்து கொடுத்து விட்டு ஒரு ஆறுமாதம் கழித்து வந்து பார்த்தால் அந்த இடம் அதுமாதிரி இருக்காது. ஏனென்றால் கலெக்டர் தினமும் வந்து பார்க்க முடியுமா? இந்த இடம் இன்றைக்கு எப்படியிருக்கிறதோ அப்படி எதிர்காலத்தில் இருப்பதற்கு இந்த சமத்துவபுரத்திலே குடியேறுபவர்கள் அவர்களே மனம் வைத்து ஒத்துழைத்து சமத்துவபுரத்தை நல்ல சுகாதாரமான இடமாக, நல்ல ஆரோக்கியமான இடமாக, ஏராளமான மரங்களை வளர்த்து மரங்களால் கிடைப்பது நிழல் மட்டுமல்ல, உயிரும் மரங்களால் தழைக்கிறது. நம்முடைய உயிரும் மரங்களால் தழைக்கிறது.

எனவே மரங்களை வளர்த்து ஒரு பசுஞ்சோலையாக சமத்துவபுரத்தை ஆக்கி என்றைக்கு வந்து பார்த்தாலும் இந்த மக்களுடைய பராமரிப்பிலே இந்த சமத்துவபுரம் சிறந்து விளங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



# திருமண உதவித் திட்டம் புதிய ஆணை



முதலமைச்சர் கலைஞர் 1999–2000 ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டைப் பற்றிக் குறிப்பிட்டு, இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில், குறிப்பாக வயது, கல்விச் சான்றிதழ் பெறுவதில் ஏற்படும் கால தாமதத்தையும், முறைகேடுகளையும் களையும் பொருட்டும், கல்விச் சான்றிதழ் உடனடியாகப் பெறுவதற்கு ஏற்ற வகையிலும், இத்திட்டத்தின் கீழ் உதவி பெறுவதற்கான கல்வித் தகுதியைப் பத்தாவது வகுப்பாக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது என்று அறிவித்திருந்தார். இத்திட்டத்தில் கல்வித் தகுதியை எட்டாவது வகுப்பிலிருந்து பத்தாவது வகுப்பு என்று உயர்த்தியதை ஏற்கெனவே நிதி உதவிக்காக விண்ணப்பம் செய்தவர்களைப் பொறுத்த வரையாவது மறுபரிசீலனை செய்திடவேண்டு மென்று பல்வேறு தரப்பிலிருந்தும் வைக்கப்பட்ட கோரிக்கைகளைப் பரிவுடன் பரிசீலனை செய்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள், 31–3–1999 வரை மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ் விண்ணப்பம் செய்தவர்களில் எட்டாம் வகுப்பு வரை படித்த ஏழைப் பெண்களுக்கும் தலா பத்தாயிரம் ரூபாய் வழங்கத்தக்க வகையில் உத்தரவு பிறப்பித்துள்ளார். மறுபரிசீலனை செய்து பிறப்பிக்கப்பட்டுள்ள இந்தச் சலுகை உத்தரவின் காரணமாக சுமார் பதினெட்டாயிரத்து ஐநூறு ஏழைப் பெண்கள் பயன்பெறுவார்கள். அதனால் அரசுக்கு 18.50 கோடி ரூபாய் கூடுதலாகச் செலவாகும்.

1–4–1999லிருந்து நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு, பத்தாம் வகுப்பு வரை படித்த ஏழைப் பெண்கள் மட்டுமே இந்தத் திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறுவதற்குத் தகுதியுடைவர்கள் ஆவார்கள்.

# விழுப்புர மாவட்ட சமத்துவபுரங்கள்

**வி**ழுப்புரம் மாவட்டம் அம்மையரகம் மற்றும் அரும்பட்டு ஆகிய இடங்களில் கட்டப்பட்ட சமத்துவபுரம் திறப்பு விழா அரும்பட்டு கிராமத்தில் நடைபெற்றது. விழாவிற்குப் போக்குவரத்துத்துறை அமைச்சர் க.பொன்முடி தலைமை தாங்கினார். சென்னை மாநகர மேயர் திரு.மு.க.ஸ்டாலின் சமத்துவபுரத்தை திறந்துவைத்தார். அப்போது அவர் ஆற்றிய உரையிலிருந்து...


*''விழுப்புரம் மாவட்டத்தில் பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் திறப்பு விழா, புதிய திட்டங்கள் அடிக்கல் நாட்டுவிழா, புதிய கட்டடங்கள் திறப்பு விழா, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ஆகியவற்றை இணைத்து இந்த சிறப்பான விழா நடத்தப்படுகிறது. இப்படி பல்வேறு நிகழ்ச்சிகளை இணைத்து அதில் என்னை பங்கேற்க வைத்தது மகிழ்ச்சி தருகிறது.*

*இதுவரை சமத்துவபுரங்களை முதல்வர்தான் திறந்து வைத்து இருக்கிறார். அவர் உடல் நலிவுற்ற காரணத்தால் நான் இந்த வாய்ப்பு பெற்று இருக்கின்றேன். என்னை பொறுத்தவரை சமத்துவபுரத்தை திறந்து வைப்பது முதல் வாய்ப்பு. இந்த வாய்ப்பு விழுப்புரம் மாவட்டத்தில் கிடைத்துள்ளது.*

**இது 39-வது சமத்துவபுரம்**

*நான் எத்தனையோ அரசு நிகழ்ச்சிகளில் சட்டமன்ற உறுப்பினர், மேயர் என்ற முறையில் பங்கேற்றது உண்டு. ஆனால் இந்த நிகழ்ச்சி என் வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்ச்சி. இந்த சமத்துவபுரத்தை பற்றி இங்கு பேசியவர்கள் தெளிவாகக் கூறினார்கள். அரும்பட்டு சமத்துவபுரம் மாநிலத்தில் 39–வது சமத்துவபுரமாகும். அரும்பட்டு சமத்துவபுரம் 15.9 ஏக்கர் பரப்பில் அமைக்கப்பட்டுள்ளன. இதன் நில மதிப்பு ரூ.4.93*





அம்மையகரத்துக்கு ரூ.1.08 கோடியும் செலவிடப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் எல்லாம் சிறப்பாக முடிக்கப்பட்டு இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் தாழ்த்தப் பட்டவர்கள் 40 பேர், பிற்படுத்தப் பட்டோர் 18 பேர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 40 பேர், முற்படுத்தப்பட்டோர் இரண்டு பேர் என்ற முறையில் வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இலட்சமாகும். ஒவ்வொரு வீடும் 5 சென்ட் நிலத்தில் ரூ.45 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ளன. அம்மையகரம் 40-வது சமத்துவபுரமாகும்.

அரும்பட்டு சமத்துவபுரத்தில் வீடு கேட்டு 182 பேர்கள் மனு செய்தனர். அதில் 100 பேர் மாவட்ட ஆட்சியரால் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டு அதில் 100 குடும்பத்தினர் குடியேறி உள்ளனர். 40-வது சமத்துவபுரம் அம்மையரகம் 22 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளன. இதன் நில மதிப்பு ரூ.16.87 இலட்சமாகும். இங்கும் ரூ.45 ஆயிரம் செலவில் ஐந்து சென்ட் நிலத்தில் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அடிப்படை மற்றும் அனைத்து வசதிகளுக்காக அரும்பட்டுக்கு ரூபாய் ஒரு கோடியும்,

இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழ் நாட்டில்தான் சமத்துவபுரத் திட்டம் நிறைவேற்றப் படுகிறது. 1997-98ல் சுதந்திர தினப் பொன்விழாவை முன்னிட்டு சிறப்புத் திட்டமாக அதை முதலமைச்சர் அறிவித்தார். இரண்டு ஆண்டுகளில் 100 சமத்துவபுரங்கள் அமைக்க முதல் கட்டமாக ரூ.37 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் வேலை வேகமாக நடக்கிறது. தி.மு.க. ஆட்சியை பொறுத்தவரை மக்களிடம் கொடுத்த தேர்தல் உறுதிமொழியை நிறைவேற்றி வருகிறது.

**சொன்னதைச் செய்வோம்**

ஆட்சிக்கு வந்தால் எப்படி திட்டங்களை நிறைவேற்றுவோம் என்று தேர்தல் நேரத்தில்



தெரிவிக்கப்பட்டது. அந்த வாக்குறுதிகளைப் புத்தகங்களாக மக்களுக்குத் தந்துள்ளோம். அதில் "சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்" என்று கூறியிருந்தோம். ஆனால் இப்போது சொல்லாததையும் செய்கிறோம். அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம் ஆகியவை நம்முடைய மாநிலத்தில்தான் செயல்படுத்தப்படுகின்றன.

**இலவச மின்சாரத் திட்டம்**

முன்பு குடிசை மாற்று வாரியத் திட்டம் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதன் முதலில் செயல்படுத்தப்பட்டது. எம்.ஜி.ஆர் முதல்வராக இருந்தபோது விவசாயத் தலைவர் நாரயணசாமி நாயுடு மின்கட்டணத்தில் ஒரு பைசா குறைக்கக் கோரி போராட்டம் நடத்தினார். அதை அன்றைய ஆட்சி ஏற்கவில்லை. 1989ல் தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது விவசாயிகள் கோரிக்கை எதுவும் வைக்காதபோது கலைஞர் விவசாயிகளுக்கு இலவச மின்சாரத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

**மகளிருக்கான திட்டங்கள்**

மேலும் மகளிருக்கான திட்டங்கள், சிறுவணிகக் கடன், பெண்களுக்குச் சொத்தில் உரிமை, வேலை வாய்ப்பில் அவர்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு, ஆரம்பப் பள்ளி ஆசிரியைகள், கர்ப்பிணி உதவித் திட்டம், விதவை மறுவாழ்வுத் திட்டம் ஆகியவற்றை கலைஞர்தான் நிறைவேற்றினார். இலவச பஸ்பாஸ் திட்டத்தை மாணவர்களுக்கு கலைஞர் கொண்டு வந்தார். நமது நாட்டில் உள்ள அனைத்து கிராமங்களிலும் மண்ணெண்ணெய் வழங்க நிலையங்களை கொண்டு வரப்படுகின்றன. இதன் மூலம் முறைகேடுகள் களையப்படும்.


**தீண்டாமை ஒழிக்க சமத்துவபுரம் திட்டம்**

தீண்டாமைக் கொடுமையை ஒழிக்க புத்தர், ராமானுஜர், ஏசு, காந்தி, பெரியார், அண்ணா போன்றவர்கள்பாடுபட்டனர். அவர்கள் வழியில் கலைஞர் சாதி சமய மோதல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க சமத்துவபுரத் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளார். தமிழ்நாட்டில் சமத்துவபுரங்களை கலைஞர் உருவாக்கி வருகிறார். இந்த சமத்துவபுரங்கள் இந்தியா முழுவதும் வரவேண்டும். அதற்காகவே முதலமைச்சர் உழைத்து வருகிறார்.

அவர் சமத்துவபுரத்தை ஆலயமாகவும், அங்கு குடியிருக்கும் மக்களை தெய்வங்களாகவும் நினைக்கிறார். எனவே அப்படிப்பட்ட சமத்துவபுரத்தை திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.


**நிக்கோலஸ் கருத்து**

நிக்கோலஸ் என்பவர் இந்தியாவில் இரண்டு ஆண்டுகள் சுற்றுலாவாசியாக சுற்றி அவர் நாடு திரும்பிய உடன் குறிப்பு எழுதியுள்ளார். அதில் இந்தியாவில் ஒரு இந்தியனைக் கூட பார்க்க முடியவில்லை என்கிறார். ஜாதியை சொல்கிறார்களே தவிர இந்தியன் என்று கூறவில்லை என்று சுட்டிக் காட்டியுள்ளார்.



**சமத்துவபுரத்தை ஆலயமாகக் கருதும் கலைஞர்**

1924ல் பெரியார் ஜாதிக் கொடுமைகளை எதிர்த்து வெற்றி கண்டார். வைக்கம் போராட்டத்தை நடத்தியவர் அவர். அது யாருக்காகத் தெரியுமா? மகாதேவன் என்ற தாழ்த்தப்பட்ட வழக்கறிஞருக்காக. முதல்வரால் ஆயலமாகக் கருதப்படும் சமத்துவ



உதயசூரியன், நடராஜன், ஞானசேகரன், மாரிமுத்து, திருவெண்ணை நல்லூர் ஊராட்சி ஒன்றிய தலைவர் துரைராஜ் ஆகியோர் பேசினார்கள்.


விழாவில் மாவட்ட கூடுதல் ஆட்சியர் செந்தில் குமார், மாவட்ட காவல்துறை

*புரத்தை இன்று திறந்து வைக்கும் வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.*

*– இவ்வாறு மேயர் மு.க. ஸ்டாலின் பேசினார்.*

அதிகாரி மு.ரவி, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி பெருந்தலைவர் செஞ்சி மஸ்தான், சின்னசேலம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் சுந்தரிமாணிக்கம், அரும்பட்டு ஊராட்சி தலைவர் காளியம்மாள், அம்மையகரம் ஊராட்சி தலைவர் வெண்ணிலா ஆகியோர் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட

விழாவில் மாவட்ட ஆட்சியர் பரம்ஜித்சிங் சிது கார்கில் போர் நிதிக்காக மாவட்டத்தின் சார்பில் ரூ.13,13,453ஐ மு.க.ஸ்டாலினிடம் வழங்கினார். முகையூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி. சம்பத் கார்கில் போர் நிவாரண நிதிக்கு ரூபாய் பத்தாயிரத்தை மு.க.ஸ்டாலினிடம் கொடுத்தார்.



**கலந்து கொண்டோர்**

இதில் அமைச்சர்கள் க.பொன்முடி, கு.சுந்தரம், முன்னாள் மத்திய அமைச்சர் டி.ஜி. வெங்கட்ராமன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஜி.சம்பத், சேதுநாதன், மணிக்கண்ணன், அழகுவேல், இரா.மூக்கப்பன்,

வருவாய்த்துறை அதிகாரி கிருஷ்ண மூர்த்தி நன்றி கூறினார். மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் நாராயணமூர்த்தி நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். ★

# முழுமையான உடல் பரிசோதனைத் திட்டம்

மாண்புமிகு தமிழக முதல்வரின் நல்லாசியுடன், மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர் அவர்களால், முழு உடல் பரிசோதனைத் திட்டம் சென்னை அரசு பொது மருத்துவமனையில் மே மாதம் 1997 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. 1997 மே மாதம் முதல் மே 1999 வரை 17,157 நபர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டத்தில் ஒரு நபருக்கு ரூ.250 கட்டணம் செலுத்த வேண்டும். இதில் ரூ.150 இத்திட்டத்தின் முன்னேற்றத்திற்கும் ரூ.100 மருத்துவமனைக்கும் சேர்ந்துவிடும். இந்தத் திட்டத்தின் மூலம் இதுவரை பயனடைந்தவர்களின் எண்ணிக்கை.

ஆண்கள் –10,157 பெண்கள் – 7,000

இந்தத் திட்டத்தின் மூலம் கீழ்க்கண்ட பரிசோதனைகள் செய்யப்படுகின்றன.

இரத்தப்பரிசோதனை

- இரத்த அணுக்களின் எண்ணிக்கை
- ஈ.எஸ்.ஆர். (ESR)
- இரத்த சோகை அளவு – ஹீமோகுளோபின்
- சர்க்கரை, யூரியா, கொழுப்பு, மஞ்சள் காமாலை
- பால்வினை நோய்
- இரத்த வகை (Blood Group)
- சிறுநீர் பரிசோதனை
- மார்பு எக்ஸ்ரே
- இருதய வரைவு படம் (E.C.G.)
- அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் (வயிற்றுப் பகுதி மட்டும்)

கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்த திட்டம் சென்னை, புறநகர் பகுதிகள், பல்வேறு தமிழக மாவட்டங்கள், ஆந்திர மாநிலம் மற்றும் சுற்றியுள்ள மாநிலங்களில் சிறப்பான வரவேற்பை பெற்றுள்ளது.

பலதரப்பட்ட மக்கள் இத்திட்டத்தினால் நாள்தோறும் பயனடைகின்றனர். கடந்த இரண்டாண்டு பணியின் மூலமாகவும் அனேக மக்களின் பரிந்துரைகளின் பேரிலும் இந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஏற்கெனவே செய்து கொண்டிருக்கும் பரிசோதனைகளோடு கீழ்க்கண்ட பரிசோதனைகளையும் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனினும் தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள தனிநபர் கட்டணமாகிய ரூ.250ல் மேற்குறிப்பிட்ட எல்லாப் பரிசோதனைகளும் செய்வதென்பது இயலாது. மேலும் எல்லா பரிசோதனைகளும் எல்லோருக்கும் தேவைப் படுவதில்லை. எனவே ஆரம்ப தலைக்கட்டணமாக ரூ.250ம் மேற்படி பரிசோதனைகளுக்கு (அவரவர்



உடல்நிலைக்கு தக்கபடி மருத்துவரால் முடிவு செய்யப்படும்) தனிக்கட்டணமும் வசூலிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விரிவு படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் செய்யவிருக்கும் பரிசோதனைகளின் விவரம் வருமாறு

- பாதிக்கப்பட்ட உறுப்புக்களின் எக்ஸ்ரே
- சீ.டி.ஸ்கேன் (மூளை, வயிறு மற்றும் நெஞ்சுப்பகுதி)
- ஈ.ஈ.ஜீ (வலிப்பு நோய் கண்டறிய)
- குடல் உள்நோக்கி பரிசோதனை (Endosocpy)
- எக்கோ கார்டியோகிராம் (Echocardiogram)
- ட்ரெட் மில் டெஸ்ட் (இருதய நோய் கண்டறிய)
- தைராய்டு சுரப்பியின் வேலைத்திறன் ஆய்வு
- பெண்களுக்குப் கர்ப்பப்பை பரிசோதனை (புற்றுநோய், கிருமி நோய்)
- ஜீ.டி.டி. (நீரிழிவு நோய் கண்டறிய)
- மான்டூ டெஸ்ட் (டி.பி. நோய் கண்டறிய)

மேற்படி கண்ட பரிசோதனைகள் தனியார் மருத்துவமனைகளில் செய்ய வேண்டுமானால் குறைந்தபட்சம் ரூ.500 செலவாகிறது. ஆனால் இத்திட்டத்தில் மிகக் குறைந்த கட்டணமே வசூலிக்கப்படுகிறது.

வழக்கம்போல் இத்திட்டம் காலை 7 மணி முதல் மதியம் 1 மணி வரை செயல்படும். பொதுமக்கள் வசதிக்காக முன்பணம் ரூ.50 செலுத்தி முன்பதிவு வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த முன்பதிவு கட்டணம் அந்த நபர் பரிசோதனைக்கு வரும்போது கட்டணக் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படும். பொதுமக்கள் அனைவரும் இத்திட்டத்தின் மூலம் பயனடைய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ●

# வகுப்பு நல்லிணக்கத்தை வலுப்படுத்த

சமீபத்தில் திருநெல்வேலியில், மக்கள் சாலை மறியல் செய்து போக்குவரத்தைத் தடுத்து நிறுத்தினார்கள். அரசு போக்குவரத்துக் கழகங்களின் சேவை குறித்து அதிருப்தி தெரிவிப்பது இதன் நோக்கம். இந்த அதிருப்திக்கு உண்மையான காரணங்கள் இருக்கலாம். ஆனால், அவர்கள் ஒன்றை உணரத் தவறிவிட்டார்கள். அவர்களுடைய பகுதியில் நடந்த சாதி மோதல்களும் பேருந்துப் போக்குவரத்துச் சேவைகள் மோசமானதற்குக் காரணமாயிருந்தன. தென் மாவட்டங்களில் நடந்த சாதி வகுப்பு மோதல்கள்தான் அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் மோசமான நிதிநிலைக்குக் காரணம் என்று மாநிலப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. க.பொன்முடி கூறியிருக்கிறார். சமீப காலத்தில், வகுப்புக் கலவரங்களின்போது, 11 பேருந்துகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. சாதி வகுப்பு மோதல்கள் பொதுமக்களை எவ்வாறு பாதிக்கக்கூடும் என்பதற்கு இது ஓர் உதாரணம்.

சாதி, வகுப்பு மோதல்களின் விளைவுகள் மிகக் கடுமையானவை மட்டுமின்றி கொடுமையானவையும் கூட, பல சமயங்களில் அப்பாவி மக்கள் கொல்லப்படுகிறார்கள் அல்லது காயமடைகிறார்கள். வீடுகளும் கடைகளும் தீக்கிரையாக்கப்படுகின்றன. பதற்ற நிலை ஏற்பட்டு மக்கள் வீடுகளிலேயே முடங்கிக் கிடக்கிறார்கள். இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு, பொருளாதாரத்திற்கு இழப்பு ஏற்படுகிறது. ஆனால், இவற்றையெல்லாம் விடக் கவலையளிப்பது இந்த மோதல்களால் சமுதாயத்தில் ஏற்படுகின்ற பிளவுகளும் வடுக்களும் ஆகும். சமுதாயத்தில் ஏற்படும் பிளவுகள் நீண்ட காலத்திற்கு மாறாமல் நீடிக்கின்றன. மோதல்கள் விட்டுச் சென்ற வடுக்கள் மக்களின் ஒற்றுமைக்கு ஆபத்தாக நீடித்து நிற்கின்றன. மாநிலத்திலும் நாட்டிலும் அமைதியும் வளமும் நிலவுவதற்கு இன்றியமையாத ஒற்றுமை பாதிக்கப்படுகிறது.

தமிழ்நாடு – சிறப்பான வளர்ச்சியும் முன்னேற்றமும் கண்டுள்ள இந்த மாநிலம் – சாதி வகுப்புக் கலவரங்களுக்குப் பலியாகவேண்டுமா? தமிழ்மக்கள் நீண்ட நெடுங்காலமாக சகிப்புத் தன்மையுடன் வாழும் மரபுக்கு உரியவர்கள். பல்வேறு சமயங்களையும் பிராந்தியங்களையும் சேர்ந்த பல இலட்சக்கணக்கான மக்கள் தமிழ்நாட்டைத் தங்கள் தாயகமாக்கிக் கொண்டுள்ளனர். பல நூற்றாண்டுகளாக தமிழ்நாட்டில் மக்கள் முழுமையாக நல்லிணக்கத்துடன் வாழ்ந்து வந்துள்ளனர். இன்றும்கூட, இப்படியே வாழ்ந்து வருகிறார்கள். மற்ற சமயங்களுக்கு மரியாதை தருவது இம்மாநில மக்களின் உணர்வில் ஊறியிருக்கிறது. அதனால்தான் ஆயிரக்கணக்கான இந்துக்கள் வேளாங்கண்ணி மாதாகோவிலுக்கும் நாகூர் தர்காவிற்கும் செல்லுவதைக் காணமுடிகிறது. கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் புகழ்பெற்ற சில இந்துக் கோவில்களுக்குச் செல்வதைக் காண்பதும் அதியசம் அல்ல. எந்தச் சமயத்தின் பண்டிகைகள் வந்தாலும் அதைக் கொண்டாடும் மக்களுக்குப் பிற சமயங்களைச் சேர்ந்த நண்பர்கள் வாழ்த்துக் கூறுவது இங்கு வழக்கம். வாழ்த்து வழங்குவோரை விருந்துக்கழைத்து உபசரிப்பதும் வழக்கமே. அலுவலகங்களிலும் வர்த்தக நிறுவனங்களிலும் எல்லாச் சமயத்தினரும் பரஸ்பரம் முழு நம்பிக்கையுடன் பழகும் சூழ்நிலையே காணப்படுகிறது.

வரலாற்று ரீதியாகத் தமிழ்நாடு சமூக சீர்திருத்தங்களின் முன்னணியில் நின்றுள்ளது. எனவே தமிழ்நாட்டில் வகுப்புப் பூசல்களுக்கு இடமே இருக்கமுடியாது. குறிப்பாக, இந்த நூற்றாண்டில் தந்தை பெரியார் சாதிவாதத்தை எதிர்த்து நீண்ட போராட்டம் நடத்தினார். 1924இல் அப்போதைய திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் அவர் நடத்திய வைக்கம் ஆலயப் பிரவேசப் போராட்டம் புகழ்பெற்றது. வைக்கத்தில் உள்ள ஆலயத்தைச் சுற்றியுள்ள தெருக்களில் தலித் மக்கள் நடக்கக்கூடாது என்று இருந்த தடையை உடைப்பதற்கு அவர் இந்தப் போராட்டத்தை நடத்தினார். அதற்காக அவர் இரண்டு முறை கைதுச் செய்யப்பட்டார். இந்தப் போராட்டம் அவருக்கு வைக்கம் வீரர் என்ற புகழைத்தந்தது. 1939இல் மதுரையில் வைத்தியநாத அய்யர் தாழ்த்தப் பட்ட மக்களை மீனாட்சியம்மன் ஆலயத்திற்குள் அழைத்துச் சென்றார். அந்த ஆலயப் பிரவேசத்திற்கு முன்பு அவர் தீண்டாமையை எதிர்த்துத் தீவிரப் பிரசாரம் நடத்தினார். இந்து மதத்தில் தீண்டாமைக்கு இடமே இல்லை என்று அவர் வேதங்களிலிருந்தும்



திருவள்ளூரில் நடைபெற்ற பல்துறை பணி விளக்கக் கண்காட்சியினை மாண்புமிகு அமைச்சர்கள் திரு. வ. முல்லைவேந்தன் மற்றும் திரு. க. சுந்தரம் ஆகியோர் பார்வையிடுகிறார்கள்.

மற்றும் பல சமய நூல்களிலிருந்தும் மேற்கோள்கள் காட்டி ஆணித்தரமாகக் கூறிவந்தார்.

இப்படியெல்லாம் இருந்துள்ள தமிழ்நாட்டில் சாதி மோதல்களும் வகுப்புக் கலவரங்களும் ஏன் நடக்கின்றன? காரணம் என்னவாக இருந்தாலும் அமைதிப் பூங்காவான தமிழ்நாட்டில் இவை விதிவிலக்கான சம்பவங்கள் என்றே கூறவேண்டும். ஆனால் இத்தகைய விதிவிலக்கான சம்பவங்கள்கூட புற்றுநோயாக மாறிவிடக்கூடிய அபாயம் இருக்கிறது. சமூகத்தையும் நாட்டையும் செல்லரித்துவிடக் கூடிய இந்த அபாயம் நேராமல் தடுப்பதற்கு சாதி வகுப்புச் சண்டைகள் மீண்டும் மூளாமல் பார்த்துக்கொள்வது மிக மிக அவசியமாகும்.

எனவே, தமிழ்நாடு சமூக நல்லிணக்கத்தை வளர்ப்பதற்காக சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. முதலாவதாகக் குறிப்பிடத்தக்கது மாவட்டங்களுக்கும் மாநில அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் வைக்கப்பட்டிருந்த பெயர்களை மாற்றியதாகும். இவற்றுக்குப் பல்வேறு சாதிகளைச் சேர்ந்த தலைவர்களின் பெயர்களைச் சூட்டியிருந்தது மற்ற சாதிகளைச் சேர்ந்தவர்களுக்கு மனக் கசப்பை ஏற்படுத்தியது. பல்வேறு சமூகங்களிடையே இதனால் பொறாமையும் போட்டியும் ஏற்பட்டுப் பூசல்கள் உருவாயின. முன்னதாக மாநில அரசு தெருப் பெயர்களில் இருந்த சாதிப் பெயர்களை நீக்கியிருந்தது. தமிழ்நாட்டு மக்களிடையே வகுப்பு நல்லிணக்கத்தை வளர்ப்பதற்காக மாநில அரசு தனிச்சிறப்பான ஒரு திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் அமைப்பது இந்தத் திட்டம். இந்தச் சமத்துவபுரங்களில் பல்வேறு சமுதாயங்களையும் சேர்ந்த மக்களும் ஒன்றாக வாழும்படி குறிப்பிட்ட விகிதங்களில் குடியமர்த்தப்படுகிறார்கள். இவற்றில் மக்கள் நலமாக வாழ்வதற்கு வேண்டிய அடிப்படை வசதிகள் எல்லாம் அமைக்கப்படுகின்றன.

1997–98ல் மாநிலம் முழுவதிலும் 50 சமத்துவபுரங்களை அமைப்பதற்கு ரூ.17.5 கோடி நிதி வழங்கப்பட்டது. 1998–99இலும் 50 சமத்துவபுரங்கள் அமைப்பதற்கு இதே அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சில மாவட்டங்களில் இரண்டு அல்லது மூன்று சமத்துவபுரங்கள் அமையக்கூடும். இதுவரை பல்வேறு மாவட்டங்களிலும் 30 சமத்துவ புரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சாதிகளிடையே கலப்பு மணங்களை ஊக்குவிப்பதற்கான திட்டம் ஒன்று 1974 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் கலப்பு மணம் செய்துகொள்ளும் தம்பதியருக்கு ரூ.5,000 உதவித்தொகை வழங்கப்பட்டது. 1996இல் இந்தத் தொகை ரூ.10,000 ஆக உயர்த்தப்பட்டது. கலப்புமணத் தம்பதியில் ஒருவர் ஷெட்யூல் வகுப்பைச்

சேர்ந்தவராக இருந்தால் இதைப்போல் இரண்டு மடங்கு தொகை வழங்கப்படுகிறது.

தென் மாவட்டங்கள் பொருளாதார ரீதியாக ஓரளவு பின்தங்கிய நிலையில் இருப்பதும் அங்கு சாதிக் கலவரங்கள் மூள்வதற்கு ஒரு காரணமாக உள்ளது என்று பொதுவான ஒரு கருத்து நிலவுகிறது. தென் மாவட்டங்களின் சமூக, பொருளாதார, தொழில்துறை வளர்ச்சிக்கென உயர் அதிகார ஆணையம் ஒன்றை மாநில அரசு அமைத்துள்ளது. ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி திரு. ரத்தினவேல் பாண்டியன், இந்த ஆணையத்தின் தலைவராயிருக்கிறார். தென் மாவட்டங்களின் பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக உள்ள அம்சங்களைக் கண்டறிந்து மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான யோசனைகளை இந்த ஆணையம் தெரிவிக்கும். வரும் ஆண்டு ஜனவரி மாதத்திற்குள் ஆணையத்தின் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.



மக்களிடையே சகோதர உணர்வை வளர்க்கும் நோக்கத்துடன் காந்தி ஜெயந்தி, பொங்கல் முதலான முக்கிய விழாக்களின்போது கோவில்களில் சமபந்தி போஜனங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இந்த விருந்துகளில் பல்வேறு சாதிகளையும் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொள்கிறார்கள். முதலமைச்சர், அமைச்சர்கள், மாவட்ட ஆட்சியர்கள் முதலான பிரமுகர்களும் இவற்றில் கலந்து கொள்கிறார்கள். மக்களிடையே ஒற்றுமை உணர்வைப் பரப்புவதற்கு இவை பெரிதும் உதவுகின்றன.

### சட்டங்களைக் கண்டிப்பாக அமல் செய்தல்


சமூக நல்லிணக்கத்தை வளர்ப்பதற்கான இத்தகைய நடவடிக்கைகளுடன் கூடவே சாதி வகுப்புப் போராட்டங்களைத் தூண்டிவிடுகின்ற காரணங்களை நீக்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. சிவில் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், ஷெட்யூல்டு வகுப்பினர் மற்றும் பழங்குடியினருக்கெதிரான கொடுமைகளைத் தடுத்தல் சட்டம் ஆகியவற்றைக் கடுமையாக செயல்படுத்துவது ஒரு முக்கிய நடவடிக்கை ஆகும். ஷெட்யூல்டு வகுப்பு மக்களிடம் தரக் குறைவாகப் பேசுவது டீக்கடைகளில் அவர்களுக்குத் தனியான டம்ளர்கள் வைப்பது போன்ற அவமதிப்புகளால் இவர்களுடைய மனித உரிமைகள் மீறப்படாமல் பார்த்துக்கொள்ள இது உதவுகிறது. இந்தச் சட்ட ஷரத்துக்களை கடுமையாக அமல் செய்வதற்கென ஒவ்வொரு மாவட்டத்திலும் காவல் துறையின்கீழ் தனிப் பிரிவு செயல்பட்டு வருகிறது. மக்களிடையே அமைதியைப் பாதுகாப்பதற்கும் வகுப்புகளிடையே பதற்றநிலை ஏற்படுத்தக்கூடிய காரணங்களை அகற்றுவதற்கும் என மாவட்ட, வட்ட நிலைகளில் அமைதிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### பல்துறை பிரச்சார இயக்கம்

வகுப்பு ஒற்றுமையை வளர்ப்பதற்கும் தீண்டாமையை ஒழிப்பதற்கும் உதவும் நோக்கத்துடன் இப்போது தமிழக அரசு எல்லா மாவட்டங்களிலும் பல்துறை பணி விளக்க இயக்கம் ஒன்றை நடத்தி வருகிறது. திரைப்படங்கள், இசை—நாடக நிகழ்ச்சிகள் முதலான நிகழ்ச்சிகள் இந்த இயக்கத்தில் நடத்தப்படுகின்றன. வகுப்பு வாதம் தீண்டாமை போன்ற தீமைகள் பற்றி மக்களிடையே விழிப்புணர்வை உருவாக்கும் வகையில் நிகழ்ச்சிகள் அமைக்கப்படுகின்றன. பெருமளவில் சுவரொட்டிகள் ஒட்டுவதும் இந்த இயக்கத்தின் மற்றொரு முக்கிய அம்சமாகும். இவை தவிர பேரணிகள் மனிதச் சங்கிலிகள் போன்ற நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்துவதற்கும் தீண்டாமையை ஒழிப்பதற்கும் சிறந்த முறையில் சேவைபுரியும் பத்திரிகைத் துறையினருக்கு மாநில அரசு விருதுகள் வழங்கி பெருமைப் படுத்தவிருக்கிறது. 1999ஆம் ஆண்டை சமூக நல்லிணக்கம் தீண்டாமை எதிர்ப்பு ஆண்டாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் அமைதியும், நல்லிணக்கமும் நிலவும் சூழ்நிலை தொழில் துறையிலும் விவசாயத் துறையிலும் சிறப்பான சாதனைகள் காண உதவியுள்ளது. மாநில மக்களின் வாழ்க்கை நிலையை மேலும் உயர்த்துவதற்காக இந்தத் துறைகளில் ஏற்படும் முன்னேற்றத்தின் வேகம் முடுக்கிவிடப்பட்டுள்ளது. சமூகத்தில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் பேணிக் காப்பதற்கு மக்கள் ஒத்துழைத்தால்தான் இந்த முயற்சிகள் பலன் அளிக்க முடியும். மக்களின் ஒத்துழைப்புடன் நல்லிணக்கமும் அமைதியும், தழைத்து வரவிருக்கும் புதிய நூற்றாண்டில் நாட்டிலேயே வளர்ச்சி பெற்ற மாநிலம் என்ற பெருமையை தமிழ்நாடு அடையும் என்று நிச்சயமாக நம்பமுடியும்.

— வி.சங்கரன்



# ‘ஹட்கோ நிவாஸ்’ கடன் திட்டம்

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தமிழகம் முழுவதும் பல்வேறு திட்டங்களில் வீட்டு மனைகள்/ வீடுகள்/அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டி மக்களின் வீட்டு வசதித் தேவையைப் பூர்த்தி செய்து வருகிறது. இவ்வாறு வாரியம் செயல்படுத்தும் திட்டங்களில் உள்ள மனைகள்/வீடுகள் ஆகியவற்றை மொத்த கொள்முதல் திட்டம் (outright purchase) மற்றும் தவணைமுறைத் திட்டம் (Hire Purchase System) மூலமாக பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. தவணை முறைத் திட்டத்தில் குடியிருப்புகளின் விலையை வாரியம் முதலில் 25% / 40% முன்வைப்புத் தொகையாக பெற்றுக் கொண்டு மீதம் உள்ள 75% / 60% தொகையை எளிய மாதத் தவணையில் வசூலித்து வருகிறது.

தற்போது ஹட்கோ நிறுவனம் தன் ‘ஹட்கோ நிவாஸ்’ எனும் திட்டத்தின் மூலம் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் ஒதுக்கீடு பெறும் அனைத்து ஒதுக்கீடுதாரர்களுக்கும் வீட்டு வசதி வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகையை கடனாக எளிய வட்டி விகிதத்தில் தருவதற்கு முன் வந்துள்ளது. இந்த கடன் புதிதாக ஒதுக்கீடு பெறும் ஒதுக்கீடுதாரர்களுக்கு மட்டுமின்றி ஏற்கெனவே ஒதுக்கீடு பெற்று மாதத்தவணைகள் செலுத்தி வரும் பழைய ஒதுக்கீடுதாரர்களுக்கும் கிடைக்கும் வகையில் ஹட்கோ நிறுவனம் வழிவகை செய்துள்ளது. ஏற்கெனவே மாதத்தவணை செலுத்தி வரும் ஒதுக்கீடுதாரர்கள் இதுவரை செலுத்தியுள்ள தொகை போக மீதம் வீட்டு வசதி வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகையை ஹட்கோ நிவாஸ் மூலம் கடன் பெற்று வீட்டு வசதி வாரியத்திற்கு முழுவதுமாக செலுத்திவிடலாம். ஹட்கோ நிவாஸ் மூலம் கடன் பெறும் தொகையை எளிய தவணைகளில் ஹட்கோ நிறுவனத்திற்குச் செலுத்தலாம். எனவே வீட்டு வசதி வாரியத்தின் மூலம் ஏற்கெனவே ஒதுக்கீடு பெற்ற ஒதுக்கீடுதாரர்கள் ஹட்கோ நிறுவனத்தின் மூலம் கிடைக்கப் பெறும் கடன் வசதியைப் பயன்படுத்தி வீட்டு வசதி வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகையை முழுமையாக செலுத்தலாம் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இத்திட்டம் குறித்த கூடுதல் விவரங்களை அந்தந்தப் பகுதி வீட்டு வசதி வாரிய அலுவலகங்களிலும் எழும்பூர் தாளமுத்து நடராசன் கட்டடத்தில் உள்ள ஹட்கோ நிறுவனத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

# கால்நடை வளம்

உலக அளவிலான கால்நடை வளத்தில் இந்தியா குறிப்பிடத்தக்க இடம் வகிக்கிறது. உலக மொத்த எருமைகளின் எண்ணிக்கையில் 53 சதவிகிதம், வெள்ளாடுகளில் 20 சதவிகிதம், மாடுகளில் 15 சதவிகிதம், கோழியினம் மற்றும் செம்மறியாடுகளில் தலா 4 சதவிகிதம் மற்றும் உலக வெண் பன்றிகளின் எண்ணிக்கையில் ஒரு சதவிகிதமும் இந்தியாவில் உள்ளன. இந்தியாவில் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள குடும்பங்கள் தங்கள் சொந்த உழைப்பிலேயே இத்தொழிலை மேற்கொண்டுள்ளன.

உழவுக்கும், வண்டி இழுவைக்குமான கால்நடைகளின் எண்ணிக்கை நம் நாட்டில் குறைந்து வருகிறது. பண்ணை வேலைகளுக்கான உழைப்பு கடந்த 1961ஆம் ஆண்டில் மனிதர்கள் மூலம் 23 சதவிகிதம், இழுவை மாடுகள் மூலம் 72 சதவிகிதம் மற்றும் இயந்திரங்கள் மூலமாக 5 சதவிகிதம் என்றிருந்த பங்கீடு, 1991ஆம் ஆண்டில் முறையே 10,23,67 சதவிகித அளவுகளாக மாறிவிட்டது. இயந்திரங்களின் உபயோகம் அதிகரித்து, வண்டி மாடுகளின் பங்கீடு குறைந்து விட்டது. இதன் காரணமாக அவற்றிற்கான தீவனத்தேவை குறைந்து, பொதுவிடங்களின் பயன்பாடும் குறைந்து விட்டாலும் கூட, இன்னும் தேவையை விட மூன்று மடங்கு அதிகமாகவே வண்டி மாடுகளின் எண்ணிக்கை நம் நாட்டில் உள்ளது.

தமிழ்நாட்டில் கடந்த 1994ஆம் ஆண்டு கால்நடை கணக்கீட்டின்படி மாடுகள் 35 சதவிகிதம், எருமைகள் 11 சதவிகிதம், ஆட்டினம் 45 சதவிகிதம் மற்றும் பன்றிகள் 2 சதவிகித அளவுகளில் உள்ளன. கடந்த 30 ஆண்டுகளில், மாடுகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு 0.3 சதவிகிதம், எருமைகள் 1.4 சதவிகிதம், வெள்ளாடுகள் 2.2 சதவிகிதம் மற்றும் கோழியினம் 4.4 சதவிகிதம் உயர்ந்துள்ளன. வெளிநாட்டின மற்றும் கலப்பின மாடுகளின் எண்ணிக்கை கடந்த ஐந்து ஆண்டுகளில் 64 சதவிகிதம் உயர்ந்துள்ளது. உள்நாட்டின் மாடுகள் இக்கால அளவில் 12 சதவிகிதமும், எருமைகள் எண்ணிக்கையில் 6.3 சதவிகிதமும் குறைந்துள்ளது.



இரண்டு எக்டருக்கு குறைவான நிலமுள்ள விவசாயிகளிடம் 56 சதவிகிதம் மாட்டினமும், 62 சதவிகிதம் ஆட்டினமும் காணப்படுகின்றன. கால்நடை மூலமான வருவாய்

விவசாயிகளின் மொத்த வருவாய் அளவில் மூன்றில் ஒரு பங்காகவும், மாநில வருவாயில் பத்தில் ஒரு பங்காகவும் உள்ளது. கால்நடைகள் மூலமான வருவாய் ஆண்டு முழுவதும் கிடைக்கிறது. விவசாய நடவடிக்கைகளால் குறிப்பிட்ட பருவத்தில் மட்டுமே வருவாய் கிடைக்கும். எனவே, ஆண்டு முழுவதும் வருவாயையும், வேலை வாய்ப்பையும் விவசாயிகளுக்கு வழங்குவது கால்நடை வளர்ப்பே ஆகும். மேலும், கால்நடை வளர்ப்பில் 60 சதவிகிதம் பெண்களின் உழைப்பே செலவிடப்படுகிறது. இக்காரணங்களுக்காகவே, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் போன்ற அரசுத் திட்டங்களில் கால்நடை வளர்ப்பிற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

### கால்நடை உற்பத்திக் குறியீடு

கால்நடைப் பராமரிப்பிற்கான திட்ட ஒதுக்கீடு வேளாண்மைத் தொழிலுக்கான ஒதுக்கீட்டில் துவக்கத்தில் 5.5 சதவிகிதமாக இருந்து, 7.1 சதவிகிதமாக உயர்த்தப்பட்டு மீண்டும் 4.5 சதவிகிதமாக குறைக்கப்பட்டு விட்டது. கால்நடைப் பராமரிப்புத் தொழிலுக்கான முதலீட்டில் பெரும் பங்கு தனியார் முதலீடே ஆகும்.

கால்நடை உற்பத்திப் பொருள்களின் மதிப்பு 1985-1992ஆம் ஆண்டுகளுக்கிடையே ஆண்டிற்கு ஆறு சதவிகித அளவில் வளர்ச்சி அடைந்துள்ளது. கோழியின உற்பத்திப் பொருட்களின் மதிப்பு 15 சதவிகிதமும், இறைச்சிப் பொருட்களின் மதிப்பு ஐந்து சதவிகிதம் வீதமும் உயர்ந்துள்ளன. இவற்றின் ஏற்றுமதி மதிப்பு ஆண்டிற்கு 13 சதவிகித அளவில் உயர்ந்து 1.8 மில்லியன் டாலர் அளவை எட்டியுள்ளது. என்றாலும், உலகச் சந்தையில் இந்திய ஏற்றுமதி மதிப்பு எருமை இறைச்சியில் 0.6 சதவிகிதம், ஆட்டிறைச்சியில் 0.8 சதவிகிதம் மற்றும் முட்டையில் 0.3 சதவிகிதம் என மிகக் குறைந்த அளவுகளிலேயே உள்ளது.



இந்தியாவில் தனிநபர் ஒரு ஆண்டில் உட்கொள்ளும் அளவுகள் பால்-65 கிலோ, முட்டை-26, மாட்டிறைச்சி-1.1 கிலோ, ஆட்டிறைச்சி-0.7 கிலோ, கோழி இறைச்சி-0.5 கிலோ என உள்ளன. இது அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா நாடுகளில் உட்கொள்ளப்படும் பால் அளவில் பாதியாகவும், சைனாவில் உட்கொள்ளப்படும் கோழி இறைச்சியில் 12 சதவிகிதமாகவும் மட்டுமே உள்ளது.

### எதிர்கால வாய்ப்புகள்

உலக வங்கி மதிப்பீட்டின்படி கி.பி.2020ஆம் ஆண்டில் கால்நடைப் பொருட்களின் தேவை-பால்-497, முட்டை-7.2, கோழி இறைச்சி-1.35, ஆட்டிறைச்சி-2.57 மற்றும் மாட்டிறைச்சி-3.74 மில்லியன் டன் அளவுகளில் இருக்குமென குறிப்பிடப்படுகிறது. இவற்றில், பால் நீங்களாக மற்றவற்றின் உற்பத்தி தேவையைக் காட்டிலும் கூடுதலாக இருக்குமெனவும், பாலில் மட்டும் 43.4 சதவிகிதம் (216 மில்லியன் டன்) பற்றாக்குறை நிலவும் எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நூற்றாண்டின் இறுதியிலேயே கால்நடை உற்பத்தி சாதனங்களில் அமைப்பு ரீதியான மாறுதல்கள் ஏற்பட்டு, அதிக முதலீட்டில், வணிக ரீதியிலான நோக்கத்தில் பெரிய அளவில் கால்நடை மற்றும் கோழிப் பண்ணைகள் அமைக்கப்படுமென எதிர் நோக்கப்படுகிறது. அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகள் மூலமாக பால் உற்பத்தியிலும், தனியார் முதலீடு மூலமாக கோழிப் பண்ணைத் தொழிலும் இதுவரை முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

கால்நடை மற்றும் கோழி இனங்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல், அமைப்பு ரீதியாகவும், வணிக மற்றும் தொழில்நுட்ப மாறுதல்கள் ரீதியாகவும், விற்பனைக்கான கட்டுப்பாட்டைப் பெறுதல் போன்றவை கால்நடை உற்பத்தியாளர்களின் எதிர்கால நோக்கங்களாக அமையலாம்.

கிராமப்புறங்களில், குறைந்த வருவாய் அளிப்பதாகவும், வேலைவாய்ப்பு வழங்குவதாகவும் கால்நடைத் தொழில்கள் அமைந்துள்ளன. அவற்றின் மூலமான வருவாயையும், அவற்றின் உற்பத்தித் திறனையும் பெருக்க வேண்டுமெனில் இத்தொழிலில் அதிக அளவிலான நிதி முதலீடும்,

தொழில்நுட்ப முன்னேற்றங்களைச் செயல்படுத்துவதும் அவசியமாகும்.

அரசுத் திட்டங்கள் மூலமாக கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவோருக்கு தனிப்பட்ட முறையில் மான்ய உதவி வழங்குவதற்கு மாறாக, சிறிய கால்நடைப் பண்ணையாளர்கள் இணைந்து கூட்டுறவு முறையில் துவங்கும் நிறுவனங்களுக்கு மான்ய உதவி அளித்து கால்நடைப் பொருள் உற்பத்திக்கும், பதப்படுத்தும் சேமிப்பு முயற்சிகளுக்கும் ஊக்கமளிக்கலாம்.

நோய்க்கட்டுப்பாடும், சுகாதாரமான உற்பத்தியும் கால்நடைத் துறையை எதிர்நோக்கியுள்ள முக்கியப் பிரச்சினைகளாகும். நோய் பாதிப்பற்ற பொருட்களை உறுதி செய்யாமல் இந்திய கால்நடை உற்பத்திப் பொருள்களுக்கு உலகச் சந்தையில் விற்பனை வாய்ப்பை அதிகரிக்க இயலாது. குறிப்பாக, கோமாரி நோய் பாதிப்பால் மட்டுமே பால் ஏற்றுமதி மதிப்பில் ஆண்டுக்கு ரூ.1,252 கோடியும், உள்நாட்டு வருவாயில் ரூ.1,650-1,873 கோடியும் இழப்பு ஏற்படுகிறது. கால்நடை உற்பத்தி இழப்பு, இறப்பு ஆகியவற்றால் ஆண்டுக்கு ரூ.1,800 கோடி வருவாய் இழப்பு உள்ளது. எனவே, கால்நடை நோய்த் தடுப்பு ஒரு பொதுநோக்கிலான நடவடிக்கையாகி விடுகிறது. இச்சேவையைத் தனியார் நிறுவனங்கள் மூலமாக எதிர்பார்க்க இயலாது.

### கொள்கை முடிவுகளும், திட்டமிடுதலும்

தனியார் மற்றும் கூட்டுறவுத் துறை நிறுவனங்கள் தேவையான முதலீட்டுத் திறனையும், திட்டமிடும் வசதியையும் பெற்றுள்ளன. முனைப்பான முயற்சி, முதலீடு மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம் ஆகியவை கால்நடைப் பொருள்களின் உற்பத்தி மற்றும் விற்பனை முன்னேற்றம் காணத் தேவைப்படுகின்றன.

'அமுல்' அமைப்பிலான கூட்டுறவுப் பால் உற்பத்தி முயற்சி, பால் உற்பத்திக்குத் தேவையான முதலீட்டையும், தொழில்நுட்பத்தையும் வழங்கியதோடு, அதிக அளவிலான உற்பத்தியால் குறைந்த செலவில் திட்டங்களை மேற்கொள்ள வழிவகுத்து வெற்றியடைந்தது. இதேபோல், விற்பனையாளர், பதப்படுத்துவோர் மூலமாக, சிறிய பால் பண்ணையாளர்களை இணைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம். கேரளாவில் அண்மைக் காலத்தில் சுய உதவிக் குழுக்கள் என்ற பெயரில் தாங்களாகவே பால் உற்பத்தியாளர்கள் இணைந்து கூட்டு முயற்சியில் விற்பனை, தொழில்நுட்ப வசதிகளைக் குறைந்த செலவில் பெறுவதில் வெற்றி கண்டு வருகின்றனர்.

பால் மற்றும் பால் உற்பத்திப் பொருள்கள் சட்டத்தை மறு ஆய்வு செய்தல், ஏனைய கட்டுப்பாடு முறைகளையும் மாற்றி கூட்டுறவு நிர்வாகத்தை வலுப்படுத்துவது, பிற நிறுவன வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பது போன்ற நடவடிக்கைகள் தற்போது அவசியம். மேலும், பசுமைப் புரட்சி காலத்தைப் போன்று, தொழில்நுட்ப வசதிகள் சிறு பண்ணையாளர்களைச் சென்றடைவதில் தடைகள் ஏற்பட்டு விடாதவாறு கவனித்து, அவர்களையும் முன்னேற்ற நடவடிக்கைகளில் இணைக்கும் வண்ணம் கிராமப்புற நிறுவன வசதிகளை மேம்படுத்த வேண்டும்.

கால்நடைகளுக்கான தீவன உற்பத்திக் குறைபாடு ஒரு குறிப்பிடத்தக்க தடைக்கல்லாக உள்ளது. கடந்த 1991ஆம் ஆண்டில் வைக்கோல் உற்பத்தி 399 மில்லியன் டன், பசுந்தீவன உற்பத்தி 574 மில்லியன் டன் மற்றும் அடர்தீவன உற்பத்தி 42 மில்லியன் டன் அளவுகளாக இருந்தன. இவற்றில் பற்றாக்குறை அளவு முறையே 31,23,47 சதவிகிதமாகும். எனவே, கூடுதலான நிலப்பரப்பை தீவன உற்பத்தியின் கீழ் கொண்டு வருவது அவசியமாகிறது. தரிசு நில மேம்பாட்டு முயற்சிகளில், தீவனப்பயிர் உற்பத்திக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

சுகாதாரமான முறையில், பாதுகாப்பான நோய்பாதிப்பற்ற வகையில் கால்நடை உற்பத்திப் பொருட்களை உருவாக்கத் தேவையான சூழ்நிலையை அமைத்துக் கொடுப்பதும், கால்நடைகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்தி, கால்நடைப் பொருட்களை இலாபகரமாக விற்பனை செய்யத் தேவையான அடிப்படை நிறுவன வசதிகளை ஏற்படுத்துவதுமே அடுத்த நூற்றாண்டில் அடியெடுத்து வைக்கும் நம் முன் உள்ள சவால்களாகும்.


இச்சவால்களை எதிர்கொள்ள கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியம்.

1. கால்நடைத்துறை மேம்பாட்டிற்கு சிறு பண்ணையாளர்களையும் இணைத்து திட்டமிடுதல்.

2. முறையான விற்பனைக்கு விற்பனைச் சந்தைகளை உருவாக்கி நிர்வகித்தல்.

3. கால்நடை உற்பத்திப் பகுதிகளை பிரித்தறிந்து உற்பத்தி, தர மேம்பாடு, நோய்க் கண்காணிப்பு மற்றும் தடுப்பு முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

4. கிராமப்பகுதிகளில் நோய் பாதிப்பு, விற்பனை விலை,



முதலீடு, விற்பனை வாய்ப்பு வசதிகளைக் கண்காணிக்கும் மையங்களை நிறுவுதல்.

5. கால்நடை உற்பத்தி ஆராய்ச்சிகள் குறித்து நிர்ணயிப்பதில் பண்ணையாளர்கள், பதப்படுத்தும் தொழில் நிறுவனத்தார், தனியார் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களையும் ஈடுபடுத்தி திட்டமிடுதல்.

6. கால்நடை அறிவியல் பயிலும் மாணவர்களுக்கு நவீன தொழில் முறைக்குத் தேவையான உத்திகளைப் பயிற்றுவித்தல், குறிப்பாக தகவல் தொடர்பு மற்றும் மேலாண்மைத் துறை, குழுப்பயிற்சி, முடிவெடுக்கும் திறன் குறித்து பயிற்சி அளித்தல் போன்ற அம்சங்களிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

7. கால்நடைப் பண்ணையாளர்கள், அரசு கால்நடைப் பராமரிப்புத்துறை, அரசு சாரா தனியார் நிறுவனங்கள் ஆகியோருடன் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகமும் இணைந்து இத்துறைக்கான விரிவாக்கப் பணிகளைத் திட்டமிட்டு உருவாக்கிச் செயல்படுத்த வேண்டும்.

இன்று கால்நடை மருத்துவ அறிவியலில் பட்டம் பெறுகின்ற பட்டதாரிகள் கால்நடை பராமரிப்பில் மட்டும் அல்லாமல் கிராமப்புற முன்னேற்றத்திலும் சிறந்த பங்காற்ற வாய்ப்புள்ளது. உங்களின் மீது நம்பிக்கை வைத்து இச்சமூகம் முதலீடு செய்துள்ளது. இத்திருநாட்டின் ஏதோ ஒரு மூலையில் ஆடு மேய்த்து இளைப்பாறிக் கொண்டிருக்கும் ஒருவனுக்கும் அவனுடைய பிரச்சனைகளை உணர்ந்து உங்களால் இயன்ற தொழில் நுட்ப உதவியை அளித்து, அதன் மூலமாக அவன் சற்றேனும் கூடுதலான உணவைப் பெற முடியும் என்றால் அதுவே நீங்கள் பெற்ற கல்வியினால் கிடைக்கும் மிகப் பெரிய பயனாகும்.

கால்நடை மருத்துவர்களின் தொழில்நுட்ப அறிவை தனியார் கோழிவளர்ப்பு நிறுவனங்கள் திறம்பட உபயோகித்துக் கொள்கின்றனர். இதனை அனைவரும் பின்பற்றி அவர்களுக்கான வேலைவாய்ப்பு வசதிகளைப் பெருக்கலாம். அவர்களுக்கு சுயவேலை வாய்ப்பில் ஈடுபடத் தேவையான மேலாண்மைக் கல்வி, கணிப்பொறி மற்றும் பிற நவீன தகவல் தொடர்பு குறித்த பயிற்சிகளை அளிக்க கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் உரிய வசதிகள் உருவாக்கப் பட்டிருப்பது அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

திறமை உடையவர்களையும், முனைப்பு கொண்டோரையும் வெற்றித் தேவதை என்றும் நாடுவாள்!

**– வை. இராஜகோபலன்**

நன்றி : கால்நடைக் கதிர்

* * *

# பயிற்று மொழியாக தமிழ்

***தமிழ் மொழியைப் பயிற்றுமொழியாக ஆக்குவது தொடர்பாக அமைக்கப்பட்ட நீதியரசர் மோகன் குழுவினால் 21–6–1999 அன்று வழங்கப்பட்ட முக்கிய பரிந்துரைகள் பின்வருமாறு :***

1. மழலையர் மற்றும் 5ஆம் வகுப்பு (E.S.) வரை அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் அல்லது தாய்மொழி மட்டுமே பயிற்று மொழியாக அமைய வேண்டும். 3ஆம் வகுப்பு தொடங்கி ஆங்கிலம் ஒரு மொழிப் பாடமாகப் பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

2. 6ஆம் வகுப்பில் சேர்ப்பதற்கு 5ஆம் வகுப்புத் தகுதி நிலையில் கல்வி மாவட்ட அளவில் மாவட்டக் கல்வி அதிகாரி தலைமையில் ஒரு குழு அமைத்து ஒரே நாளில் ஒவ்வொரு பள்ளியிலும் (ஒரு பொதுவான) தேர்வு நடத்தி, தேர்வு பெற்றவர்களைச் சேர்த்துக் கொள்ளலாம்.

3. பயிற்று மொழிக் கொள்கையைப் பின்பற்றாத பள்ளிகள் ஒரு குறிப்பிட்ட காலவரைக்குள் (3 ஆண்டுகள்) மாற்றியமைத்துக் கொள்ள வேண்டுமென்று அரசு அறிவிக்க வேண்டும். இதனை ஏற்காத பள்ளிகட்கு ஏற்பு வழங்கக்கூடாது.

4. மெட்ரிகுலேசன் பள்ளிகளில் ஆங்கிலம்தான் பயிற்றுமொழி என்றிருப்பதை, ஆங்கிலம் அல்லது தமிழ்/தாய்மொழி பயிற்று மொழி என்று திருத்தப்பட வேண்டும். இதனால் 6ஆம் வகுப்பு தொடங்கி தமிழ் வழி கற்பிக்கும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் அரசின் ஏற்புப் பெற வாய்ப்பு ஏற்படும்.

5. அரசுப் பள்ளிகளில் ஆங்கிலம் பயிற்றுமொழியாக இருக்கும் பிரிவுகளை, 6ஆம் வகுப்பிலிருந்து ஒவ்வொரு வகுப்பாக (படிப்படியாக) நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6. ஆங்கிலத்தை முறையாகக் கற்பிக்க 6ஆம் வகுப்பு முதல் ஆங்கிலத்தில் பட்டம் பெற்று நன்கு தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை அரசு நியமிக்க வேண்டும். மாணவர்கள் பேசவும், எழுதவும் திறம் பெறும் வகையில், ஆங்கில மொழியைக் கற்பிக்கும் முறையில் மாற்றம் செய்ய வேண்டும்.

7. ஆறாம் வகுப்பு முதல் முதற்பிரிவில் வட்டாரமொழி அல்லது தாய்மொழி படிக்க வேண்டும் என்னும் விதியை (அரசு ஆணை எண் 105, கல்வி, நாள் 24–1–68) தமிழ் அல்லது தாய்மொழி என்று திருத்தம் செய்ய வேண்டும்.

8. **உயர் கல்வி**

கலைச் சொல் பட்டியல்கள் தயாரித்தல்; பாடநூல் தயாரித்தல்; தொழிற்கல்வியை தமிழ்வழி கற்பித்தலைத் தொடங்குதல்.

   1. சட்டத்தின் வாயிலாக தன்னாட்சி அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும். (A Statutory Autonomous Body). பதவி வழிப்பட்ட தலைவராக முதல்வர் இருக்க வேண்டும். செயல் தலைவராகக் கல்வித் துறையில் சிறந்த ஒருவர் இருப்பார். துறைதோறும் அத்துறை நிபுணர்களைத் துறைத் துணைத் தலைவர்களாகக் கொண்டு துறைசார் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

   2. கைவினைஞர் நிலையில் (I.T.I) தமிழ் பயிற்றுமொழி ஆக்குவதைத் தொடர்ந்து, தொழில்நுட்பப் பயிலகமும் (Polytechnic) பின்னர் பொறியியல் கல்லூரியும் (Engineering College) தமிழைப் பயிற்றி மொழியாக்க வேண்டும். இம்மூன்று நிலைகளிலும் தேவையான ஆயத்தப் பணிகளை ஒரே சமயத்தில் தொடங்க வேண்டும்.

9. சித்த மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம் போன்ற துறைகளில் தமிழ் வழியில் கற்பிப்பதற்கான வாய்ப்பினை அரசு உருவாக்க வேண்டும்.

10. வேலைவாய்ப்பில் முன்னுரிமை : மற்ற அனைத்துக் கூறுகளிலும் சமத் தகுதி பெற்றவர்களுக்கிடையில் தமிழ் வழி பயின்றவர்களுக்கு முன்வாய்ப்பு நல்குவது தமிழ்வழி கற்பவர்களை ஊக்குவிப்பதாக அமையும். (அவர்கள் அரசுப் பணியாளர்களாக நியமிக்கப் படுவதால் தமிழ்மொழி வழியில் ஆட்சி செலுத்துவது நல்ல முறையில் அமைய உதவும்.)

இப்பரிந்துரைகள் அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, மேற்கொள்ளப்படும் முடிவுகள் நாடாளுமன்றத் தேர்தல் முடிந்தபின்னர் அறிவிக்கப்படும்.

# வள்ளலார் வாழ்ந்த வடலூரை அழகான நகரமாக மாற்றத் திட்டம்

## முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு!

சற்றொப்ப 125 ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்திலே வாழ்ந்தவர். இன்றைக்கும் அவர் மறைந்தாலுங்கூட வாழ்ந்து கொண்டிருப்பவர், என்றைக்கும் வாழப் போகிறவர் வள்ளலார். அவர் மருதூரிலே பிறந்தார். இங்கே பேசியவர்கள் அவருக்கு நினைவு மண்டபம் எழுப்ப வேண்டுமென்று சொன்னார்கள்.

***மருதூர் கிராமத்தில் வள்ளலார் நினைவாலயம்***

தமிழக அரசின் சார்பாக வள்ளலார் பிறந்த மருதூர் கிராமத்தின் வீடு வள்ளலார் நினைவாலயமாக அமைக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. வடலூரில் ஏற்கெனவே ஞானசபை இருக்கின்ற காரணத்தால் அந்தத் தொன்மை வாய்ந்த சபைக்கு எந்த ஊறும் விளையக் கூடாது. அதை முடிந்த வரையிலே பாதுகாப்பது என்ற உறுதியோடு வடலூரிலே வேறு மண்டபங்களோ மணிமாடங்களோ அமைக்காமல் அந்தப் பகுதி மக்களுக்குப் பயன்படுகின்ற திருமண மண்டபம் ஒன்று எழுப்புவதற்கான முயற்சியையும் இந்த அரசு மேற்கொண்டுள்ளது.

வள்ளலாருடைய பிறப்பு 1823ஆம் ஆண்டு. அதாவது நான் பிறப்பதற்கு 101 ஆண்டுகளுக்கு முன்பு பிறந்தவர். நான் 1924, அவர்கள் 1823. நான் சிதம்பரத்திலே பெண் கொண்டவன். நான் அப்போது என்னுடைய மாமனாரிடத்திலே இந்தப் பகுதிக்கு வெகு அருகிலே தானே வள்ளலார் பிறந்த மருதூர் இருக்கிறது. நீங்கள்



அவரைச் சந்தித்திருக்கிறீர்களா என்று கேட்டபோது, அவர் என்னிடத்திலே— எப்பொழுதாவது வள்ளலார் இந்தப் பக்கம் வருவார், இங்குள்ள மண்டபத்திலே உட்கார்ந்திருப்பார், — என்றெல்லாம் சொல்லக்கூடிய அளவிற்கு அண்மைக்காலத்திலே, 125 ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்திலே உலவி, குறிப்பாக சென்னை, சிதம்பரம் பகுதிகளிலே மாத்திரம் தன்னுடைய பணியை வள்ளலார் விரிவாக மேற்கொண்டிருந்தார். அவருடைய தந்தை மருதூர் இராமையாவிற்கு ஆறு மனைவிகள். ஐந்து மனைவிகளை அவர் திருமணம் செய்து கொண்டுங்கூட, ஐந்து பேருக்கும் குழந்தை இல்லை. ஐந்து பேரும் ஒவ்வொருவராக இறந்துவிட்டார்கள். அதற்குப் பிறகு

ஆறாவதாக சின்னம்மாள் என்கிற பெண்மணியை மணந்து அவருக்குத் தோன்றியவர்தான் வள்ளலார் இராமலிங்க அடிகள்.

அவர் பிறந்தபோது எவ்வளவோ அற்புதங்களை யெல்லாம் விளைவித்தார் என்றெல்லாம் வள்ளலாரை புராண ரீதியிலே அணுகியவர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். நான் அதை ஏற்றுக்கொள்கிறேனா இல்லையா என்பதல்ல இங்கே முக்கியம். பொதுவாக ஒரு நல்ல கருத்தை மக்களிடத்திலே பரப்ப வேண்டுமேயானால், அந்தக் கருத்தைச் சொன்னவர்கள் மிகப் பெரியவர்கள், எல்லோரையும் விடச் சிறந்தவர்கள், மனிதப் பிறப்புக்கு மேலானவர்கள் என்று சொன்னால்தான் அந்தக் கருத்துகளை மக்கள் ஏற்பார்கள் என்பதற்காக அவர்களுக்கு சில அவதார மகிமைகளை எல்லாம் உருவாக்குவது நம் நாட்டிலே கடைப்பிடிக்கப்படுகின்ற ஒரு வழக்கம்.

***பல அற்புதங்களைச் செய்துகாட்டிய வள்ளலார்***

அந்த வழக்கத்தின்படி வள்ளலார் பல அற்புதங்களை யெல்லாம் செய்து காட்டினார் என்றெல்லாம் சொல்லப்படுவதுண்டு. ஆனால் அந்த அற்புதங்களை யெல்லாம்விட அவர் செய்து காட்டிய அற்புதம் – அருட்பெரும் ஜோதிதான் ஆண்டவன் – என்று சொன்னாரே, அதுதான் மிகப் பெரிய அற்புதம்.

அருட்பெரும் ஜோதி தனிப் பெரும் கருணை என்பது இன்றைக்கு நம்முடைய சமுதாயத்தில் அடிக்கடி புழங்குகின்ற ஒரு வாக்கியமாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் என்னுடைய இளமைக் காலத்திலே நான் இந்தச் சொற்றொடரை பல முறை கேட்டுக் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன். ஆனால் இன்றைக்கு அருட்பெரும் ஜோதி தனிப்பெரும் கருணை எல்லாம் மறைந்து வேறு சில சொற்றொடர்கள் – அவைகளை நான் குறிப்பிட விரும்பவில்லை. அப்படிப்பட்ட சொற்றொடர்கள் ஆன்மிகத் துறையிலே இன்றைக்குப் புழங்க ஆரம்பித்துவிட்டன.

***சமரச சன்மார்க்க சங்கத்தின் நிறமும் மஞ்சள் – வெள்ளைதான்.***

வள்ளலார் உருவாக்கிய சபை சமரச சன்மார்க்க சங்கம். இடையிலேகூட வேதம் என்ற சொல் இருந்ததாகவும் சமரச சன்மார்க்க வேத சபை என்றிருந்ததாகவும், பிறகு எந்த பரிணாம வளர்ச்சியின் காரணமாகவோ அதை நீக்கி விட்டார் என்று கூட வரலாறு குறிப்பிடுகின்றது. அந்த சமரச சன்மார்க்க சங்கத்தினுடைய நிறத்தைப் பற்றி நம்முடைய எழுத்தாளர் நடராஜன் இங்கே குறிப்பிட்டார். நிறம் மாத்திரமல்ல, அந்தச் சங்கத்திற்கு ஒரு கொடியே கூட உண்டு. அந்தக் கொடியின் மேல்பகுதி மஞ்சள். கீழ்ப் பகுதி வெள்ளை. என்னைப் பார்த்தால் இரண்டையும் பார்க்கலாம். இனிமேலாவது ஏன் மஞ்சள் துண்டு அணிகிறாய் என்று யாரும் என்னைக் கேட்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

நாத்திகத்திற்கும் ஆத்திகத்திற்கும் இடையிலே ஒரு சமரசத்தை உருவாக்கினார் வள்ளலார். அதனால்தான் சமரச சன்மார்க்க சங்கத்தை அவர் அமைத்தார் என்றுகூட நாம் கொள்ளலாம். ஆத்திகக் கருத்துகள் பல தெய்வ வழிபாடுகளுக்கு நம்முடைய சமுதாயத்தைக் கொண்டுபோய்விட்டு விட்டன. ஆனால் வள்ளலார் அவர்கள் அதிலிருந்து சமுதாயத்தை மாற்றியமைக்கும் பெருமுயற்சியில் ஈடுபட்டார். அதனால்தான் அவருடைய அருட்பா தொகுப்பிலே ஆறாவது திருமுறை என்ற பகுதியை நாட்டிலே அதிகமாக மக்கள் படிப்பதற்கான வாய்ப்பை வழங்காமலே அந்தப் பதிப்புகள் குறைவாக வெளியிடப்பட்டன என்கின்ற ஒரு கூற்றும் உண்டு.

அந்த ஆறாவது பகுதிதான் சீர்திருத்தக் கருத்துகளை, சமத்துவக் கருத்துகளை, சமதர்மக் கருத்துகளை – வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் – என்று ஏழைகளுக்காகக் கனிந்துருகினாரே, கண்ணீர் மல்கினாரே அந்தக் கருத்துகளையெல்லாம் எடுத்துச் சொல்லக்கூடிய அந்தப் பகுதியாகும். அது மக்களிடத்திலே பரப்பப் பட்டாக வேண்டும்.

> **நல்லொழுக்கத்தை விட மேலான பொருள் எதையும் தந்தை மகனுக்குத் தரமுடியாது.**
>
> **– நபிகள் நாயகம்.**

சாதியைப் பற்றி வள்ளலாருக்கு முன்பிருந்த சித்தரைப் போன்றவர்களும் பாடியிருக்கிறார்கள். வள்ளலாருக்குப் பின்பு தோன்றியவர்களும் பாடியிருக்கிறார்கள். "இருட்டறையில் உள்ளதடா உலகம், சாதி இருக்கிறதென் பானும் இருக்கின்றானே" – என்று ஆச்சரியத்தோடும், ஆத்திரத்தோடும் கேட்டார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

"சாதியிலே, மதங்களிலே சாயாதே" என்று கூறிய வள்ளலார் மேலும் அழகாக சாதி என்னும் இருட் குப்பை என்று சொல்லியிருக்கிறார். புதிய வார்த்தை! இன்றைக்கு கவிஞர்கள் பலர் புதிய சொற்களைக் கையாளுகிறார்களே, அதைப்போல வள்ளலார் அன்றைக்கு புதிய சொல்லை 'இருட்குப்பை' என்ற சொல்லை அதிலே பிணைத்து எழுதிக் காட்டியிருக்கிறார். சாதியை இருட்குப்பை என்று சொல்லி விட்டு, அதை உரம் ஆக்க வேண்டுமென்கிறார். குப்பையை என்ன செய்வார்கள்? வீசி எறிவார்கள் அல்லது கொண்டு போய் புதைப்பார்கள் அல்லது எரிப்பார்கள். ஆனால் வள்ளலார் அதை உரம் ஆக்க வேண்டுமென்கிறார்.

***ஒதுக்கீட்டைப் பெறத்தான் சாதி, உரமாகப் பயன்பட வேண்டும்***

இங்கே தான் அவர் தீர்க்கதரிசியாக விளங்கியிருக்கிறார் என்பது நமக்கு புலனாகிறது. சாதி இன்றைக்கு ஒரு வகையிலே தேவைப்படுகிறது. ஒரு வகையிலே சாதி ஒழிக்கப்பட வேண்டும் என்ற நிலையும் இருக்கிறது. ஆனால் சாதி அறவே ஒழிக்கப்பட்டுவிட்டால் பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் இன்றைய சமுதாய அமைப்பில் கல்வி, வேலை வாய்ப்புகளில் இடஒதுக்கீட்டைப் பெற்று முன்னேறுகிற நிலை இருக்காது. அதற்கு சாதி இருந்தாக வேண்டியிருக்கின்றது. சாதி இருக்க வேண்டும். வள்ளலார் குறிப்பிட்டதைப் போல, ஒதுக்கீட்டைப் பெற வேண்டுமென்பதற்காகத்தான் சாதி உரமாகப் பயன்பட வேண்டும். அந்த அளவிற்கு மட்டுமே சாதியைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமேயல்லாமல், சாதியைப் பயன்படுத்தி ஒரு பிரிவை இன்னொரு பிரிவினர் தாக்குவது, அழிப்பது, கொல்வது, குத்துவது, நாட்டையே அமளிக் காடாக ஆக்குவது என்பதற்காகச் சாதி பயன்படக்கூடாது.

அதனால்தான் சாதியை உரம் ஆக்குங்கள் என்று வள்ளலார் சொல்லுகிறார். சாதியை நாம் உரம் ஆக்க வேண்டும். பள்ளியிலே சென்று மாணவன் என்ன சாதி என்று கேட்கிற நேரத்தில், சாதியைச் சொல்கிறோமென்றால், அந்தச் சாதியை உரம் ஆக்கி, அவனுக்கு இட ஒதுக்கீடு தருவதற்காக – மருத்துவக் கல்லூரியிலே, பொறியியல் கல்லூரியிலே இடம் பெறுவதற்காக – அதைப்போல வேலை வாய்ப்பிலே அவனுக்கு இடம் கிடைப்பதற்காக, அது பயன்பட வேண்டுமேயல்லாமல் சாதி மோதுவதற்குப் பயன்படக்கூடாது என்பதை வள்ளலார் சொன்ன அந்த வாசகத்திலிருந்து நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

சாதிப் பிரிவுகள் தமிழகத்திலே எவ்வளவு பெரிய தொத்து நோயாக இன்றைக்கு மாறி இருக்கிறது என்பதையும், சாதிகளின் பெயரால் எத்தனை அரசியல் கட்சிகள் இன்றைக்கு உருவாகி இருக்கின்றன என்பதையும் எண்ணிப்பார்க்கவே முடியாது. எண்ணிப் பார்க்க – என்பதற்கு இரண்டு பொருள். நினைத்துப் பார்க்க முடியவில்லை என்பது ஒன்று. எத்தனை கட்சிகள் என்று எண்ணிப்பார்க்க முடியவில்லை என்பது மற்றொன்று. அந்த அளவிற்கு இன்றைக்குச் சாதிய தலைவர்கள் உருவாகியிருக்கின்றார்கள்.

உருவாகியிருக்கின்ற சாதிய தலைவர்கள் எல்லாம் எதற்காகப் பணியாற்றுகிறார்கள் என்றால் தங்கள் சாதிக்காக அல்ல. தங்கள் சாதியின் பெயரைச் சொல்லி, தங்களுக்காகப் பாடுபடுகிறார்கள். ஒவ்வொரு நாளும் சாதியின் பெயரால் அல்லது சாதித் தலைவர்களின் பெயரால் சங்கங்கள் உருவாவதை காணுகிறோம். அதுவும் நாடாளுமன்றத் தேர்தல் வரப் போகிறது என்று

> *"சாதியிலே, மதங்களிலே, சமயநெறிகளிலே,*
> *சாத்திரச் சந்தடிகளிலே, கோத்திரச்*
> *சண்டைகளிலே*
> *ஆதியிலே அபிமானித்(து) அலைகின்ற உலகீர்!*
> *அலைந்து அலைந்து வீணேநீர் அழிதல்*
> *அழகலவே!*
>
> – அருட்பெருஞ்ஜோதி வள்ளலார்

அறிந்தவுடன் ஒவ்வொரு தலைவர் வீட்டிலும் எத்தனை சாதிய தலைவர்களுடைய புகைப்படங்கள் எடுக்கப்படுகின்றன என்று பார்த்தால் ஒரு புகைப்படத்தைப் பார்த்துவிட்டு சும்மாயிருக்கிற ஒரு சாதிய தம்பி கூட நான் இந்தச் சாதிக்குத் தலைவன் என்று மறுநாளே பெயர் போட்டுக் கொண்டு இந்தச் சாதி இந்தக் கட்சியை ஆதரிக்கிறது என்கிற அளவிற்கு இன்றைக்கு நிலைமை முற்றிப் போய் இருக்கின்றது. இவைகளையெல்லாம் பார்க்கும்போது பெரியார் இருந்தால், அண்ணா இருந்தால், ஏன் இட ஒதுக்கீட்டிற்கு வித்திட்ட முத்தையா முதலியாரே இருந்தால், டாக்டர் நடேசனாரே இருந்தால், நாயரே இருந்தால், தியாகராயரே இருந்தால் என்ன சொல்லியிருப்பார்கள்? இப்படி தெரிந்திருந்தால் இந்த இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையையே எழுப்பியிருக்க மாட்டோமே என்று அவர்கள் மிகவும் வருத்தப்படுவார்கள். அந்த அளவிற்கு இட ஒதுக்கீடு வேண்டுமென்பதற்காக சாதியை சொல்ல வேண்டியிருக்கின்றது.

நீ பிராமணரா? செட்டியாரா? முதலியாரா? அல்லது பிற்படுத்தப்பட்டவரா? மிகவும் பிற்படுத்தப்பட்டவரா? என்ற இந்தப் பிரிவுகளைச் சொன்னால்தான் மதிப்பெண்களை அதற்கேற்றவாறு பெற்று தொழிற்கல்லூரிகளில் இடத்தைப் பெறக்கூடிய நிலைமையை இன்றைக்கு ஏற்படுத்தியிருக்கிறோம். இல்லாவிட்டால் ஏற்கெனவே முன்னேறியவர்களே, மேலும் முன்னேறிக் கொண்டிருப்பார்கள். பின்னுக்குத் தள்ளப்பட்டவர்கள் மேலும் மேலும் பின்னுக்குத் தள்ளப்பட்டுக்கொண்டே இருந்திருப்பார்கள்.

எனவேதான் இந்தச் சாதி – சொல்லப்பட்டு, அதன் காரணமாக வீழ்ந்துவிட்ட சமுதாயங்கள் எழுந்து நிற்கக் கூடிய ஒரு வாய்ப்பை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். அதற்கு சாதியின் பெயர் தேவைப்படுகின்றது. அதற்காக சாதியின் பெயரால் நடைபெறுகின்ற அமளி, தமிழகத்திலே அமைதியற்ற தன்மை, போராட்டங்கள், சாதிய யுத்தங்கள் ஆகியவைகளை நாம் அனுமதிக்க முடியாது, அனுமதிக்கக்கூடாது என்கின்ற அந்த உறுதியை நாமெல்லாம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இங்கே சமத்துவபுரங்கள் பற்றிப் பேசினார்கள். நானும் தென் மாவட்டங்களிலும் வேறு சில மாவட்டங்களிலும்

கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நான்காவது முறையாக இந்த ஆட்சிப் பொறுப்பை நாங்கள் ஏற்ற பிறகு, நடைபெற்ற சம்பவங்களையெல்லாம் தொகுத்துப் பார்த்து, இதனை ஆராய்ந்து, ஏன் இந்த நிலை என்பதை தெரிந்து அறிக்கை தருவதற்காக உச்சநீதிமன்ற நீதிபதி திரு. மோகன் தலைமையிலே ஒரு குழு. அவர் தந்த அறிக்கையின் அடிப்படையிலே தென் மாவட்டங்களிலே பொருளாதார நிலையை உயர்த்தினால் இந்தத் தகராறுகள் ஓயும் என்ற நம்பிக்கையின் காரணமாக உச்சநீதிமன்றத்தின் மற்றொரு நீதிபதி திரு. ரெத்தினவேல் பாண்டியன் தலைமையிலே மற்றொரு குழு பணியாற்றிக் கொண்டிருக்கின்ற செய்திகளையெல்லாம் நீங்கள் அறிவீர்கள்.

இருந்தாலுங்கூட என்னுடைய ஆதங்கம் இராமலிங்கரைப் போன்றவர்கள் – தேசியக் கவி பாரதியாரைப் போன்றவர்கள் – பெரியாரை, அண்ணாவை, பெருந்தலைவர் காமராஜரைப் போன்றவர்கள் – இத்தனைபேரும் எடுத்துச் சொல்லி போதிய அளவில் மக்கள் மனதிலே பதிய வைக்கப்பட்ட இந்த நிலையைச் செயல்படுத்த வேண்டும். செயல்படுத்தி ஓரளவாவது வெற்றி பெற முடியுமா என்கின்ற அந்த ஆதங்கத்திலேதான் சமத்துவபுரம் திட்டத்தை நான் வெளியிட்டேன்.

இன்றைக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு சமத்துவபுரங்கள், மூன்று சமத்துவபுரங்கள் என்கிற அளவிற்கு இதுவரை ஏறத்தாழ நாற்பது சமத்துவபுரங்கள் திறக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் 100 சமத்துவபுரங்களைக் கட்டி அவைகளைத் திறந்துவைக்க வேண்டுமென்பது திட்டம்.


***சமத்துவபுரத்தின் சிறப்பை நீங்கள் நேரில் காணலாம்***

அந்தச் சமத்துவபுரங்கள் எப்படி அமைந்திருக்கின்றது என்பதை உங்களில் பலர் நேரிலே கண்டிருக்க முடியாது. ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் நூறு வீடுகள். அதில் தாழ்த்தப்பட்டவர்களும், பிற்படுத்தப்பட்டவர்களும், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களும், முன்னேறியவர்களும் ஒன்றாக வாழ வேண்டும் என்பது குறிக்கோள். ஒரு வீட்டிலே பிராமணர் இருந்தால் அடுத்த வீட்டிலே ஆதிதிராவிடர் இருக்க வேண்டும். இவர்கள் எல்லாம் பொதுவாக உலவிட மாலைநேரத்திலே பொழுதுபோக்க ஒரு பொதுவான பூங்கா அங்கே இருக்க வேண்டும். இப்போது அங்கேயிருக்கின்றது. அவரவர்களும், அவரவர்களுடைய கடவுள்களை தொழுது கொள்ள பொதுவான ஒரு சமுதாயக் கூடம் இடம் பெற வேண்டும். அதுவும் அமைக்கப்பட்டுள்ளது. ஒரு பொது நூலகம் இருக்க வேண்டும், அதுவும் அமைக்கப்பட்டிருக்கின்றது. இதையெல்லாம் விட அங்கே யார் இறந்தாலும் அவர்களைப் புதைக்கவோ எரிக்கவோ ஒரு பொது சுடுகாடும் இருக்க வேண்டுமென்று, அதுவும் இன்றைக்குச் சமத்துவபுரங்களிலே அமைக்கப்பட்டுள்ளது.

இதைப் பார்க்கின்ற மக்கள், அந்தப் பகுதிகளிலே வாழ்பவர்கள் ஒருவரையொருவர் நேசித்து சகோதரர்களாகப் பழகும் காட்சியையும் நான் அடிக்கடி திடீர் திடீரென்று அந்த இடங்களுக்குச் சென்று பார்த்து மகிழ்ச்சியடைகிறேன்.

பிராமணர்களால்தான் சாதி உருவானது என்று ஒரு குற்றம் சொல்கிறோம். ஆனால் இன்றைக்கு என்ன நிலை? சாதியை யார் உருவாக்கினார்கள் என்று சொல்கிறோமோ அந்த பிராமணர்கள் எங்கேயாவது ஆதிதிராவிடர்களோடு சண்டை போடுகிறார்களா? ஒரு பிராமணரும் ஒரு தாழ்த்தப்பட்டவரும் எங்கேயாவது மோதிக் கொண்டார்கள் என்று செய்தி வருகிறதா? இல்லை.

இன்னொரு மகிழ்ச்சியான செய்தியையும் உங்களுக்குச் சொல்வேன். நான் சமத்துவபுரங்களைத் தொடங்கியபோது கொஞ்சம் சந்தேகப்பட்டேன், இந்த சமத்துவபுரங்களில் குடியேற ஆட்கள் வருவார்களா என்று. இன்றைக்கு அங்கேயுள்ள வசதிகள், வாய்ப்புகள், அங்கேயுள்ள சூழ்நிலைகளைப் பார்த்து ஒரு சமத்துவபுரத்திலே நூறு வீடுகள் என்றால் 300 பேர் அதற்கு மனு செய்கிறார்கள். அவர்களில் தகுதி பார்க்கப்பட்டு, தகுதி பெற்றவர்கள் 150 பேர் இருந்தால், அந்த 150 பெயர்களையும் எழுதி குலுக்குச் சீட்டு மூலமாகத்தான் இவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.



"பிறர் உன்னிடம் எப்படி நடந்துக் கொள்ள வேண்டும்
என்று எதிர்பார்க்கின்றாயோ, அப்படியே நீயும்
பிறரிடம் நடந்துக்கொள்ள வேண்டும்
அதுவே ஒழுக்கம் எனப்படும்.

– தந்தை பெரியார்

> **உன் எண்ணங்களை மறைக்காதே, அவற்றை வெளிப்படுத்துவது அவமானமென்றால், அவற்றை எண்ணுவது, அதனினும் அவமானம்.**
>
> **– காந்தியடிகள்**



### வள்ளலாரின் கனவை நினைவாக்கிய இடம் சமத்துவபுரம்

அந்த 100 வீடுகளில் 40 பேர் ஆதிதிராவிடர்கள். 25 பேர் பிற்படுத்தப்பட்டோர். 25 பேர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர். மீதம் உள்ள 10 பேர் முன்னேறிய வகுப்பினர். இந்த 10 பேரில் ஆறு பேர், ஏழு பேர் பிராமணர்கள். அங்கேயும் பாருங்கள். அவர்கள் அதற்கும் முந்திக் கொண்டு வருகிறார்கள் என்றால் நான் கேட்கிறேன், சாதியை உருவாக்கியவர்கள் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளானவர்கள் இன்றைக்கு சாதி வித்தியாசம் தொலைந்து மக்கள் சமத்துவமாக வாழ வேண்டும் என்ற புதுமையை நாம் புகுத்துகின்ற நேரத்தில் அதையும் நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்று பத்து வீடுகள் என்றால் அதிலே ஐந்து பேர், ஏழு பேர் பிராமண சாதியைச் சேர்ந்தவர்கள் இன்றைக்கும் இடம் பெற்றிருக்கின்றார்கள்.

அய்யங்கார் முதல், அய்யர் முதல் ஆதிதிராவிடர் வரையிலே செட்டியார், முதலியார் உட்பட நூறு பேர் ஒவ்வொரு பெரியார் நினைவு சமத்துவபுரத்திலும் குடியமர்ந்து வாழ்கிறார்கள் என்றால் அந்த இடம் வள்ளலாருடைய கனவை நனவாக்கியுள்ள இடம். பாரதியாருடைய எண்ணத்தை இன்றைக்கு உருவாக்கியுள்ள இடம், பெரியாருடைய, பேரறிஞர் அண்ணாவினுடைய, பெருந்தலைவர்கள் பல பேருடைய நினைவை இன்றைக்கு நினைவாக்கியிருக்கும் இடமாகத் தான் சமத்துவபுரங்கள் விளங்கிக் கொண்டிருக்கின்றன. இதைச் சொல்வதால் பிராமணர்களுக்கு நான் வக்காலத்து வாங்கிப் பேசுவதாக யாரும் கருதக்கூடாது. உண்மையைச் சொல்கிறேன். யாராவது ஒருவர் திடீரென்று தயவுசெய்து ஒரு சமத்துவபுரத்திற்கு சென்று நேரடியாகப் பார்த்தால் இதை நீங்கள் புரிந்து கொள்ள முடியும். அந்த 100 பேரும் சாதி பேதமற்ற முறையிலே இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த 100 பேர் வீட்டுப் பிள்ளைகளும் இன்றைக்கு ஒரே இடத்தில் படிக்கின்றார்கள். அந்த 100 பேர் வீட்டுப் பிள்ளைகளும் ஒரே இடத்தில் விளையாடுகிறார்கள். ஒரே இடத்தில் சென்று நூல்களை, பத்திரிகைகளைப் படிக்கின்றார்கள். அப்படிப்பட்ட ஒரு பெரும் சிறப்பு சமத்துவபுரங்களிலே ஏற்பட்டிருக்கின்றது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைச் சொல்வதால் கருணாநிதி மாறி விட்டான், கருணாநிதி பெரியாருடைய கொள்கைகளையெல்லாம் விட்டு விட்டான், அண்ணாவின் கொள்கைகளை

---

> **பயன் கருதிச் செய்யப்படும் வேலை தொண்டாகாது. பயன் கருதாது செய்யப்படும் பணியே தொண்டாகும்.**
>
> **– திரு.வி.க.**

> **தொண்டால் மனிதன் உயருகிறான். தொண்டால் மனிதத்தன்மை வளருகின்றது. தொண்டால் மனிதன் கடவுளையும் ஏவல் கொள்ளலாம்.**
>
> **– கி.ஆ.பெ. விசுவநாதம்**

> **சமுதாய தொண்டு செய்பவர்கள் ஒழுக்கமுள்ளவர்களாகவும், நேர்மையானவர்களாகவும், தியாகம் செய்யக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்.**
>
> **– டாக்டர் அம்பேத்கர்**

> **உலகில் வாழும் உயிர்களுக்குத் தொண்டு செய்வதைக் காட்டிலும் சிறந்த அறம் வேறு இல்லை.**
>
> **– சுவாமி விவேகானந்தர்**

யெல்லாம் விட்டு விட்டான் என்று யாராவது சொன்னால் அவர்கள் வீண் மனப்பால் குடிக்கிறார்கள் என்பதைத் தவிர வேறல்ல. பெரியாருடைய கொள்கைகளை அண்ணாவின் அணுகுமுறையோடு நிறைவேற்றுவது தான் கருணாநிதியின் செயல்பாடு.

### பெரியார் – அண்ணா சொன்னதை செயல் வடிவில் காட்டுகிறோம்

பெரியாருடைய கொள்கைகள் – பெரியார் தங்கம் எடுத்துக் கொடுக்கிறார். கோலாரில் தங்கத்தை எடுக்கும்போது கல், மண் எல்லாம் கலந்துதான் தங்கம் இருக்கும். அதை பளபளப்பாக்கி மெருகு தீட்டிக் கொடுக்கிறார் அண்ணா. அதை நான் நகையாகச் செய்து மாட்டுகிறேன், அவ்வளவு தான். அதனால் பெரியார் செய்தபடியே – நான் பெரியார் செய்ததைத் தான் செய்வேன் என்று சொல்லி கிடைத்ததை அப்படியே கொடுத்துப் போட்டுக் கொள் என்றால் யாரும் காதிலோ கழுத்திலோ அவைகளைப் போட்டுக் கொள்ள முடியாது. அதைப்போலத் தான் சொல்லப்பட்டதை, எழுதப்பட்டதை, பேசப்பட்டதை, கொள்கை அளவிலே கூறப்பட்டதை இன்றைக்குச் செயற்படுத்தும் காரியத்திலே நாம் ஈடுபட்டிருக்கிறோம்.

உங்களுக்குத் தெரியும். நம்முடைய முன்னாள் துணைவேந்தர் அவ்வை இங்கேயிருக்கிறார். அவருக்குத் தெரியும். அறிஞர் அண்ணா அடிக்கடி அவருடைய பேச்சில் உவமைகளை – இங்கே இளவரசு பேசினாரே – அதைப் போல சிறு சிறு கதைகளை அண்ணா சொல்வதென்றால் இராமாயணத்திலிருந்தும், பாரதத்திலிருந்தும்தான் அவைகளைச் சொல்வார். அர்ச்சுனரைப் பற்றிக் கூட இலக்கு பற்றி கூறுவதற்காகச் சொல்வார்.

துரோணர் தன் மாணவர்கள் அனைவரையும் அழைத்து ஒரு மரத்தைக் காட்டி அந்த மரத்திலே இருக்கின்ற ஒரு குருவியைக் காட்டி ஒவ்வொரு மாணவரிடமும் உனக்கு என்ன தெரிகிறது என்று கேட்டார். ஒவ்வொருவரும் மரம் தெரிகிறது, கிளை தெரிகிறது என்று சொல்கிறார்கள். குருவி தெரிகிறதா என்று கேட்கிறார். கடைசியாக அதுவும் தெரிகிறது என்கிறார்கள். அர்ச்சுனனைக் கூப்பிட்டு, "உனக்கு என்னை தெரிகிறது?" என்கிறார். "ஆசிரியரே, இந்த வில்லிலே இருக்கின்ற அம்பின் நுனியும் குருவியின் கழுத்தும் தான் தெரிகிறது" என்று கூறுகிறான். இதை இலக்கு தான் முக்கியம் என்பதற்காக அண்ணா அவர்கள் அடிக்கடி இந்தப் பாரதக் கதையை பல கூட்டங்களிலே பேசியிருக்கிறார். அதற்காக அண்ணா மாறிவிட்டார், பாரதக் கதையைச் சொல்லி விட்டார் என்றா கூறுவது?

என்னை ஒரு செய்தியாளர் கேட்டார். நீங்களும் மூப்பனாரும் அண்ணன் தம்பியாக பழகுகிறீர்களே, இப்போது தேர்தலிலே ஒருவருக்கொருவர் எப்படி எதிர்த்துப் போட்டியிடப்போகிறீர்கள் என்று கேட்டார். நான் அதற்கு "பகவத் கீதை படி" என்று சொன்னேன். அதற்கு என்ன அர்த்தம்? – பாரதத்திலே அண்ணன் தம்பிகள் தானே எதிர்த்து நின்று சண்டை போட்டார்கள். அப்படி போடலாம், தவறில்லை என்றார் கிருஷ்ணபரமாத்மா. அதுதான் பகவத் கீதை. அதைத்தான் நான் பகவத் கீதை படி என்று சொன்னேன்.

உடனே கருணாநிதி பகவத் கீதை படிக்க சிபாரிசு செய்கிறார் என்று ஆரம்பித்துவிட்டார்கள். செய்தியாளரிடம் வேடிக்கையாகச் சொன்ன வார்த்தை, போர் என்று வந்துவிட்டால் அண்ணன் அல்ல, தம்பி அல்ல என்கின்ற அந்த ஒரு நிலைக்காக பகவத் கீதைபடி என்று சொன்னேனே அல்லாமல் வேறல்ல. இப்படி சொல்லப்படுகின்ற கருத்துகளையெல்லாம் மாற்றி ஏதோ நாங்கள் எல்லாம் மாறிவிட்டோம் என்று சொல்லப்படுகின்ற காலக்கட்டத்திலே வள்ளலாருடைய பெயரால் இங்கே ஒரு மக்கள் நேயப் பேரவை அமைவது சாலப் பொருத்தமுடையது.

இந்தப் பேரவையின் நோக்கங்கள் என்ற வகையில் சாதீய மறுப்பையும் மதவெறி எதிர்ப்பையும் மத நல்லிணக்கத்திற்கு அடிநாதமாக வள்ளலார் பெயரால் பிரச்சாரப் பணிகளை முடுக்கிவிட வேண்டும் என்பது இதனுடைய செயற்திட்டங்களிலே ஒன்றாக அமைக்கப்பட்டுள்ளது.

அதைப்போலவே மேட்டுக் குடியினரால் திணிக்கப்பட்ட சிறு தெய்வ வழிபாடு, உயிர்ப் பலி, தீ மிதித்தல் போன்ற ஆன்மீகத்திற்குப் புறம்பான செயல்பாடுகளில் இருந்து அப்பாவி மக்களை மீட்டு வள்ளலாரின் கோட்பாட்டை வலியுறுத்துவது என்று செயல் திட்டங்களில் இரண்டாவது திட்டமாக இணைக்கப் பட்டிருக்கின்றது.

### எல்லாம் தமிழில் வர வேண்டும்

வள்ளலார் போற்றிய தமிழ் வழிபாட்டை முழுமையாய்க் கொண்டு உழைத்தல் – இதுகுறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல். இதைப் பற்றிக் கூட இங்கே நன்றியுரையாற்றும்போது பச்சையப்பன் குறிப்பிட்டார்.

எல்லாம் தமிழில் வர வேண்டும், தமிழ்நாட்டில் தமிழ் இல்லை என்பது வெட்கக் கேடு என்ற அந்தக் கருத்தில்

> அடக்கமுள்ளவரின் வலிமையை அறியாது,
> அவரை வெல்ல நினைப்பவனுக்குத்
> தப்பாது கேடு நேரும்.
>
> – ஔவையார்

எனக்கு எந்தவிதமான முரண்பாடும் இல்லை. உடன்பாடுதான். ஆனால் தமிழ் மொழி, தமிழர் என்ற இரண்டையும் எண்ணிப் பார்க்கும்போது, ஒரு முறை ராஜாஜி – இந்தி வந்தால் தமிழுக்கு ஆபத்து என்பதைவிட தமிழருக்கு ஆபத்து என்று சொன்னார். தமிழர்கள் இரண்டாந்தர குடிமக்களாக ஆகிவிடுவார்கள் என்றார். தமிழுக்கு ஆபத்து – மொழிக்கு ஆபத்து – அந்த மொழி பேசுகின்ற மக்கள் தமிழர்களுக்கும் ஆபத்து என்பதை யாரும் மறுப்பார் இல்லை.

மெல்ல மெல்லத்தான், படிப்படியாகத்தான் சில காரியங்களை நாம் செய்ய வேண்டியிருக்கின்றது. ஆர்வம் அதே நேரத்திலே அவசரம் இவைகளின் காரணமாக நாம் முட்டி மோதிக்கொள்ள முடியாது. நம்முடைய சமுதாயத்திற்கு நம்மை அறியாமலே ஒரு தீங்கை இழைத்து விட முடியாது.

அதற்காக நான் தமிழ் ஆட்சி மொழி என்பதையோ, எதிலும் தமிழ், எங்கும் தமிழ் என்பதையோ மறுப்பவன் அல்ல. எப்படி தமிழ்மொழியை எல்லா வகையிலும் தமிழகத்திலே பரப்புவது, விரிவாக்குவது, பயனுள்ளதாக ஆக்குவது, படித்தே தீர வேண்டுமென்ற எழுச்சியை உருவாக்க வேண்டுமென்பதற்காகத்தான் தமிழ்ச் சான்றோர்கள் நடத்திய அமைதி வழி கிளர்ச்சியின் அடிப்படையில் ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக் குழு தன் பணியை முடித்து அறிக்கையைக் கொடுத்திருக்கின்றது. இன்னும் இரண்டு மூன்று நாட்களில் நானும், கல்வி அமைச்சர் பேராசிரியரும், தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் டாக்டர் தமிழ்க்குடிமகனும் அமர்ந்து பேசி அந்த அறிக்கையைச் செயற்படுத்தும் திட்டத்தை வெகு விரைவிலே வெளியிடவிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

> ஒருவன், வாழ்வதற்காக உண்ண வேண்டும்;
>
> உண்பதற்காக வாழக் கூடாது.
>
> – பிராங்க்ளின்

ஆனால் ஆங்கிலமே இங்கே இருக்கக் கூடாதென்று சொன்னால் நான் பெருந்தலைவர் காமராஜருடைய கருத்தைத்தான் இங்கே சொல்ல விரும்புகிறேன். அண்ணா அவர்கள் தமிழகச் சட்டப்பேரவையில் முதலமைச்சராக அல்ல – எதிர்க்கட்சித் தலைவராகக் கூட அல்ல – தி.மு.க.வின் குழுத் தலைவராக – 15 சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தலைவராக அமர்ந்திருந்தபோது (அப்போது எதிர்க்கட்சித் தலைவர் வி.கே. ராமசாமி முதலியார்) கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் எம். கல்யாணசுந்தரம் அவர்கள் ஆங்கிலத்தை அறவே அகற்றிவிட்டு தமிழைத்தான் எல்லா இடங்களிலும் நீதிமன்றம் உட்பட இருக்க வேண்டுமென்று பலமாக வாதிட்டுக் கொண்டிருந்தார்.

பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சர். அவர் தன் இருக்கையிலே அமர்ந்தவாறே அண்ணாவையும் என்னையும் கையசைத்து அழைத்துச் சொன்னார். "இப்படியெல்லாம் பேசுறாங்களே, தமிழ்தான் இருக்க வேண்டும், ஆங்கிலம் கூடாது என்கிறாங்களே, நீங்களும் சேர்ந்துகிட்டு அதற்கு வக்காலத்து வாங்கிக் கிட்டிருக்கீங்களே, ஆங்கிலத்தை எடுத்து விட்டால் என்ன ஆகுங்கிறேன்? அந்த இடத்தில் இந்தி வந்து குந்திக்குங்கிறேன்" என்று இப்படியே சொன்னார். நாங்கள் மௌனமாகிவிட்டோம்.

பிறகு அவை முடிந்து வழக்கம்போல் அண்ணாவோடு நாங்கள் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது முன்னிருக்கையிலே இருந்த அண்ணா, "கருணாநிதி, எவ்வளவு பெரிய விஷயத்தை அவருடைய தமிழிலே எவ்வளவு சாதாரணமா சொல்லிவிட்டார். பார்த்தாயா?" என்றார். அதிலிருந்து காமராஜர் சொன்னது அண்ணாவிற்கும் பிடித்தது என்று தெளிவாகியது. ஆங்கிலம் போய் அந்த இடத்திலே ஒரு பள்ளம் ஏற்பட்டால் அந்த பள்ளத்தை நிரப்புவதற்கு இந்தி தயாராக இருக்கிறது. ஏனென்றால் அதுதான் இந்தியாவின் ஆட்சி மொழி. இப்பொழுது நிலை என்ன? இந்தியாவின் ஆட்சி மொழியாக ஆங்கிலமும் இருக்கிறது. அது அகற்றப்பட்டால் அந்த இடத்திலே இந்தி ஆதிக்கம் செலுத்தும். இந்தி ஆதிக்கம் செலுத்துமேயானால் மூதறிஞர் இராஜாஜி சொன்னதைப் போல தமிழன் இரண்டாந்தர குடிமகனாக ஆகிவிடுவான்.

### வளம் நிறைந்த தமிழ்மொழியை முதலில் ஆட்சி மொழியாக ஆக்குங்கள்

எல்லாவற்றிலும் தமிழ்தான். ஆங்கிலமே இங்கே இல்லை என்று அகற்றுகிற அந்தக்காலம் வரவேண்டுமேயானால் தமிழ்நாடு தமிழனுக்கு என்று ஆகியிருக்க வேண்டும் ஆக வேண்டுமென்று நீங்கள் கைதட்டுவது எனக்குப் புரிகிறது. ஆனால் பிரிவினை கேட்டால், தமிழ் நாடு கேட்டால் பத்தாண்டு தண்டனை என்று சட்டம் இருக்கிறது. அதை நினைத்துப் பார்த்து கைதட்டுங்கள். அதற்கு தயாராக எத்தனை பேர் என்ற கேள்வியையெல்லாம் தி.மு.க.விலேயே கேட்டுப் பார்த்தாகிவிட்டது.

சீனப் போர் வந்த நேரத்தில் அறிஞர் அண்ணா சிறையிலிருந்து விடுதலையாகி வேலூர் கோட்டைவெளி மைதானத்திலிருந்து பேசினார் "சீனப் போர் நடைபெறுகிறது. இந்திய நாடு பலமாக இருக்க வேண்டும். வீடு இருந்தால்தான் ஓடு மாற்ற முடியும். நாடு

தனக்கென்று வாழாது பிறர்க்கென்று வாழ்பவனே மனிதன்; அவனது வாழ்க்கையே வாழ்க்கை

— கி.ஆ.பெ. விசுவநாதம்

மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு.

— தந்தை பெரியார்

பிறர் குறையைக் காண்பவன் அரைமனிதன்
தன் குறையைக் காண்பவன் முழுமனிதன்.

— சாக்ரடீஸ்

இருந்தால்தான் அரசியல் பேச முடியும். ஆகவே நான் பிரிவினைக் கொள்கையை விட்டுவிட்டு சீனப் போரிலே நேருவின் கையை பலப்படுத்தப்போகிறேன்" என்று அண்ணா அறிவித்தார். இவைகள் எல்லாம் இந்தியா பலமாக இருக்க வேண்டும் என்பதற்காக.

இந்தியா பலமாக இருக்க வேண்டுமென்று சொல்கின்ற அதே நேரத்தில் ஒவ்வொரு மாநிலமும் உரிமையோடு வாழ வேண்டும். ஒவ்வொரு மாநில மொழிகளும் உரிமையோடு வாழ வேண்டும். மாநில மொழிகள் அத்தனையும் மத்திய ஆட்சி மொழிகளாக ஆக வேண்டும். தேசிய மொழிகள் அனைத்தும் மத்திய ஆட்சி மொழிகளாக வேண்டும். எல்லா மொழிகளும் உடனடியாக ஆக வேண்டுமா? அது சிரமம் அல்லவா? என்று கேட்டால் எல்லா வளமும் பெற்ற — இலக்கிய வளம், கவிதை வளம், காவிய வளம், இலக்கண வளம் எல்லாம் நிறைந்த எங்கள் தமிழை முதன்முதலாக இந்திக்கு அடுத்தபடியாக மத்திய ஆட்சி மொழியாக அமையுங்கள் என்றுதான் கேட்கிறோம். அதுதான் நம்முடைய முழக்கமாக இன்றைக்கும் இருக்கின்றது. அந்தக் காலத்திலே எல்லாம் தமிழ் என்கின்ற நிலையில் — தமிழுக்கு அன்றைக்கு வலுவேற்றிய வடலூர் வள்ளலாருடைய அந்த எண்ணமும் நிச்சயமாக நிறைவேறும் என்பதையும் எடுத்துரைத்து, இதிலே மிக முக்கியமாக வடலூரை அமிர்தசரஸ் போல ஆக்க வேண்டுமென்று சமுத்திரம் இங்கே இந்தக் கோரிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். அமிர்தசரஸாக அது ஆக வேண்டுமென்பதில் யாருக்கும் மறுப்பு இருக்க முடியாது. அது அமிர்தசரஸாகவும் ஆக வேண்டும். ஆனால் அமிர்தசரஸில் நடைபெற்ற காரியங்களும் — இங்கே நடைபெறாமல் இருக்க வேண்டும்.

### *வடலூரை ஒரு அழகான நகரமாக மாற்ற திட்டமிடுவோம்*

ஒரு நாளில் அமிர்தசரஸில் எத்தனை சீக்கியர்கள் அந்த ஆலயத்திற்குள்ளேயே மாண்டார்கள், மடிந்தார்கள் என்பது வரலாறு. ஆனால் இது ஜீவகாருண்ய திருத்தலம். அருட்பெரும் ஜோதி என்று அருள் ஒன்றுக்கேதான் இங்கே இடம் என்று போதித்த இடம். அப்படிப்பட்ட பெருமைக்குரிய பெருமகன் வள்ளலார் வாழ்ந்த இடம். அந்த இடத்தை வள்ளலார் கோட்டமாக ஆக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இருக்கின்ற தொன்மை வாய்ந்த அந்தக் கட்டடத்தை அப்படியே வைத்து, அந்த வடலூரை இன்னும் அழகான — கிராமமாக இப்போது இருப்பதை எதிர்காலத்தில் ஒரு அழகான நகரம் என்ற அளவிற்கு ஆக்குவதற்கு நாம் திட்டமிட்டு பணியாற்றுவோம் என்ற உறுதியை வள்ளலார் பெயரால் பேரவை அமைகின்ற இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

*— சென்னை கலைவாணர் அரங்கில் 11.7.99 அன்று வள்ளலார் மக்கள் நேயப் பேரவையைத் தொடங்கி வைத்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...* ●

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி—மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை—தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை—600 002.
தொலைபேசி:5368926/5368927/5364906

# கோ-ஆப்டெக்ஸ் -ன் நல்வாழ்த்துகள்

# அன்றும் இன்றும் என்றும் கோ-ஆப்டெக்ஸ்



கோ-ஆப்டெக்ஸ் ரகங்கள்:

- பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்
- லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்
- படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.


கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

★ இன்றே அருகில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்திற்கு வருகை தாரீர்.

தமிழரசு

பதிவு எண். M.8676
Licence No.TN/MS(C)/PP-23





பெரியார் நினைவு சமத்துவபுரம்
தேக்கலூர், கோவை மாவட்டம்





பெரியார் நினைவு சமத்துவபுரம்
அரும்பட்டு, விழுப்புரம் மாவட்டம்